# பேராளன்

# Peraalan




100th Anniversary Magazine

1914 - 2014

இலங்கை ஆசிரியர் சங்கத்துடன்
இணைந்த
வட மாகாண ஆசிரியர் சங்கத்தின்

## நூற்றாண்டு விழா சிறப்பு மலர்

இலங்கை ஆசிரியர் சங்கம்
வட மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராளன்

# *Peraalan*

இலங்கை ஆசிரியர் சங்கத்துடன்
இணைந்த
வட மாகாண ஆசிரியர் சங்கத்தின்

## நூற்றாண்டு விழா சிறப்பு மலர்

## 1914 - 2014

இலங்கை ஆசிரியர் சங்கம்
வட மாகாணம்.
*22.12.2014*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பேராளன் |
| மலர்க்குழு | : | திரு.தே.செந்தூரன்<br>திரு.செ. சிவசுதன்<br>திரு.திருஞானசேகரன்<br>திரு. மதியழகன்<br>திரு. ஆ.தீபன் தீலீசன் |
| பக்கங்கள் | : | xii + 65 |
| தாள் அளவு | : | B 5 |
| முதற்பதிப்பு | : | 2014 டிசெம்பர் |
| வெளியீடு | : | இலங்கை ஆசிரியர் சங்கம் |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | ஆ.தீபன் திலீசன் |
| பக்க வடிவமைப்பு, பதிப்பு | : | மெகா பதிப்பகம்<br>101, கண்டி வீதி,<br>கச்சேரியடி, யாழ்ப்பாணம் |

---

## Book Details

| | | |
|---|---|---|
| Name of Book | : | Peraalan |
| Editorial Committee | : | Mr. T. Senthooran<br>Mr. C. Sivasuthan<br>Mr. T.Thirugnasekaran<br>Mr. S. Mathiyalakan<br>Mr. A. Theeban Thelishan |
| Pages | : | xii + 65 |
| Page Size | : | B 5 |
| First Edition | : | 2014 December |
| Published by | : | Ceylon Teachers' Union |
| Front Page Design | : | A. Theeban Thelishan |
| Page Designing & Printing | : | Mega Printers<br>101, Kandy Road,<br>Near Kachcheri,<br>Jaffna. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA, TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

# ஆசிச்செய்தி



வடக்கு மாகாண ஆசிரிய சங்கமாக 1914ல் ஆரம்பித்து பின்பு இலங்கை ஆசிரியர் சங்கத்தோடு இணைந்த சங்கமானது தனது நூற்றாண்டு விழாவை இவ்வருடம் கொண்டாடுவது சிறப்புக்குரியது. அருஞ்செல்வமாம் கல்விச் செல்வத்தை எம் மாணவர்களுக்கு வழங்குகின்ற அரிய பணியானது தொடர்ந்து மென்மேலும் வளர்ச்சியடையவும் நூற்றாண்டை முன்னிட்டு வெளியிடப்படும் நூற்றாண்டு விழா மலராகிய "பேராளன்" மலர் சிறப்பாக அமைவும் எல்லாம் வல்ல இறைவனையும், பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க.

இறைபணியில்

ஜாக்ரத சைதன்யா
வதிவிட ஆச்சாரியார்
சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்.

Resident Acharyas: Br. Darshan Chaitanya, Br. Jagrat Chaitanya and Bramacharini Mahima Chaitanya
Committee: Mr. S. Mahenthiran (President), Mr. S. Balasubramaniam (Vice President), Mr. Lasantha Salgado (Secretary) Mr. M. Gopalakrishnan (Treasurer), Mr. T. Someswaran, Mr. P. Vimalendran, Mrs. M. Mody, Mrs. S. Duraiswamy, Mr. C. Rajadurai, Mr. S. Rajendran, Mr. K. Nadesan, Mr. S. Selvarajah, Ms. S. Sivagnanasunderam, Mr. T. Parthiban, Mr. K. Ketheeswaran, Ms. Sumathy Subramaniyam, Mr. Arun Jeyaprakash, Mr. K. Pirabakaran, Ms. Kala Amirthalingam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்த - வடமாகாண ஆசிரியர் சங்கம் தனது நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதையிட்டு பெரும் மகிழ்வடைகின்றேன். ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் நலனில் அக்கறை கொண்டு - தொழிற்சங்க ரீதியாக போராடும் - சமூக அக்கறை ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கு உண்டு. வடமாகாண ஆசிரியர் சங்கமானது பல கல்விமான்களினதும், முற்போக்கு சிந்தனை வாதிகளினதும் வழிகாட்டுதலில் வளர்க்கப்பட்ட சங்கம் என்பதை வரலாற்று வாயிலாக அறிய முடிகின்றது.

இந்த வரலாற்றினைப் பேணும் நோக்கில் அரிய பல தகவல்களைத் தாங்கிவரும் 'பேராளன்' எனும் நூலினை இலங்கை ஆசிரியர் சங்கம் வெளியிடுகின்றமை பாராட்டுக்குரியதாகும்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் இந்த நல்ல முயற்சியினைப் பாராட்டி, இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

*இறைபணியில்*

**அருட்திரு. ச.வசந்தன்**

*உதவிப் பங்குத் தந்தை,*
*யா/புனித அந்தோனியார் ஆலயம்,*
*பாசையூர்,*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண ஆசிரியர் தொழிற்சங்கத்தின் தோற்றத்தின் நூற்றாண்டு நிறைவினை இலங்கை ஆசிரியர் சங்கம் நினைவு கூறுவதையிட்டு மகிழ்வடைகிறோம்.

இச்சஞ்சிகை இதுவரை நாம் அறிந்திராத, வடபிரதேச தொழிற்சங்க போராட்டங்கள் பற்றிய புதிய செய்திகளை வெளிக்கொணருமென்ற எதிர்பார்ப்புடன் காத்துள்ளோம்.

1997இல் கைதுகளும் புதைகுழிகளும் மக்களை மௌனிக்க செய்திருந்த காலப்பகுதியில், சிவில் வெளியொன்றை தோற்றுவிக்குமுகமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக நாமும் இலங்கை ஆசிரியர் சங்கமும், இலங்கை வங்கியாளர் சங்கமும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் ஒன்றிணைந்து மேதினப் பொதுக்கூட்டமொன்றை நடாத்தி யிருந்தோம். அந்த நாள் தான் எங்களுக்கிடையிலான உறவின் தொடக்கப்புள்ளியாக இருந்திருக்க வேண்டும்.

ஆசிரியத் தொழிலை புனிதமான தொழிலென்று கூறுவோம். ஆசிரிய தொழிற் சங்கங்களும் புனிதமானவையாகவே இருக்க வேண்டுமென்ற பாரிய எதிர்பார்க்கையும் உள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கமானது நீண்டகாலமாகவே தனக்கென வகுத்துக்கொண்ட கொள்கை களின்று வழுவாது செயற்படுகிறது. அது அரசியற்கட்சிகள் உருவாக்கும் எழுச்சி அலைகளுக்குள் தன்னை அமிழ்த்திக் கொள்வதில்லை. எப்போதுமே ஆட்சியாளருடன் அனுசரித்துச் செல்ல வேண்டுமெனக் கூறுவதில்லை. இந்தத் தனித்தன்மை எங்களைக் கவர்த்திருக்கின்றது.

வெகுகாலத்துக்கு முன்பே பாரம்பரிய பிரதேசங்களில் வாழுகின்ற தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டவர்கள் என்ற வகையிலும், மிகப்பலம் கொண்ட ஆட்சியாளர்களின் காலத்தில் 1980 ஜீலை பொது வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டதோடு அதன் விளைவுகளையும் துணிச்சலுடன் எதிர்கொண்டவர்கள் என்ற வகையிலும், 1980க்களின் பிற்பகுதியில் சங்கத்தின் தென்னிலங்கை தலைவர்கள் வடக்கில் அஞ்ஞாதவாசம் செய்ய வேண்டியிருந்த போதும் - கொள்கைப்பிடிப்புடனிருந்தவர்கள் என்ற வகையிலும் இலங்கை ஆசிரியர் சங்கம் இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றில் மிகமுக்கியமான முற்போக்குப் பாத்திரத்தை வகித்துள்ளது.

இந்த சஞ்சிகை வெளியீடு அவர்களுக்கு மேலும் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. இச்சங்கமானது வடக்கிலே மிகவும் ஆழமாக கால் பதிக்க இத்தகைய முயற்சிகள் தொடரவேண்டுமென்பது எமது பேரவாவாகும்.

**திரு.S.தங்கராஜா**

*தலைவர்,*

*யாழ்ப்பாண பல்கலைக்கழக*

*ஊழியர் சங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி



இலங்கை ஆசிரியர் சங்கமாகப் பரிணமித்து நிற்கும் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவையொட்டி 22.12.2014 அன்று வெளியிடப்படும் "பேராளன்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி அளிப்பதில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

வடமாகாண ஆசிரியர் சங்கமானது 1914ல் உருவாக்கப்பட்டுப் பின்னர் இலங்கை ஆசிரியர் சங்கமாகப் பரிணமித்து ஆசிரியர்களின் நன்மைக்காக அயராது போராடிவருகின்ற ஒரு சங்கமாகும். அதுமட்டுமல்லாது ஏனைய தொழிற்சங்கங்களின் நியாயமான போராட்டங்களிற்கு தனது நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிவருகின்றது. மேலும் சுனாமி, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் உள்நாட்டுப் போர் காரணமாகவும் பாதிக்கப்பட்ட மக்களிற்கு மனிதாபிமான உதவிகளை உடனடியாகச் செய்துவருகின்றது.

இவர்களது நூற்றாண்டு விழா மலராக மலரும் "பேராளன்" நூலானது - ஆசிரியர்களின் பிரச்சனைகளிற்கு தீர்வு காண்பதற்காக நடத்திய போராட்டங்கள் பற்றிய விபரங்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சனைகள், அவர்கள் நல்லாசிரியர்களாகத் திகழ்வதற்கு அவசியமான ஒழுக்கக் கோவைகள் எனப் பல மிகவும் பிரியோசனமானதும் - தற்போதய காலத்தின் தேவையுமான ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

மலர் வெளியிடுவதென்பது இலகுவான விடயமல்ல, எனினும் எல்லாக் கஷ்டங்களையும் தாங்கி இவ்விதழாசிரியரும் அவரது குழுவினரும் வெற்றி பெற்றுள்ளார்கள். இவர்களது இம் முயற்சியினை மனதாரப்பாராட்டுவதோடு இலங்கை ஆசிரியர் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் பேராளர்களாக வர வாழ்த்தி நிற்கின்றேன்.

உங்களின் அர்ப்பணிப்பும் கடமையுணர்வும் சமூகத்தின் பால் உள்ள நேரிய கண்ணோட்டமும் மேலும் வளர்ச்சியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**அமிர்தலிங்கம் இராசகுமாரன்**
*தலைவர், ஆங்கில மொழி கற்பிக்கும் அலகு*
*தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வடமாகாண இலங்கை ஆசிரியர் சங்கம்' பற்றிய இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளரின் வரலாற்றுப் பார்வை..

## "ஒருங்கிணைந்து போராடினோம்"



1914 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்து கல்லூரி ஆசிரியர் நெவின்ஸ் செல்லத்துரை என்பவரின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண ஆசிரியர் சங்கத்துடன் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் வரலாறும் ஆரம்பமாகியது. இவ்வாறு தொடங்கப்பட்ட ஆசிரியர் சங்கம் தனது நீண்டகால சேவையுடன் வடமாகாண ஆசிரியர் சங்கமாக விசாலித்து இவ்வருடம் தனது பொன்விழாவைக் காணவுள்ளது. ஆசிரியர், மாணவர் தொடர்பான பிரச்சினைகளுள் மட்டும் தன் செயற்பாட்டை மட்டுப் படுத்திக்கொள்ளாது சமூகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்காக முற்போக்கான கருத்துக்களை முன்னெடுத்து இயங்கிய இந்தச் சங்கம் 1930 இல் வடமாகாண ஆசிரிய சங்மாகப் பரிணமித்தது.

ஆசிரியர்கள் பிரச்சினைகளை கையாண்டதுடன் அவர்களை வாண்மை மிக்க ஆசிரியர்களாக உருவாக்கவும், சுயமொழிக் கல்விக்கான பரப்புரைகளை மேற்கொண்டு-காலனித்துவ ஆட்சிக்கு எதிராகப் போராட்டத்தில் வடமாகாண சங்கம் தன்னை முற்போக்கான சங்கமாக நிலைநிறுத்திக் கொண்டது. இவ்வாறாக - செயற்பட்ட வடமாகாண ஆசிரியர் சங்கம் 1972 இல் இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து செயற்படத் தீர்மானித்தமை ஆசிரியர் சங்க வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாக அமைந்தது. தொடர்ந்து உத்வேகம் பெற்ற இலங்கை ஆசிரியர் சங்கம் துடிப்புடன் இயங்கி வந்தபோது - 1976 இல் வடமாகாண ஆசிரியர் சங்கத்துடன் முழுமையாக சங்கமித்தது. எனவே, வடமாகாண ஆசிரியர் சங்கத்தை நினைவுகூரும் வகையில் அதன் நூற்றாண்டு நிறைவு விழாவை கொண்டாட வேண்டிய கடப்பாடு இலங்கை ஆசிரியர் சங்கத்திற்கு உள்ளது.

1914 இல் முதலாம் உகை மகாயுத்தம் ஆரம்பமாகியது. இதை தொடர்ந்து வந்த நெருக்கடியான காலத்தில் கூடுதலான ஆசிரியர்கள் யாழ்ப்பாண ஆசிரியர்கள் சங்கத்தின் கீழ் அணிதிரள முன்வந்தனர். 1920 இல் தென்பகுதியில் இயங்கிய ஆசிரியர் சங்கங்களுடன் இணைந்து, அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கம் (All Ceylon Union of Teachers) எனும் ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு ஒன்று உருவாகுவதற்கு வடமாகாண ஆசிரிய சங்கம் முக்கிய பங்களிப்பு செய்தது. அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கம் முறைமையான கட்டமைப்பைக் கொண்டிராதபோதும் கீழ்மட்ட ஆசிரியர்களின் சம்பளம், ஓய்வூதியம் தொடர்பாக கூடுதல் கவனத்தைச் செலுத்தியது.

இந்த காலத்தில் உயர் தகைமைகள் மிக்க ஆசிரியர்கள் மிகவும் சொற்பளவான பாடசாலைகளிலே மட்டும் இருந்தனர். இவ்வாறு பெரும்பான்மை மக்களைப் புறந்தள்ளிவிட்ட கல்வி முறைமை காணப்பட்ட சூழலில் 1920 இல் கல்விச் சட்டத்தை கொண்டு வரவும், கல்வி ஆலோசனைகள் சபையை அமைக்கவும் அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கம் அழுத்தம் கொடுத்தது. இதன் விளைவாக 1927 இல் சட்ட சபையின் தெரிவுக்குழு, கல்வி ஆலோசனை சபை ஆகியவற்றின் பரிந்துரையின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கான முன்னோடி சம்பளத்திட்டம் அரசியலமைப்பினுள் சேர்க்கப்பட்டது. அந்த வருடத்திலேயே (School Teacher



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pension Ordinance) பாடசாலை ஆசிரியர்கள் நிலையியல் சட்டத்துக்கான பத்திரம் ஒன்று சட்ட சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆசிரிய ஓய்வூதிய சட்டமூலம் (School Teacher Pension Ordinance) சட்டக் கோப்பினுள் உள்வாங்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு பல்கலைக்கழக கல்லூரி நிறுவப்பட்டு பட்டதாரிகள் பாடசாலை அமைப்புக்குள் உள்வாங்கும் செயற்பாடு துளிர்விட்டது.

யாழ்ப்பாண ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து முன்னெடுத்த பரந்துபட்ட போராட்டத்தினால் 1925 ஆம் ஆண்டு கல்விச்சட்டம் உருவாக்கப்பட்டதுடன், அதனூடாக ஆகக் குறைந்த சம்பளத்தை சிபாரிசு செய்யக்கூடியதாக இருந்தமை இலங்கை ஆசிரிய சங்கம் தனது வரலாற்றில் பெற்ற முதலாவதாக வெற்றியாக அமைந்தது.

அரசியல் அடக்குமுறைகளுக்கிடையே சுதந்திர போராட்டத்தை முன்னெடுத்த மாணவர் இயக்கத்தின் அழைப்பின் பேரில், மகாத்மா காந்தி அவர்கள் 1927ம் ஆண்டு எமது நாட்டிற்கு வருகை தந்தார். மாணவர் இயக்கத்துடன் இணைந்து செயற்பட்ட அகில இலங்கை ஆசிரியர் சங்கம் 1932 ஆம் ஆண்டு மூவர்ணக் கொடியை யாழ்ப்பாணத்தில் ஏற்றி, புதுவருட கூட்டத்தை நடத்துவதில் முன்னின்றது. 1914ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆசிரிய சங்கமும் மாணவர்கள் இயக்கமும் இணைந்து உருவாக்கிய யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், மக்கள் இயக்கத்தின் இன்னுமொரு மைல் கல்லாக அமைந்தது. பிரித்தானியா அதன் அயல் நாடுகளின் வரலாற்றை பாடத்திட்டமாக்குவதற்கு பதிலாக இலங்கையினதும், உலகத்தினதும் வரலாற்றினை பாடத்திட்டமாக்குவதற்கான காரணங்களைச் சுட்டிக் காட்டியது. கல்வித் திணைக்களத்திற்கு அதை உள்வாங்குவதற்கு பின்பலமாக இருந்தது.

இவ்வாறான அரசியல் சிக்கல்களுடன் ஆசிரிய சங்கம் தனது சிந்தனைகளை மேலும் வியாபித்து ஒரு வருட ஆயத்தத்தின் பின் 1930 மாசி மாதம் 1ம் திகதி ஒன்று கூடி, இங்கிலாந்தின் NUT ஆசிரிய சங்கத்தை முன் மாதிரியாகக் கொண்டு 06 மாகாண சங்கங்கள் சமஷ்டி முறைமையிலான வியூகத்துடன் ஒன்றிணைந்து வடமாகாண ஆசிரியர் சங்கமாக மீளொழுங்கு செய்யப்பட்டது. மீளொழுங்கு செய்யப்பட்ட வடமாகாண ஆசிரிய சங்கம் தனது முதலமர்வை 1930 புரட்டாதி மாதம் 26ம் திகதி மேற்கொண்டது. 1930 ஆம் ஆண்டு வடமாகாண ஆசிரிய சங்கம் தனது வருடாந்த மாநாட்டை நடத்தி தனது புதிய யாப்பை உருவாக்கியது. கீழ்மட்டத்திலிருந்து பல்வேறு மட்டங்களில் கட்டியெழுப்பப்பட்டு உயர்ந்த சமஷ்டி அமைப்பாக உருவெடுத்தது. 1933 இல் கொண்டுவரப்பட்ட புதிய யாப்பு சங்கத்தின் புதிய ஆரம்பமாக இருந்தது. 1930 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இந்தியாவில் பரணாஸ் நகரில் நடைபெற்ற "பரந்துபட்ட ஆசிய கல்வி" மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தனது பிரதிநிதிகளை அனுப்புதற்கு உடன் நடவடிக்கை எடுத்தமை பாராட்டப்படக்கூடியது. நூற்றுக்கணக்கான இந்தியத் தலைவர்கள் மகாத்மா காந்தியின் உப்பு எதிர்ப்பு யாத்திரையில் பங்கு பற்றி வந்த நிலையில், இம்முக்கிய நிகழ்வில் இலங்கைப் பிரதிநிதிகளாக பங்குபெறும் சந்தர்ப்பத்தை வடமாகாண ஆசிரிய சங்கத்தைச் சேர்ந்தவர்களே பெற்றனர். அங்கு வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளால் இந்திய தலைவர்கள் நூற்றுக்கணக்கில் கைது செய்யப்பட்டனர். இவற்றை அனுபவத்தில் கண்ட வடமாகாண ஆசிரிய சங்க அங்கத்தவர்கள் மூன்று வாரங்களின் பின் மீளளிக்கவல்ல அனுபவமிக்க உயிர்த்துடிப்புடன் திரும்பி வந்தனர்.

வடமாகாண ஆசிரிய சங்கம் இந்த நாட்டினுள் ஆசிரிய தொழிற்சங்கத்தை மட்டும் கட்டியெழுப்ப எதிர்ப்பார்க்கவில்லை. புதிய சமூகத்தை உருவாக்கும் அறிவியலாளர்களின் மத்திய நிலையமாக இயங்க வேண்டும் என்பதிலும் பெரும் அக்கறையுடன் இருந்தது. இதற்கமையவே வடமாகாண ஆசிரிய சங்கம் தனது சுயசார்பு நிறுவனக் கட்டமைப்பை ஒழுங்குபடுத்தியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஊதிய தரங்களில் விகித அடிப்படையில் கொடுப்பனவு (சந்தா, அங்கத்தவர் கட்டணம்) செய்வோர் மூன்று பிரிவுகளாக இருந்தனர். இருப்பினும் சகல அங்கத்தவர்களின் உரிமைகள் சமமானதாக இருந்தது. வடக்கில் நடைமுறையிலிருந்த "ஓ" அளவை நீக்கிவிடும்படி கோரிக்கை விடுத்து கீழ்மட்ட ஊதிய தரங்களை உயர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதுமட்டுமன்றி ஆசிரியர்களின் தகைமை, தரங்களின் உயர்வுக்காகவும் செயற்படத் தவறவில்லை. அவற்றைப் பெறுவதற்காக சங்கம் விரிவுரை பாடத்திட்டங்களை ஆயத்தம் செய்ததுடன் கல்வி சம்பந்தமான ஆவணங்களைக் கொண்ட நூல்நிலையத்தையும் கட்டியெழுப்பியது. மேலும் பரந்த அறிவுசார் நிபுணத்துவமுடையவர்களை ஒழுங்குபடுத்திப் பயன்பெற திணைக்களத்தின் உயர் புலமை வாய்ந்தவர்களின் உதவியை பெறவும் நடவடிக்கை எடுத்தது.

1940 அளவில் வடமாகாண ஆசிரிய சங்கம் மற்றும் மாணவர் இயக்கம் முன்னெடுத்த போராட்டங்களின் பலன்கள் கிடைக்கத் தொடங்கின. இதனிடையே 1952இல் "யுனிவேசிட்டி கொலிஜ்" (University College) இலங்கைப் பல்கலைக்கழமாக மாறியது. கவனிப்பாரற்று இருந்த நகர, கிராம மத்திய மகா வித்தியாலயங்களை மீண்டும் கட்டியெழுப்பும் பணி ஆரம்பமானது. இலவசக் கல்வி கிடைத்த அதேவேளை தாய்மொழி மூலம் தமது உயர்க்கல்வியை கற்கும் சந்தர்ப்பம் கிடைக்காத மக்கள் தொகையில் ஒரு பகுதியினருக்கு கதவுகள் திறக்கப்பட்டதுடன், Cambridge Senior Examination 1942 இல் நிறுத்தப்படல், 1943க்கு பின்னர் London Matriculation Examination இல் குறிப்பிட்ட தகைமை பெற்றவர்களுக்கு இலங்கையின் Senior School Certificate பரீட்சையில் தோற்றும் சந்தர்ப்பம், ஆகியன காலனித்துவத்திலிருந்து மீளெழும் நடவடிக்கைகளாகக் கருதப்பட்டன. மேற்கூறிய பெறுபேறுகளைப் பெற வட மாகாண ஆசிரிய சங்கம் பல சிரமங்களை எதிர்நோக்கியதாக குறிப்பிடப்படுகிறது.

அதுபோன்று, பரீட்சை மீளொழுங்கு சம்பந்தமாக வட மாகாண ஆசிரிய சங்கம் தொடர்ந்து செயற்பட்டு வந்துள்ளது. 1941 இலிருந்து மத்திய பாடசாலை மாகாணப் பரீட்சைகள் நடத்தியதன் மூலம் மேற்படி ஆசிரிய சங்கம் ஒரு புதிய சூழலை உருவாக்கியது. எழுந்து வரும் சுதந்திர தேசியத்திற்கான இலக்கையும் வியூகங்களையும் உருவாக்க உதவுவது சங்கத்தின் இலக்குகளாக இருந்தன.

தெற்கின் ஆசிரிய சங்கத் தலைவர்களான எல்.ஆரியவன்ச, ஜயசூரிய, மேதானந்த மற்றும் முற்போக்கு தேசிய தலைவர்களுடன் இணைந்து மக்கள் முன்னெடுத்த மும்மொழி - கல்விமொழி, பிரஜைகளின் வாழ்வு, கலாச்சார தொடர்புக்காக வடமாகாண ஆசிரிய சங்கம் போராடியது.

தாய்மொழியிலான கல்வியை கொடுப்பதை விட ஆங்கில மொழியில் கல்வி கற்பிப்பது உயர்வானது என எண்ணும் காலகட்டத்தில் தாய்மொழிக் கல்விக்காக முன்னின்றமை வடமாகாண ஆசிரிய சங்கத்தின் முற்போக்கான செயலாகும். (இலங்கையின் முதலாவது கல்வி இயக்குனவ தனது உத்தியோக கடமையை ஆரம்பிப்பதற்கு முன்னர் Ceylon Journal Education சஞ்சிகைக்கு எழுதிய அனுபந்தத்தில் தாய்மொழி மூலக் கல்வியை கொடுப்பதற்கு பதிலாக ஆங்கிலத்தில் கல்வியைக் கொடுப்பது உயர்வானது என குறிப்பிட்டிருந்தார்) பேராசிரியர் J.A.ஜயசூரிய இந்த நாட்டின் கல்விச் சீர்த்திருத்தம் சம்பந்தமான தனது கொள்கைகளை முன்வைப்பதற்கு உதவிய கல்விமான்களிடையே வடமாகாணத்தைச் சேர்ந்த கல்விமான்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பை சிலாகித்து குறிப்பிட்டிருப்பதை நினைவு கூரல் மிகமுக்கியமானது. அதுபோலவே கு.நேசய்யா அவர்கள் எழுதி வெளியிட்ட "தாய்மொழியினூடாகக் கல்வி" என்னும் பிரசாரத்தையும் மிக முக்கியமானது என குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் J.A. ஜயசூரிய எழுதிய கட்டுரைகளில் சேர். பொன். அருணாசலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற தமிழ் தலைவர்களினதும் ஏனைய தமிழ் அறிஞர்களினதும் கருத்துக்கள் கல்வியின் முன்னேற்றத்துக்கு உதவியது எனக் கூறப்பட்டுள்ளது. சிங்கள மொழியைப் புறக்கணித்து இயங்குவதில் சிங்கள தலைவர்கள் ஈடுபட்ட போது - சிங்கள மொழிக்காகவும் சிங்கள மொழி மூல கல்விக்காகவும் தமிழ்த் தலைவர்கள் உழைத்தனர் என ஜயசூரிய தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அறிவாலும் கண்ணியத்தாலும் உயர்ந்தவராக காணப்பட்ட கு.நேசய்யா 40களில் பிள்ளைகளுக்கான தாய் மொழி மூல கல்வியை வலியுறுத்தி பரப்புரை செய்தார். தெற்கிலிருந்து ஆங்கில கல்விபெற்ற உயர் குழாத்தினர் தாய்மொழி மூல கல்வியை நிராகரித்து இதற்கு பாதகமாக இயங்கினர். இவ்வாறான சூழலில் வடமாகாண ஆசிரியர் சங்கம் தாய்மொழி மூல கல்வியை வலியுறுத்தி செயற்பட்டமை மிக பெறுமதியான செயற்பாடாகக் காணப்பட்டது. 1927 இன் கல்வி சட்ட திருத்தத்தின் பின்னர் 1939 இல் கொண்டுவரப்பட்ட "நிலையியல் கல்விச் சட்டங்கள்" தொடர்பாக வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் முற்போக்கான செயற்பாடுகள் போற்றப்படத்தக்கவை ஆகும்.

வடமாகாண கல்வியியலாளர்கள் தெற்கிலிருந்து தமது நண்பர்களின் ஆதரவுடன் கல்வி சார்ந்த குழுக்களில் சாட்சியமளித்ததன் மூலம் பல சாதகமான ஏற்பாடுகள் சட்டசபையில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஐக்கிய இராச்சியத்தின் பென்ஹாம் குழு வெளியிட்ட ஆசிரியர்சம்பள திட்டம் இலங்கை கல்வி முறையில் ஏற்படுவதற்கு வடமாகாண சபை முன்வைத்த தத்துவங்கள் வலுவான அடிப்படையை வழங்கின.

தேசிய மட்டத்தில் இலங்கைத் தமிழ் மக்களும் சமமான பிரசைகள் என்பதை வலியுறுத்தி வடமாகாண ஆசிரியர் சங்கம் பிரசாரத்தை முன்னெடுத்தது. தெற்கில் இனவாத அரசியல்வாதிகளின் தேவைகளுக்காக 1956 இல் உருவாக்கப்பட்ட தமிழ் எதிர்ப்பு இயக்கங்கள் தொடர்பாக வடமாகாண ஆசிரியர் சங்கம் தனது விசனத்தைத் தெரிவித்தது. சிங்களம் மட்டும் கொள்கையினால் சகல சிறுபான்மை இனங்களினதும் கௌரவம், அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட போது - இவ்வகையான செயற்பாடுகள் இன முரண்பாடுகளை வளர்க்கும் என வடமாகாண ஆசிரியர் சங்கம் கண்டித்தது. இது தொடர்பாக ஆணித்தரமான கருத்துக்களை முன் வைத்தவர்களில் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியவர் ஹண்டி பேரின்பநாயகம் ஆவர். தரப்படுத்தலால் தமிழ் மாணவர்கள் முகம் கொடுத்த பிரச்சினைகளுக்கும், மொழிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழுவுக்கு வடமாகாண ஆசிரியர் சங்கம் தன் முன்மொழிகளை வழங்கியதோடு அழுத்தம் கொடுத்து போராட்டத்தையும் முன்னெடுத்தது. பலாத்காரமாக கொண்டுவரப்பட்ட தரப்படுத்தலும், தனிச்சிங்கள கொள்கையும் இந்த நாட்டில் தமிழ் மாணவர்களுக்கு மட்டுமன்றி உயர் தகுதி பெற்ற சிங்கள மாணவர்களையும் பாதித்தது என வடமாகாண ஆசிரியர் சங்கம் எடுத்துக்காட்டியது. அத்துடன் அபிவிருத்தி அடைந்து வரும் இலங்கையில் பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கு உயர் கல்வியில் மாவட்ட கோட்டா மூலம் வாய்ப்பளிப்பது மிக அத்தியாவசியமானது என வடமாகாண ஆசிரியர் சங்கம் கூறியது. ஆயினும் புத்தாக்க திறன் மிக்க மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பை இது கெடுக்கக் கூடாதென அது வலியுறுத்தியது. அது மட்டுமன்றி க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் C சித்தி பெறுவோறுக்கு பல்கலைக்கழக வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென வடமாகாண ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியபோது சிங்கள உயர் குழாத்தினர் இது பற்றி அக்கறையின்றி இருந்தனர்.

இவ்வாறாக முற்போக்கு சிந்தனையுடன் போராட்டங்களை முன்னெடுத்த வடமாகாண ஆசிரியர் சங்கம் 1972 இல் இன்னொரு பாரிய முன்பாய்ச்சலை முன்னெடுத்த இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் ஒன்றாக இணைந்து வேலை செய்ய ஆரம்பித்தது. இரண்டு சங்கங்களினதும் கருத்துக்கள் ஒத்துப்போனதினாலேயே இது சாத்தியமானது. முன்னர் குறிப்பிட்டது போன்று 1972 இலிருந்து இணைந்து செயற்பட்ட சங்கங்கள் இரண்டும் 1976 இல் இன்னும் நெருங்கி ஒரு சங்கமாகி இலங்கை ஆசிரியர் சங்கம் என்ற பெயரில் இயங்க தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண ஆசிரியர் சங்கமாக ஆரம்பித்து வடமாகாண ஆசிரியர் சங்கமாக உருவெடுத்து, தொடர்ந்து இலங்கை ஆசிரியர் சங்கமாகி முன்னர் இரண்டு சங்கங்களாக இருந்தபோது தொழிற்பட்ட அதேவிதத்தில் இன்றும் ஆசிரியர்கள் பிரச்சினைகளை மட்டுமன்றி மாணவர்கள் மற்றும் வெகு ஜனங்களின் பிரச்சினைகளக்கும் கங்கொடுத்து போராட்டங்களை நடத்தி வருகின்றது.

இலங்கை ஆசிரியர் சங்கம் இனப் பிரச்சினை தொடர்பான தீர்வு தொடர்பில் ஓர் உறுதியான நிலைப்பாட்டில் அன்றிலிருந்து இன்றுவரை இருந்து வருகின்றது. இலங்கை ஆசிரியர் சங்கம், 1975 இல் நடந்த பேராளர் மாநாட்டில் முன்மொழிவை முன்வைத்து தொழிலாளர் மற்றும் விவசாய மக்களுடன் இணைந்து ஐக்கியமான வெகுஜனப் போராட்டத்தை நடத்த வேண்டுமெனும் முற்போக்கான தீர்மானத்தை நிறைவேற்றி அந்த தீர்மானத்துக்கு அமைய செயற்பட்டு வருகின்றது.

1977 இல் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்ததை தொடர்ந்து நாட்டில் விஸ்தரிக்கப்பட்ட இனவாத நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் பாரிய அழுத்தங்களுக்கு உள்ளாகினர். இந்த சூழலில் 1977 இல் யாழப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த 20வது பேராளர் மாநாட்டில் இலங்கை ஆசிரியர் சங்கம் இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டுமெனும் தீர்மானத்தை முன்வைத்து நீண்ட விரிவான கலந்துரையாடலை நடாத்தியது. இதன் பின்னர் 1978 இல் காலியில் நடந்த 21வது பேராளர் மாநாட்டில் இனங்களின் சுயநிஉணய உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனும் தீர்மானத்தை பி.யு.காதர் முன்மொழிய தோழர் எச்.என்.பெர்ணான்டோ வழிமொழிய அத்தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத்தீர்மானம், இனப்பிரச்சினை தொடர்பில், ஒரு தொழிற்சங்கம் முதன் முதலாக முன்வைத்த ஓர் உறுதியான, முன்மாதிரியான நிலைப்பாடாகும்.

இலங்கை ஆசிரியர் சங்கம் வெகுஜனங்கள் தொடர்பான சகல பிரச்சினைகளையிட்டும் போராட்டங்களை முன்னெடுப்பதால் பல திசைகளிலிருந்தும் வந்த அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. தோழர் எச்.என். பெஉணான்டோ எதிர்நோக்கிய பாரிய அழுத்தங்களினால் - பாதுகாப்பு கருதி சென்ற இடமாக யாழ்ப்பாணம் இருந்தது. அவ் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் வடமாகாணத்தில் தோழர்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தை முன் கொண்டு செல்வதற்கு நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது. அங்கு அவர் சுகவீனமுற்ற வேளையில் அவரை பாதுகாத்து பராமரித்தவர்கள் யாழ்ப்பாணத் தோழர்களே. தற்போதைய அரசாங்கம் யுத்தம் முடிந்த பின்னர் மக்களுக்கு ஆறுதல் வழங்குவதற்கு மாறாக கல்வித்துறையில் மட்டுமல்லாது தமிழ் பிரதேசங்களை இராணுவ மயப்படுத்தும் செயலில் ஈடுபட்டிருப்பது பெரும் பிரச்சினையாக உள்ளது. உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பலாலி ஆசிரியர் கல்லூரி உட்பட பல கல்வி வளங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கும் சூழலில் கல்வி முறைமையை சுதந்திரமாக ஆக்குவது எமக்குள்ள பாரிய சவாலாக உள்ளது. கல்வியில் மட்டுமன்றி சமூகத்தினர் சகல துறைகளிலும் ஜனநாயத்தை வென்றெடுப்பதற்காக. கடந்த காலத்தில் வடமாகாண ஆசிரியர் சங்கம் முன்னெடுத்த போராட்டங்களை ஒரு பாடமாக கொண்டு முன்னோக்கி செல்வதை எங்கள் பொறுப்பாக எடுத்து இந்த நூற்றாண்டைக் கொண்டாடு கின்றோம்.

இந்த நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்த முன்வந்து செயற்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வட மாகாண தோழர்களுக்கும் ஆதரவளித்த சகலருக்கும் எமது நன்றிகள்

**ஜோசேப் ஸ்ராலின்**
*பொதுச் செயலாளர்,*
*இலங்கை ஆசிரியர் சங்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறப்பது நன்றன்று ....

'பேராளன்' இன்று வடமாகாண ஆசிரியர் சங்கத்தினதும், இலங்கை ஆசிரியர் சங்கத்தினதும் சிறப்பியல்புகளோடு - சிறப்பான பல அம்சங்களை தாங்கி ஒரு வரலாற்று மலராக வெளிவந்திருப்பது எமது சங்க உறுப்பினர்களுக்கும் கல்விப்புலம் சார்ந்த ஆர்வலர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் ஒரு விடயமே. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் ஜோசப் ஸ்ராலின் அவர்களின் தலைமையில் இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்களினதும், மலர்க்குழுவினதும் முயற்சியால் வெளிவந்திருந்தாலும் இதற்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்களையும் நாம் எளிதில் மறந்துவிடமுடியாது.

அந்தவகையில் - இந்நூலிற்கு ஆசிச் செய்திகளை வழங்கியுள்ள மதத் தலைவர்களுக்கும், வாழ்த்து செய்திகளை வழங்கிய - எம்மோடு கரம்கோர்க்கும் சகோதர சங்கத்தினருக்கும் எமது நன்றிகள். தற்காலத்தில் எத்தனையோ நூல்கள் வெளிவந்தாலும் காலத்தின் தேவை கருதி இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்த வடமாகாண ஆசிரியர் சங்கம் தொடர்பான இந்நூலினை சிறப்பாக வெளியிட மூலகாரணமாக இருந்து - சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி - எம்மை சிறப்பாக வழிநடத்திய சங்கத்தின் முன்னாள் யாழ்.மாவட்ட செயலாளரும் மூத்த உறுப்பினருமான தோழர் வே.சிவராஜா அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இந்நூலிற்கு சிறப்பான ஆக்கங்களைத் தந்து, நூலினை சிறப்பித்த எழுத்தாளர்கள் அனைவருக்கும், நூல் வெளிவர பிரதானமாக இருந்த விளம்பரதாரர்கள் அனைவருக்கும் சிறப்பான நன்றிகள். இந்நூலை மிகவும் சிறப்பாக ஒழுங்குபடுத்தி வடிவமைத்து, அச்சிட்டு தந்த "மெகா பதிப்பகம்" அச்சகத்தாருக்கும், எமக்கு சிறப்பான உதவிகளை வழங்கிய எமது சங்கத்தின் தோழர்கள் அனைவருக்கும் மற்றும் மலர்க்குழு உறுப்பினர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றிகள்.

இவற்றை விடவும் - எமது நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பான முறையில், தமது கல்வியியல் கருத்துக்களை வழங்கிய மூத்த கல்வியியல் பேராசிரியர் திரு.மா.சின்னத்தம்பி அவர்களுக்கும், தொழிற்சங்க கருத்துக்களை வழங்கிய அரசியல் ஆய்வாளர் திரு.நிலாந்தன் அவர்களுக்கும், எமது இந்த நூல் தொடர்பான ஆய்வுரையை வழங்கிய பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.ஈ.குமரன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இவை தவிர - நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும், நாம் நன்றி தெரிவிக்கத் தவறியவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

**- மலர்க்குழு -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

ஜனநாயகத்தை
வென்றெடுப்பதற்காக,
சமூக அக்கறையுடன்
போராடி மறைந்த,
அனைத்து ஆசிரிய
தொழிற்சங்கத்
தோழர்களுக்கும்
இந்நூலைச்
சமர்ப்பணமாக்குகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ....


| | பக்கம் |
|---|---|
| ஆசிரிய தொழிற்சங்கம் | 1 – 4 |
| தேசிய கனத்துவத்தை நோக்கி ஈழம் போடும் ஏறுநடையில் வடபகுதிக் கல்வியாளரின் பங்கு | 5 – 8 |
| தேசிய கல்விமுறை உதயம் (வடமாகாண ஆசிரியர் சங்கம் - 1948 - 1960) | 9 – 14 |
| பரி.யோவான் கல்லூரியில் உரிமைப்போர் | 15 – 18 |
| கல்வியும் இனமுரண்பாடும் | 19 – 22 |
| மும்மொழித்திட்டம் : மெய்யான தீர்வா? கற்பனா வாதமா? | 23 - 26 |
| அமரர் ஹண்டி பேரின்பநாயகம் | 27 – 30 |
| **The Northern Educators play Their Part in Sri Lanka's Journey to Nationhood** | 31 –33 |
| **Achievement of the NPTA** | 34 – 35 |
| ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் | 36 – 51 |
| Teachers and Job Security | 52 – 56 |
| ஆசிரியர்களுக்கான புதிய சுற்றறிக்கைகளும் சாதக பாதகங்களும் | 57 – 63 |
| ஓய்வுதியக் கிடைப்பனவுகள் | 64 – 65 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரிய தொழிற்சங்கம்

வே. சிவராசா

ஆசிரியர் அனைவருக்கும் ஒரே தொழிற்சங்கம் அமைய வேண்டும் என்ற குரல் அவ்வப்போது பல பெரியார்களாலும், கல்விமான்களாலும், ஆசிரிய சங்கத் தலைவர்களாலும், முன்வைக்கப்பட்டு வந்தபோதும், இன்றுவரை அது நிறைவேறவில்லை.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தோற்றமானது. இம்முயற்சியின் ஒரு பேறாகவே உருவானதாகும். இதனால் "விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் சங்கம்" எனும் பெயர் இலங்கை ஆசிரியர் சங்கம் பெயர் மாற்றப்பட்டது எனினும் பல்வேறு பிரிவுகளின் அடிப்படையில் பல ஆசிரியர் சங்கங்கள் தற்போது இயங்கிவருவதனையே நாம் காண்கின்றோம். எனவே ஆசிரியர் சங்கங்களின் வளர்ச்சி பற்றிச் சிறிது நோக்குவோம்.

20ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் மதச்சார்பு உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளே பெரும்பாலும் செயற்பட்டன. இவை மதச்சபைகளின் முகாமையாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. சில தனியார் பாடசாலைகளும் இயங்கின. இதனால் ஆசிரியர்கள் மத்தியில் தொழில்சார் ஒருமைப்பாடுகள் இருக்கவில்லை. பாடசாலைகளிலும் ஒரே சீரான நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படவில்லை. ஆசிரியர்களுக்கு வேறுபட்ட பலதரங்களிலும் மிகக் குறைந்தளவு வேதனமே வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையிலேயே பலபாடசாலை ஆசிரியர்கள் ஒன்றுகூடி தமது பாடசாலைகளில் நிலவிய பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடத் தொடங்கினர். இவ்வாறே ஆசிரியர் தொழிற் சங்கங்கள் ஆரம்பமாகின. பல பிரதான நகரங்களில் ஆசிரியர் சங்கங்கள் தோற்றம் பெற்று செயற்படத் தொடங்கின.

வடமாகாணத்தில் ஆசிரியர் சங்கம் தோற்றம் பற்றி சிறிது நோக்குவோம்.

1914இல் திரு நெவின்ஸ் செல்லத்துரை என்பவரது தலைமையில் யாழ் இந்துக் கல்லூரியில் கூடிய ஆசிரியர்கள், யாழ்ப்பாண ஆசிரியர் சங்கத்தைத் தோற்றுவித்தனர். இச்சங்கம் -ஆரம்பத்தில் பொதுநல அமைப்புப் போல பாடசாலைகளில் நிலவிய மாணவர் வரவு, ஒழுங்குபற்றியும், பெற்றோர் ஆசிரியர் முரண்பாடுபற்றியும், ஆசிரியர்க்கு வழங்கப்பட்ட மிகக் குறைந்த வேதன வேறுபாடு பற்றியுமே கவனம் செலுத்தியது.

இக்காலத்தில் கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களின் ஆசிரியர் பிரதிநிதிகள் ஒன்று கூடி ACUT என்ற அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தை 1920இல் தோற்றுவித்தனர். யாழ்ப்பாண ஆசிரியர் சங்கம் இவ்வாண்டு தனது தனித்துவத்துடன் அகில இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் சங்கத்தின் ஒரு பிரிவாக இணைந்து செயற்படத் தொடங்கியது.

1920 இல் அரசாங்கத்தினால் கல்விச்சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் "கல்விச்சபை" தோற்றிவிக்கப் பட்டது. இதில் சட்டசபையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் இடம்பெற்றனர். அகில இலங்கை ஆசிரியர் சங்கம் பல முன் மொழிவுகளை இச்சபைக்கு முன்வைத்தது அக்காலத்தில் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே பாட சாலைக்கு உதவி நன்கொடை வழங்கப்பட்டு வந்தது. 1924 இல் நிறைவேற்றப்பட்ட கல்விக் கோவை "Educational Code" மூலம் மாணவர் வரவின் அடிப்படையில் வேதனம் வழங்கப்படத் தொடங்கியது. எனினும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட வேதனம் மிகக்குறைவாகவே காணப்பட்டது. கல்விச் சபையானது ஆசிரியர்களின் அதிகுறைந்த சம்பளத்தை தீர்மானித்தது. அவர்கள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உரித்துடையவர் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவைகள் 1927 இல் உருவாக்கப்பட்ட புதிய கோவையில் இடம்பெற்றது. எனினும் சங்கம் முன்வைத்த ஆசிரியர்க்கான விதவை, அநாதைகள், ஓய்வூதியம் (WNOP) வழங்கப்பட வில்லை. ஆசிரியர் சங்கத்தின் தொடர்ச்சியான நீண்ட கால போராட்டம் மூலம் இது 1951 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

குறிப்பிட்ட செயற்பாடுகளினால் யாழ்ப்பாண ஆசிரியர் சங்கம் - கல்விமான்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட ஒன்றாக வரத்தொடங்கியது. அக்காலத்தில் மேற் கொண்ட பல உத்தியோக பூர்வ செயற்பாடுகள் ஆசிரியர் சங்கம் மேலும் வளர்ச்சிபெற உந்துதல் அளித்தன.

யாழ்ப்பாண ஆசிரியர் சங்கம் 1930 இல் தனது விதிமுறைகளை மாற்றிய மைத்தது. அக்காலத்தில் பிரித்தானியாவில் இருந்த தேசிய ஆசிரியர் சங்கம் (N.U.T) வடிவத்தில் ஒரு கூட்டுச்சபை போன்று யாழ்மாவட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய ஆறுகிளைகளைக் கொண்ட ஒரு சங்கமாக மிளிரத் தொடங்கியது. தனது பெயரையும் வடமாகாண ஆசிரியர் சங்கம் NPTA என மாற்றிக் கொண்டது. அகில இலங்கை ஆசிரியர் சங்கம் இவ்வாறு அமையப்பட வேண்டும் எனக் கோரியது. அதற்கான விதிமுறைகளை ஆக்கிச் செயற்படும் பொறுப்பு வட மாகாண ஆசிரியர் சங்கத்திடமே 1930 இல் ஒப்படைக்கப்பட்டது. 1933 இல் அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்டது. அகில இலங்கை ஆசிரியர் சங்கம் (ACUT) ஒரு பாரிய தேசிய கூட்டுச்சங்கமாக வளரத்தொடங்கியது. இச்சங்கம் ஏனைய நாட்டு ஆசிரியர் சங்கங்களுடன் குறிப்பாக இந்தியாவுடன் தொடர்பை ஏற்படுத்தலாயிற்று. 1930 டிசெம்பரில் பெனாறிஸ்ரில் நடந்த ஆசிய கல்விமகா நாட்டுக்கு வடமாகாண ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் ஒருங்கிணைந்து பிரதிநிதிகளை தெரிவு செய்து சிறப்பான முறையில் ஒழுங்குகளை மேற்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து காலத்துக்குக் காலம் சர்வதேச ரீதியாக கல்வி மகா நாடுகளில் பிரதிநிதிகள் பங்குபற்றி வந்தனர். Tokyo, Malasiya, China, Russia, England. போன்ற நாடுகளுக்கு பிரதிநிதிகள் சென்றதுடன் வெளிநாட்டுக் கல்விச்சங்கம் பிரதிநிதிகளுடன் வட மாகாண ஆசிரியர் சங்க மாநாடுகளும் சமூகமளித்துள்ளனர். இதன் மூலம் தொழில்சார் அறிவு வளர்ச்சியையும் தொடர்புகளையும் மேம்படுத்தி வட மாகாண ஆசிரியர் சங்கம் ஒரு பிரபல்யமான தொழிற்சங்கமாக அகில இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து முன்னேறத் தொடங்கியது. சங்கம் இவ்வாறு செல்வாக்குடன் வளர்வதற்கு அன்று நிலவிய அரசியல், சமூக வழிப்புணர்வும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. இந்தியாவில் ஏற்பட்ட சுதந்திர உணர்வும் சமூகமேம்பாட்டு உணர்வும் ஆங்கிலக் கல்வி பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தவர் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

வட மாகாண ஆசிரியர் சங்கத்தை 1930 களில் வளர்த்தெடுத்த முக்கியஸ்தர்கள் பேராசிரியர் கு.நேசையா ஒருவராவார். அவர்சங்கம் பற்றிக் குறிப்பிடுகையில்– “வடபகுதியிலே நாம் கட்டியெழுப்ப விழைந்தது வெறும் தொழில்சங்கமல்ல. ஒரு புதிய சமுதாய அமைப்புக்கு கருவியாக விளங்கக் கூடிய ஒரு தொழிலையே கட்டி எழுப்ப முனைந்தோம். “வட மாகாண ஆசிரியர் சங்கத்தின் கட்டுக் கோப்பே இதற்குச் சான்றுபகரும்” என்று கூறியுள்ளார்.

இதுபற்றி சிறிதுநோக்குவோம், 1920 களில் யாழ்ப்பாணத்தின் ஹன்டி பேரின்ப நாயகம் போன்ற இளம் ஆசிரியர்களும், முன்னனிக் கல்லூரி மாணவர்களும் யாழ்ப்பாணக் கல்லூரியில் சந்தித்து யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸை தோற்றுவித்தனர். தொடக்கத்தில் சமூக சீர்திருத்தங்களை முன்னெடுப்பதிலுமே இவ்வமைப்பு கவனம் செலுத்தியது. மகாத்மா காந்தியின் இலங்கை வருகையுடன் வட இலங்கையில் ஒரு புது உத்வேகம் வளரலாயிற்று. மாணவர் காங்கிரஸ் பின்பு அதனை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசாக பெயர் மாற்றி நாட்டின் சுதந்திரத்திற்காக முதன் முதல் குரலெழுப்பி வந்தனர். இதுவே இலங்கையில் தோன்றிய முதலாவது முற்போக்கு அமைப்பாகும். இவர்கள் தென்னிலங்கை முற்போக்கு தலைவர்களுடன் தொடர்பு ஏற்படுத்தியதால் அவர்களும் இவ்வமைப்பை ஆதரித்து செயற்பட்டனர்.

1932 ஏப்ரல் புதுவருடத்தன்று இளைஞர் காங்கிரஸ் தொண்டர்களின் சார்பில் ஓர் ஆசிரியர் யாழ்ப்பாண முற்றவெளியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் சிவப்பு, பச்சை, மஞ்சள், ஆகிய மூவர்ண நிறங்களைக் கொண்டு இலங்கையின் சுதந்திரக் கொடியொன்றை ஏற்றிவைத்தமை இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். இவ்வர்ணங்கள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், என்ற மூவினத்தவர்களையும் பிரதிநிதுத்துவப்படுத்தியது. இது தேசிய இனங்களின் ஐக்கியத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. அன்று பெரும்பான்மை, சிறுபான்மை, என்ற எண்ணம் அற்று தேசிய இனங்களின் ஐக்கியத்தின் அடிப்படையிலேயே நாட்டின் சுதந்திரம் அமைய வேண்டும் என்பதை வற்புறுத்துவதாக இச்சம்பவம் அமைந்தது. எனவே ஆசிரியர் சங்கங்கள் ஆசிரியர் கல்விப் பிரச்சனைகளை மட்டுமன்றி சமூகத்தை வழிப்படுத்தும் சிற்பிகளாக செயலாற்றி வந்துள்ளனர். அக்காலத்தில் ஜனநாயகத் தன்மையே அடியாதாரமாக விளங்கியதை யாவரும் அறிவர் இத்துறையில் பல அதிபர்களும் ஆசிரியர்களுமே ஈடுபாடு கொண்டு வளர்த்தெடுத்தமை. வரலாறு ஆகும். அதிபராக விளங்கிய திரு.க.வீரசிங்கம் இதில் பெரும் பங்காற்றியமையால் இன்றும் அவர் பெயரில் வீரசிங்கம் மண்டபம் நிலைத்திருப்பதை அறிகின்றோம்.

ஒரு குழந்தையின் கல்வி வளர்ச்சி தன் தாய்மொழி மூலமே வழங்கப்பட வேண்டும். அதனூடாகவே மாணவரின் கல்விமேம்பாடு துரிதவளர்ச்சி பெறும் என்பது சர்வதேசத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடாகும். ஆயின் – இலங்கையை பொறுத்தவரையில் பிரித்தானிய குடியேற்ற வாத கல்வி முறையே எமக்கு வழங்கப்பட்டது. போதனா மொழி ஆங்கிலமாகவே இருந்தது. சுயமொழிக் கல்விக்கு இடமளிக்கப்பட்டு இருந்தபோதும் அது செல்வாக்கு போலவே நடைமுறையில் இருந்தது. சுதந்திர உணர்வு வளர்ந்து வந்த காலத்தில் தாய்மொழிக் கல்வி போதனா மொழியாக இருக்க வேண்டும் என வடமாகாண ஆசிரியர் சங்கம் சார்பில் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்திற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டது பலரும் அதில் அசிரத்தை காட்டினர் எனினும் பேராசிரியர் நேசையா போன்றவர்கள் இதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தை உறுதியாக முன்னெடுத்தனர். பேறாக காலப்போக்கில் சிங்களம், தமிழ் என்பன போதனா மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தென்னிலங்கையிலும் ஆரியவன்சா, ஜெயசூரியா, பெத்தானந்தா, போன்றவர்கள் இதற்காக போராடியது குறிப்பிடத்தக்கது. இவ்வாறே கன்னங்கரா வினால் இலவசக்கல்வி இந்நாட்டில் கொண்டுவருவதற்குப் ஆசிரியர் சங்கங்களே குரல் கொடுத்து வந்தன.

வட மாகாண ஆசிரியர் சங்கத்தின் இன்று சில முக்கிய பணிகள்ஆவன ஆசிரியர்களுடைய நிதிச்சங்கத்தை தொடக்கி அவர்களுக்கு வழக்கு மேம்பாட்டை அளித்தனர். பரீட்சை சபை ஒன்றை தோற்றுவித்து மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக சிறந்த முறையில் சங்கம் நடாத்தி வந்தது. இதன் பேறாக 1941 இல் J.S.C. என்ற மத்திய திணைக்களப் பரீட்சை நிறுத்தப்பட்டு பிரதேச வாரியான ஒரு புதிய முறை பரீட்சையை பாடசாலைகளின் ஒத்துழைப்புடன் ஆசிரியர் சங்கம் நடத்த ஆரம்பித்தது. இம் முன்மாதிரியை பின்பற்றி கொழும்பு ஆசிரியர் சங்கம் போன்ற, வேறு ஆசிரியர் சங்கங்கள், பிரதேசங்களில் பரீட்சைகளை நடத்த ஆரம்பித்தது. வடமாகாண ஆசிரியர் சங்கம் ஏனைய சங்கங்களுடன் முற்போக்கான தேசிய தலைவர்களுடனும் தோளோடு தோள்நின்று கல்விப்பிரச்சனைக்கும், தேசியபிரச்சினை களுக்கும் முகங்கொடுத்து செயற்பட்டு வந்தது.

* * *



யாழ்ப்பாணத்தில் மகாத்மா காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய கனத்துவத்தை நோக்கி ஈழம் போடும் ஏறுநடையில் வடபகுதிக் கல்வியாளரின் பங்கு

கு.நேசையா
வ.மா.ஆ. சங்கத்தின் முன்னோடி

முதலாம் உலகப்போரின் ஆரம்ப காலத்தில் 1914ம் ஆண்டளவில் நீண்ட காலத் துன்பங்களுக்காளாயிருந்த வடபகுதி ஆசிரியர், யாழ். ஆசிரியர் சங்கத்தின் கீழ் ஒன்று திரண்டனர். ஆறு ஆண்டுகளின் பின் (1920) அவர்கள் தென்னிலங்கையிலுள்ள இதர சங்கங்களுடன் ஒன்றிணைந்து அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தை உருவாக்கினர். வடபகுதிச் சங்கமும் அ.இ.ஆ. சங்கமும், ஆசிரியரின் சம்பளங்கள், ஓய்வூதியங்கள் பற்றி மட்டும் பிரதானமாகச் சிரத்தையெடுத்து வந்தன. அவ்வப்போதைய பிரச்சினை தீர்க்கும் ஒரு தளர்வற்ற அமைப்பைக் கொண்டவையாக மட்டுமே இருந்தன. 1924ம் ஆண்டுக் கோவையின்படி மாணவர் பரீட்சை முடிவுகளைக்கொண்டு உதவி நன்கொடை வழங்கும் முறைக்குப் பதிலாக மாணவர் வரவை அடிப்படையாகக் கொண்டு வழங்கும் முறை ஏற்பட்ட பின்னரும் ஆசிரியரின் சம்பளம் மிகக்குறைவாகக் காணப்பட்டதுடன் பெரிய பாடசாலைகளுக் குட்படப் பல பாடசாலைகளில் தகுதி வாய்ந்த ஆசிரியர் குறைவாகவே காணப்பட்டனர். இந்நிலையில் 1920ம் ஆண்டில் நிறை வேற்றப்பட்ட கல்விச் சட்டம் கல்வி ஆலோசனைச் சபையொன்றை உருவாக்கி அச்சபையும், சட்டசபையால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவும் ஆசிரியருக்கான குறைந்த பட்டச் சம்பளத் திட்டமொன்றை உருவாக்கியது. 1927 இல் உருவாக்கப்பட்ட புதியகோவை இவற்றை உள்ளடக்கின.

## ஒரு புதிய ஆரம்பமும் புதிய இலட்சியங்களும்

இக்காலக் கட்டத்திலேயே ஒரு புதிய உதயத்துக்கான ஒளிப்பிழம்புகள் வடதிசை வானிற் பிரகாசிக்க ஆரம்பித்தன. காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்திய சுதந்திரப் போராட்டம் வடபகுதியில் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியது. யாழ்.மாணவர் காங்கிரஸ் 1931 ஏப்பிரல் மாதம் நடைபெற்ற ஏழாம் பருவ மகாநாட்டிற் தனது பெயரை வாலிபர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றி, பெருமளவுக்கு ஆசிரியரால் வழி நடத்தப்பட்டு வந்த உற்சாகமற்ற இயக்கத்தில் தீவிரத்தை ஏற்படுத்தியது. எனினும், இது பெருமளவுக்கு கலாசார மறுமலர்ச்சி, அரசியல் விடுதலை ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்ட மாணவர் இயக்கமாகவே இருந்தது. ஆனால் 1927 இல் மாணவர் காங்கிரசின் அழைப்பின் பேரில் மகாத்மாகாந்தி இலங்கைக்கு வருகை தந்த பின்னர் இயக்கத்திற்கு வெகுஜன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாதரவு கிடைத்தது. இவர்கள் 1932 சித்திரைப் புத்தாண்டன்று இரு ஆசிரியர்களின் இலங்கையின் சுதந்திரப் பிரகடன அழைப்பின் பேரில் மஞ்சள், சிவப்பு, பச்சை ஆகிய மூவர்ணக்கொடி ஒன்றை யாழ்.முற்றவெளியில் ஏற்றத் துணியவில்லையா? இவ்வியக்கத்தினால் இன்னோர் கிளை விளைவாக யாழ். இலங்கை வரலாற்றுச் சங்கம் உருவாக்கப்பட்டது. இச்சங்கம் பிரித்தானியாவினதும் அதன் அயல்நாடுகளினதும் வரலாற்றைக் கற்பதற்குப் பதிலாக, இலங்கையின் வரலாற்றைக் கற்க வேண்டுமென வலியுறுத்தியது. சில ஆசிரியராலும் மாணவராலும் நிறுவப்பட்ட இச்சங்கம் உருவாக்கிய பாட விதானத்தைக் காலப்போக்கில் கல்வித் திணைக்களமும் ஏற்றுக்கொண்டது. ஆசிரியரின் தலைமை காரணமாகக் கூட்டுறவு இயக்கமும் வடபகுதியில் வேர் விட்டுக் கிளை பரப்பும் வகையில் வளர்ந்தோங்கியது. இவ்வாறே ஓராண்டு ஆரம்ப வேலைகளுக்குப் பின்னர் யாழ்ப்பாண ஆசிரியர் சங்கம் பெப். 1930 இல் கூடி தமது சங்கத்தை வ.மா.ஆ. சங்கமெனப் பெயர் மாற்றி நிறுவி இங்கிலாந்திலுள்ள தேசிய ஆசிரியர் சங்க அமைப்பு அடிப் படையில் 6 பிரதேசங்களை உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்பாக 27 செப். 1930 இல் மாறியது. ACUT யும் இவ்வித அடிப்படையில் அமைக்கப்பட வேண்டுமென்ற ஆலோச னையை எதிர்க்கமுடியாத ACUT. 1930 இல் நடந்த வருடாந்தக் கூட்டத்தில் புதிய வ.ம.ஆ. சங்கத்திடம் ஒப்படைத்தது. 1933 இல் இவ்வமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், ACUT ஒரு பாரிய கூட்டுத் தேசிய நிறுவனமாக வளர ஆரம்பித்தது. 1930 டிசெம்பரில் பெனாரிசில் நடந்த அகில ஆசிய கல்வி மகாநாட்டுக்கான இலங்கைத் தூதுக்குழுவை ஒழுங்கு செய்ததனால் வ.மா.ஆ.ச.மேற்கொண்ட ஒழுங்கமைப் பிலிருந்து அச்சங்கம் தனது சொந்தக் காலிலேயே நிற்கக்கூடிய நிலையை விரைவில் அடைந்துவிட்டதென்பதை உணரலாம். அக்கால இந்தியா, காந்திஜியின் உப்புச் சத்தியாக்கிரகத்தாலும், நூற்றுக் கணக்கான தலைவர்கள் கைது செய்யப் பட்டமையாலும் பரபரப்பான ஒரு நிலையில் இருந்தது. மூன்று வார இந்தியச் சுற்றுலாவின்பின் தூதுக்குழுவினர் புத்துணர்வுடன் இலங்கை மீண்டனர்.

வடபகுதியிலேயே நாம் கட்டியெழுப்பு விழைந்தது வெறும் தொழிற்சங்கமல்ல, ஒரு புதிய சமுதாய அமைப்புக்குக் கருவியாக விளங்கக்கூடிய ஒரு தொழிலையே கட்டியெழுப்ப முனைந்தோம். வ.மா. ஆ. சங்கத்தின் கட்டுக்கோப்பே இதற்குச் சான்று பகரும். சம்பள அடிப்படையில் மூன்று வகைச் சந்தாதாரர் சங்கத்தில் உறுப்பினராக இருந்தபோதிலும் சகல அங்கத்தவரின் உரிமைகளும் சமத்துவ உரிமை கொண்டனவாகக் கணிக்கப்பட்டன. பொதுவாகச் சகல குறைந்த சம்பளம் பெறும் ஆசிரியரின் சம்பள அடிப்படையை உயர்த்த உழைத்ததுடன், குறிப்பாக வடபகுதியில் நிலவிய 'பீ' சம்பள அடிப்படையை ஒழித்துக் கட்டவும் உழைத்தோம். ஆசிரியரின் கல்வித் தகைமைகளையும் அந்தஸ்தையும் உயர்த்த உழைத்தோம். அவைகளுக்காக எமது சொந்த முயற்சியால் விரிவுரை நெறிகளை ஒழுங்கு செய்ததுடன் கல்வி தொடர்பான நூல்களைக் கொண்ட ஒரு நூலகத்தையும் கட்டியெழுப்ப முனைந்தோம். இவற்றின் மூலம் பலவிடங்களில் ஒருங்கமைக்கப்பட்ட ஆசிரியர் சங்கங்களுடன் கல்வித் திணைக்களம் கலந்தாலோசிக்க வேண்டு மென்பதையும் நாம் உணர்த்தினோம்.

**நாற்பதாம் ஆண்டுகளின் அறுவடை**

முப்பதாமாண்டுகளில் நடைபெற்ற விதைப்பு நாற்பதாம் ஆண்டுகளில் வள மிக்க அறுவடையைத் தந்தது. ஏனெனில் இலங்கை சுதந்திரத்தை நோக்கித் துரிதமாக முன்னேறிவந்த இக்காலத்தில் தனது புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புக்களை ஏற்று நிர்வகிப்பதற்கு அதற்குத் தகுதியளிக்கக்கூடிய சில முன்னேற்றங்களேற்பட்டன. 1942ல் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி, இலங்கைப் பல்கலைக் கழகமாக்கப்பட்டது. இதுவரை உயர்கல்வி மறுக்கப்பட்டு வாழ்ந்த மக்களுக்கு சந்தர்ப்பம் அளிப்பதற்குக் கிராமப் புறங்களிலும் கவனிக்கப்படாதிருந்த நகர்ப்புறங்களிலும் மத்திய மகா வித்தியால யங்கள் நிறுவப்பட்டன. இலவசக் கல்வியும், தாய்மொழிப் போதனையும் அச்சந்தர்ப்பங் களை மேலும் விரிவுபடுத்தின. 1942ம் ஆண்டுக்குப்பின் லண்டன் மற்றிக் குசேலன் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய அவசியம் நீக்கப்பட்டது. 1930ம் ஆண்டிலிருந்து வ.மா.ஆ.ச எந்தக் கல்வித்துறைக் குடியேற்ற வாதத்திற்கெதிராக இயங்கி வந்ததோ அந்த நோக்கம் ஈடேறியது. இவ்வித மாற்றங்கள் காரணமாக J.S.C 1941ம் ஆண்டிலிருந்து ஒரு மத்திய திணைக்களப் பரீட்சையென்ற முறையில் நிறுத்தப்பட்டது. வ.மா.ஆ. சங்கம் 1942ல் இருந்து பிரதேசவாரியான ஒரு புதிய முறைப் பரீட்சையைப் பாடசாலைகளின் ஒத்துழைப்புடன் நடத்த ஆரம்பித்தது. இரண் டாண்டுகளின் பின் கொழும்பு ஆசிரியர் சங்கம் இம்முன்மாதிரியைப் பின்பற்றித் தமது பிர தேசத்தில் பரீட்சைகள் நடாத்த ஆரம்பித்தது. தலைதூக்கிவரும் ஒரு சுதந்திர தேசிய இனத்துக்கான அமைப்புக்களையும் இலட்சி யங்களையும் உருவாக்க நாம் ஒன்று சேர்ந்து முயன்றோம்.

எந்தவொரு கொள்கையிலும் பார்க்க வ.மா.ஆ.ச. தொழிற் சங்கத்துடனும் முற்போக்கான தேசியத் தலைவர்களுடனும் தோளோடு தோள் சேர்ந்து இந்நாட்டில் வாழும் மக்களின் ஒரு பிரதான மொழிகளைக் கல்வி மொழிகளாகவும், குடியியல் வாழ்வுக்கான மொழிகளாகவும், கலாசாரத் தொடர்புக்கான மொழிகளாகவும் உருவாக்கும் இலட்சியத்துக் காகப் போராடியது. அன்றைய காலகட்டத்தில் இது ஒரு பிரதான மொழிகளைக் கல்வி மொழிகளாகவும், குடியியல் வாழ்வுக்கான மொழிகளாகவும், கலாசாரத் தொடர்புக் கான மொழிகளாகவும் உருவாக்கும் இலட்சியத்துக் காகப் போராடியது. அன்றைய காலகட்டத்தில் இது ஒரு கடினமான போராட்டமாக அமைந்தது. கல்விமா அதிபதியாகப் பதவி யேற்க இருந்த முதல் இலங்கையர் பதவி ஏற்பதற்கு முன்னர், "இலங்கைக் கல்விச் சஞ்சிகைக்கு" எழுதியிருந்த ஓர் ஆராய்ச்சி அறிக்கையில் தாய்மொழிப் போதனைமூலம் பெறப்படும் கல்வியிலும் பார்க்க, ஆங்கில மொழி மூலம் பெறப்படும் கல்வியின் உயர் தரத்தைப் பாராட்டியிருந்தார். ஆங்கிலத்தை "சுவிகார மொழி" யெனக்கொண்ட இவ் வறிக்கைக்கு, சுன்னாகத்திலிருந்து வெளியிடப் பட்ட "கேசரி" எனும் ஏடு "H.S. பெரேராவின் அறிக்கை மிதமான ஓர் அறிக்கை" என்ற தலைப்பில் ஒரு சூடான பதிலைக் கொடுத்தது. இவ்வறிக்கை வட பகுதியினதும் சங்கத் தினதும் இடித்துரைக்கும் பதிலாக அமைந் தது. நான்கு ஆண்டுகளின் பின் நான் எழுதிய "தாய் மொழிமூலம் கல்வி" என்ற நூல் வெளியிடப்பட்டது. இதைப்பற்றியே பேராசிரியர் J.E. ஜயசூரிய தாம் கல்விபற்றி எழுதிய நூலிற் குறிப்பிடுகிறார். "குறிப்பாக வடபகுதியிலிருந்த கல்விமான்களிடமிருந்தும் இதற்கு ஆதரவு கிடைத்தது. இவர்களுள் "தாய்மொழி மூலம் கல்வி" என்னும் நூலை எழுதி வெளியிட்ட திரு.கு.நேசையா பிரபலமானவர் இதை யடுத்துச் சில காலத்தின் பின் கலாநிதி விமலசேகராவும் L.A. மெத்தானந்தாவும் களத்திற் குதித்து, தேசிய மொழிகளுக்காக உரமான உறுதியுடன் போராட ஆரம்பித்த னர்". பேராசிரியர் ஜயசூரிய தமது முதல் கட்டுரையில் முந்திய தமிழ்ச் சந்ததியினர் பற்றி அநேகமாக அருணாசலம் போன்றோ ரைக் கருத்தில் வைத்து எழுதியிருந்தார். அதில் அவர் குறிப்பிட்டதாவது "சிங்களவரே சிங்களமின்றி இயங்கலாமென்ற கருத்து நில விய காலத்தில், சிங்களத்துக்கும் தமிழுக்கு மான போராட் டத்தை ஓரளவு வண. (Rev.)

A.G. பிரேஸர் போன்ற ஆங்கிலேயரின் உதவியுடன் நடாத்தியவர்கள் தமிழ்த் தலைவர்களே".

**சுதந்திரத்தின் வாயிலில்**

1945ம் ஆண்டு கண்டியில் நடைபெற்ற ACUT யின் வெள்ளிவிழாவுக்கு தலைமை தாங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவ்விழாவில் வடபகுதியின் பெருமகனும் மகாத்மாகாந்தியின் கல்விக் கொள்கைக்குப் பாத்திரமானவருமான திரு. E.அரியநாயகம் தொழில்சார்கல்வி பற்றிய கருத்துக்களை நாட்டுமக்களுக்கு முன் வைத்தார். 25 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்ற நம்நாட்டுக் கல்விச் சீர்திருத்தங்களில் அவரது சமுதாயக்கல்வி பற்றிய அடிப்படைத் தத்துவம் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1947ம் ஆண்டு கல்விச் சட்டமும் 1939ல் வெளியிடப்பட்ட அதற்கான திருததங்களும் இன்னும் பெருமளவில் நாட்டின் கல்விச்சட்டமாக நிலைத்து நிற்கின்றன. வடபகுதிக் கல்விமான்கள் தென்னிலங்கைக் கல்விமான்களுடன் இணைந்து நிலையியற் குழுவின்முன் தமது சாட்சியத்தில் முன்னளித்த சில விடயங்கள் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் நவீன உலகின் கல்வி அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்ட புதியகல்விச் சட்டத்தை இலங்கை இதுவரையும் கண்டதில்லை. அவ்வித சீர்திருத்தத்துக்கு முன்னோடியாக ஆசிரியர்களினதும் கல்விமான்களினதும் பரிபூரணமான ஆலோசனைகள் அமையவேண்டியது அவசியம்.

* * *

> *"பெயரா பலமா முக்கியம்? தமது உரிமைகள் நலன்களைக் காப்பாற்றுவதற்காகப் போராடும் ஆசிரியர் தமது பெயர்ப்பலகை என்னவாகும் என்று விசனப்படுவதேன்? உரிமைப்போராட்டம் நம்பர் பிளேட் போராட்டமாக மாறும் பொழுது, போராட்டமே சீர் குலைந்துவிடும்.*
>
> அ.வைத்தியலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்விமுறை உதயம்

## (வடமாகாண ஆசிரியர் சங்கம் – 1948 – 1960)

ந.சபாரத்தினம்

1954ம் ஆண்டு மாஸ்கோவில் கூடிய சர்வதேச ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் உருவாக்கிய ஆசிரியர் பட்டயத்தின் 1ம் வாசகத்தில் ஓராசிரியரின் பிரதான கடமைகளாவன: குழந்தைகளின் தனித்துவத்துக்கு மதிப்பளித்தல்: அவரது திறமைகளைக் கண்டறிந்து அவற்றை வளர்த்தல்: அவரது கல்வியிலும், பயிற்சியிலும் கவனம் செலுத்துதல்: எதிர்கால மனிதனும் குடிமகனுமான அவரது ஒழுக்க உணர்ச்சியை உருவாக்குவதைத் தொடர்ந்து பேருக்கமாகக் கொள்தல்: மக்களிடையே அமைதி, நட்புறவு, ஜனநாயக உணர்வு ஆகியவற்றுடன் அவருக்குக் கல்வியூட்டுதல் என வரையறுக்கப்பட்டுள்ளது. கல்வியுடன் இணைந்த இவ்வடிப்படை நோக்கத்தை அடைவதற்காக 3ம் வாசகத்தில் ஆசிரியரின் உரிமைகள் தெளிவாக வரையறுக்கப் பட்டுள்ளன. "தங்கள் பாதிக்காலத்தையும் தொழில் வாழ்வையும் பாதிக்கக்கூடிய தான் தோன்றித்தனமான தீர்மானங்களுக் கெதிராகத் தம் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஒப்பந்தங்கள் செய்யும் உரிமை ஆசிரியருக்குண்டு: குறிப்பாக அவர்கள் வேலைக்குச் சேர்க்கப்படல், நியமனம், பதவியேற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள், பதவிநீக்கம் ஆகியன தொடர்பான தான் தோன்றித்தனமான முடிவுகளுக்கெதிரான பாதுகாப்புக்கள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்."

வடமாகாண ஆசிரியர் சங்கம் ஐம்பதாம் ஆண்டுகளில் - ஆசிரியன் எந்தவொரு நாட்டினதும் கல்விமுறையின் ஆதாரக்கல் என்றும், மனநிறைவுள்ள ஆசிரியத் தொழிலே கல்வியின் முன்னேற்றத்திற்கு அவசியமென்றும், ஆசிரியர்களின் பதவிக்காலம் உறுதிப்படுத்தப் படவேண்டுமென்றும் இக்கொள்கைகளில் தீவிரமாக உழைத்தது.

சம்பளங்கள், பிறசேவை நிபந்தனை கள் ஆகியவற்றைவிட சேவைப்பாதுகாப்பு அதிமுக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதிய தால் இச்சங்கம் ஒரு தொழிற்சங்கமாகப் பதிவு செய்யப்படவேண்டும் என்ற கிளர்ச்சி வலுப் பெற்று, 1952 மாத்தறையில் நடைபெற்ற அ. இ. ஆ. ச மகாநாட்டில் முன்னணியாக விளங் கியது. இம்மகாநாட்டில் ACUT போன்ற ஒரு தொழிற்சங்கத்தின் இலட்சியங்கள் எது என்பது பற்றியும், தொழிற்சங்கம் பதிவு செய்யப்பட்டால் என்ன, பதிவுசெய்யப்படாவிட்டால் என்ன?, அந்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத் தவறு மிடத்து ACUT யை எதிர்நோக்கக்கூடிய ஆபத்துக்கள் எவை என்பது பற்றியும், மகா நாட்டில் கலந்து கொண்டோர் வியப்புறுமாறு விளக்கிய பெருமை வ.மா. ஆ. ச, தலைமைப் பீடத்திலிருந்த அகில இலங்கைப் புகழ்வாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற் சங்கவாதியாகிய திரு. அ.வைத்திய லிங்கத்தையே சாரும். போலி அந்தஸ்து அரசியற் கலப்பு, ஆகியவற்றிடையே ஈடாடிக் கொண்டிருந்த ACUT இக் கடமையைப் பூர்த்திசெய்ய ஓராண்டு காலம் எடுத்தது.

சட்டத்துக்குப் பணியாத பாடசாலை தான்தோன்றித்தனமாக ஆசிரியரை வேலை நீக்கம் செய்தமைக்கெதிராகவும், நீதியற்ற பதவி உயர்ச்சிகளுக்கெதிராகவும், ஆசிரிய ரின் குடியியல், அரசியல் உரிமைகள் பறிக் கப்பட்டதற்கெதிராகவும் வ.மா.ஆ.ச. ஐம்பதாம் ஆண்டுகளில் நடாத்திய பல போராட்டங்கள் மூலம் அச்சங்கம் பெரும் எதிர்ப்புணர்ச்சியும் பெற்றதென்பது காணக்கூடியதாக இருந்தது.

**ஐம்பதாம் ஆண்டுகளில் சுவையான ஒரு முரண்பாடு**

ஆசிரியரின் பதவிக் காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் இலவசக்கல்வி மூலம் மேலும் மோசமடைந்தன. இதுவரை நிலவிய கல்விமுறையில் பணமே பிரதான தேவையாக இருந்தமையால் இலவசக் கல்வி முறை அமுல் செய்யப்பட்டபின்னர், ஆங்கிலப் பாடசாலைக்கு மாணவப் படையெடுப்பு அதி கரித்தது. இலவசக் கல்விக்கு முடி வைப்பது போல, புதிய முறைப்படி ஆசிரியருக்கு நேரடியாகச் சம்பளம் வழங்கும்முறை அமைந்தது. யாரோ செலவு செய்ய தான் விழா நடாத்தும் பாங்கிற்கமைந்த பாடசாலை முகாமையாளர் வெட்கமின்றி, அரசாங்கத் தால் எவ்வித சட்டரீதியாகப் பாதுகாப்பளிக்கப் படாத ஆசிரியரைத் தான்தோன்றித்தனமாகப் பதவிநீக்கம் செய்து நடவடிக்கையில் ஈடுபட்ட னர். "இலங்கை ஆசிரியன்" என்ற சஞ்சிகை யில் ஆசிரியர் தலையங்கத்தில் வ.மா.ஆ. சங்கத்தைச் சேர்ந்த திரு. A.S.கனகரத்தினம்- முகாமையாளரால் ஆசிரியர் தண்டிக்கப் படுவதுபற்றி விளக்கும்போது குறிப்பிடுவ தாவது: "அரசாங்க நிதியில் இயங்கிவரும் பொதுச்சேவை நிறுவனங்களான பாடசாலை கள் மீது சொத்துரிமை கொண்டாடும் முகாமையாளனுக்கெதிராக ஓர் எச்சரிக்கை விடுவிக்கப்படவேண்டும். நாட்டின் கல்வி நலன் கருதிக் காலத்தோடு ஒட்டி வாழ முடியாத முகாமையாளர் வெளியேற்றப்பட வேண்டும். இக்கவலைக்கிடமான நிலை கண்ட வ.மா.ஆ.ச. கைகட்டி வாளவிருக்க வில்லை. ஆறுமாத முன்னறிவித்தலுடன் ஒரு முகாமையாளர் ஆசிரியரின் சேவைக்கு முற்றுப்புள்ளி வைக்க எடுத்த முயற்சிக் கெதிராக - சுமார் 1000 ஆசிரியர் கண்டன ஊர்வலத்திற் கலந்து, அதை அடுத்து ஒரு பொதுக்கூட்டம் நடாத்தி தெரிவித்த மறுப்புக்கு அம்முகாமையாளர் பணிய வேண்டி ஏற்பட்ட தென்பது பதிவில் உள்ள உண்மையாகும். எல்லாப் போராட்டங்களிலும் இவ்வித அதிர்ஷ்டம் ஏற்படவில்லை. சங்கம் "சேவைக் காலப் பாதுகாப்பு நிதி" என நிதியை பெருமளவு வெற்றியீட்டியது. தான்தோன்றித் தனமான பதவி நீக்கங்களுக்கெதிராகப் போராட்டம் நீண்டகாலப் பெருஞ்செலவிலான சட்டத் துறைப் போராட்டம் ஒன்றே என்ற மனம் தளரும் நிலைமை சங்கத்தை எதிர் நோக் கியது. பெருமளவு முகாமையாளர் நியாய மானவர்களாயிருந்தபோதும் 1960 இல் பாடசாலைகள் அரசினாற்கையேற்கப்படும் வரை ஒரு விதப் பாதுகாப்பற்ற உணர்ச்சி நம்மத்தியில் நிலவத்தான் செய்தது. உதவி நன்கொடை பெறும் பாடசாலை முறையின் கீழ் தாம் அனுபவித்து வந்த குடியியல் உரிமைகளுக்கு எவ்வித பங்கந்தான் ஏற்பட்டாலும் பாடசாலைகள் அரசாங்கம் கையேற்பதறகு ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டோர் அறிவுரை வழங்கினர்.

**மொழிப்பிரச்சினை**

1950 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட "கல்வித்தின" விழாவில் உரையாற்றிய திரு.கு.நேசையா குறிப்பிட்டதாவது: "தேர்தல் களிலும் பொதுமேடைகளிலும் எழுப்பப்படும் சாதிவர்க்க வகுப்புவாதச் சடங்குகள் தேசியக்குரலை மழுங்கடித்து விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் மௌனமான வாக்குவன்மை எங்கும் காணப்படுகின்றது. இவ்விதக் கடந்தகால விசுவாசங்களில் இருந்து இன்னோர் இலகுவான ஆனால் அதேவித ஆபத்து நிறைந்த நிலைக்கு மாறவழியுண்டு. அதுவே எமது தேசிய இனம் சிறப்பு உரிமைகள் பூண்ட பல்வேறு சமுதாயங்களின் தொகுப்பு என்ற ஏமாற்றமான கோட்பாடாகும். இன்று இது வலுப்பெற்று நிலவும் ஒரு கோட்பாடாகிவிட்டது. அநேகமாகத் தலைவர்கள் தன்னம்பிக்கையில் தங்கியிராமல் தமது சமுதாயங்களி லிருந்தே தமது செல்வாக்கைப் பெறுகின்றனர்.

1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப் பட்டபின் நிகழ்ச்சிகளின் போக்கும் அவற்றின் பின்விளைவுகளும் சமகால வரலாறாகும்.

1956இல் நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் "சிங்களம் மட்டும்" சட்ட மூலம் பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சங்கத்தின் நிலையைத் தெளிவுபடுத்துகின்றது.

"இன்றைய மொழிக்கொள்கை இன ஒற்றுமையைச் சிதைக்கக்கூடிய சிந்தனைத் துடிப்புக்களுக்கு வழிவகுக்கின்றதென்பதை அச்சத்துடன் நோக்கும் இச்சங்கம் அரச மொழிப் பிரச்சினை நாட்டின் சகல இனங்களினது சுயமரியாதைக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் அமைவாகத் தீர்க்கப்படல் வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது."

எமது இத்தீர்மானத்தை முழு மனதுடன் ஏற்றுக்கொண்ட ACUT கல்வி அமைச்சருடனும் பிரதம அமைச்சருடனும் பல பேட்டிகள் கண்ட போதிலும், வெற்றிகாண முடியவில்லை.

அங்கத்தவரின் கட்டுக்கோப்புகள் அவர்களது சொந்தக் கருத்துக்கள் ஆகியவற்றை விடுத்துச் சங்கம் தேசிய ஒற்றுமை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இவ் விடயத்தில் ACUT யின் நம்பிக்கையைப் பெற்றது. 1950 ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகள் பற்றிக் கருத்து வழங்கிய சங்கம் பரஸ்பரமுறையில் சிங்களவர் தமிழும், தமிழர் சிங்களமும் கற்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படாமை பெருங்குறைபாடடெனக் குறிப்பிடப்பட்டது. சில இடங்களில் ஆங்கில சிங்கள இருமொழிக் கல்வியும், வேறு சில இடங்களில் ஆங்கில தமிழ் இருமொழிக் கல்வியும் தேசிய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய தொழிற்பிரிவுக் கொள்கையாகும் என்பதைச் சங்கம் சுட்டிக் காட்டத் தவறவில்லை. கல்விக்கான மொழிக் கொள்கைபற்றித் திட்டமிட்டுள்ள அதன் நீண்டகால அரசமொழித் திட்டம் பற்றி வெளியிடுமாறு சங்கம் அரசாங்கத்துக்கு அறைகூவல் விடுத்தது. தமிழ் மாணவர் தமிழ் மொழியிலேயே பாலர் வகுப்பு - பல்கலைக்கழகம் வரை போதிக்கப்பட வேண்டும் என்ற உரிமையைப் பாதுகாத்து வந்த சங்கம் அத்துறையில் ஏதாவது தலையீடுகள் ஏற்படாது கவனமாக இருந்தது. சங்கத்தின் பல தீர்க்க தரிசனங்கள் யதார்த்தமாகியுள்ள இன்றைய காலகட்டம் வரை நமது தேசிய இனத்தின் விமோசனம் சிங்களவர் தமிழ் கற்பதிலும் தமிழர் சிங்களம் கற்பதிலும் ஒருவரின் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் மற்றவர் புரிந்து பரிச்சயப்படுத்துவதிலும் தங்கியுள்ளது என்ற கொள்ளை நிலையிலிருந்து தவறாது நின்று வருகின்றது. கல்வித்துறையில் தாய்மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டும் என்ற விடயத்தில் நாட்டில் உள்ள பல்வேறு பிற்போக்குச் சக்திகளின் நாசவேலைகளுக் கெதிராகத் தொடர்ச்சியான இயக்கத்தை இச்சங்கம் நடாத்தி வந்துள்ளது. தமிழ்பேசும் மாணவருக்குத் தமிழே போதனாமொழியாகவும் இருக்கவேண்டும் என்ற கொள்கையை இச்சங்கம் முன்வைத்துத் துணிவுடன் போராடி இம்மொழிகளின் உபயோகம் பல்கலைக்கழகம் வரை மிகவிரைவில் இருக்கவேண்டும் என்றும் போராடியும் வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயமொழியிற் கல்வி

கல்வி அறிவு பரவலாக்கப்படுவதற்க நேரடிக் காரணமாக இருந்த கல்வி யின்மையை நீக்க உதவிய இலவசக் கல்வியை எவ்வித உற்சாகத்துடன் இச்சங்கம் வரவேற்றதோ அதேயளவு உற்சாகத்துடன் சுயமொழிக் கல்வியையும் உரிய காலங்களில் பல்வேறு கட்டங்களில் அது செயற்படுத்தப் படுவதையும் வரவேற்றது. இன்று சுய மொழிக்கல்வி நடைமுறையிற் தீவிரப்படுத்தப் பட்டு இலங்கைப் பல்கலைக்கழகமே ஆங்கில மொழியையே வேண்டாத ஒரு தமிழ்க் கல்விமான் மீது கலாநிதிப் பட்டம் வழங்க விரும்பியதை விமர்சிக்குமுகமாக வ.மா. ஆ.ச. தலைமைப்பீடம் ஒரு கால கட்டத்தில் வெளியிட்ட கருத்தைக் குறிப்பிடுவது பொருத்த மானது. சுயமொழிக்கொள்கை பற்றி ஒத்த மேவலற்ற நிலையிலிருந்த திரு.S.H.பேரின்ப நாயகம் தனது எதிரிகளுக்குக் கொடுத்த விடையாவது: "எதிர்காலத்தில் சீனா, யப்பான், இந்தியா எமதருமைச் சிறிய இலங்கை ஆகிய நாடுகள் விஞ்ஞான வளர்ச்சிக்குத் தமது பங்களிப்பைச் செய்யக்கூடியன எனக் கருதலாம். இவ்விடயத்தில் உண்மையான தெனில் மிகப்புத்திக்கூர்மை படைத்த எம்மத்தி யிலுள்ள சிலர் உட்படப் பலர் குடியேற்றவாத மயக்கத்திலிருந்து தெளிவுபெறவில்லை. அரசியல் சுதந்திரம் என்பது எங்களுக்கு எமது அரசியல் எசமானரால் ஊட்டப்பட்ட மூட நம்பிக்கைகளிலிருந்து மீட்சிபெற்றதென்று பொருள்படாது. ஆங்கிலத்துக்காக ஆதர வளித்துப் பேசுபவர்கள் வரலாற்றுக்கெதிராக இரு கருத்துக்களிற் போராடுகின்றனர். ஒன்று உருவாக்கப்பட்ட வரலாறு, மற்றது உருவாகிவரும் வரலாறு.

வ.மா.ஆ. சங்கத்தின் இன்னோர் ஒளி விளக்கான திரு.ஏ.ஈ.தம்பர், 1948ஆம் ஆண்டளவிலேயே, "இலங்கை ஆசிரியனில்" எழுதியதாவது: தாய் மொழிக் கொள்கை யிலிருந்து பின்னோக்கித் திரும்புவது இயலாதது. ஆங்கிலேயராட்சிக்குட்பட்ட இந்தியாவிலேயே சிரேட்ட தராதர வகுப்பு வரை தாய்மொழியே போதனா மொழி யாயிருக்க வேண்டுமென்ற நடைமுறைநிலை நிறுத்தப்பட்டுவிட்டது. இவ்விடயத்தில் சுதந்திர இலங்கையின் அரசாங்கம் வேறுபட்ட கருத்தைக் கொள்ள வேண்டியதில்லை."

## ACUT யின் மனச் சாட்சியின் பாதுகாவலன்

வ.மா.ஆ.சங்கம் இதுவரை தீவிரமாக ஆதரித்து வந்த இலட்சியங்களான இலவசக் கல்வி, சுயமொழிப் போதனை, தேசியப் பாடசாலை முறை ஆகியன நற்பயன்களை நாட்டுக்கு அளித்துவரும் இன்றைய நிலையில், தனது தலைமைபற்றிப் பெருமை கொள்ளப்போதிய காரணம் உண்டு. கல்வியென்பது அரசின் பொறுப் பென்றும் தங்கள் மாணவருக்கு எது சிறந்தது என்று அறியும் ஆசிரியர் அப்பொறுப்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றும் வ.மா.ஆ.ச. தொடர்ந்து உணர்ந்து வந்துள் ளது. இது காரணமாகவே, இச்சங்கம் தனது மகஜர்களிலும், கூட்டங்களிலும் நன்கு திட்டமிடப்பட்ட இயக்கங்களிலும் தனது குரல் நாட்டின் கல்விச் சீர்திருத்த ஆலோசனை களில் இடம்பெற வேண்டுமென்ற உழைத்து வந்துள்ளது. இக்கட்டுரையாசிரியருக்கு தனிப்பட்ட முறையில் நன்கு தெரிந்த இரு உதாரணங்களை இது தொடர்பாக மேற்கோள் காட்டுவது பொருத்தமானது: 1961ல் வ.மா.ஆ.ச. தேசிய கல்வி ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்த தனது மகஜரில் பாடசாலைகள் நிறுவப்படுதல், கல்வித்திட்டம், ஆசிரியர் மேற்பார்வை, கல்வித்தரத்தை பேணுதல், பாடசாலை விடுதிகள், ஆசிரியர் சேர்க்கப்படுதலும் பயிற்சியளித்தலும், பரீட்சையாளர் ஆகிய விடயங்கள் பற்றிய தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளது. ஆணையாளர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட இம்மகஜர் ஒரு சகாப்தத்திற்கு முன்னரே ஆணைக்குழுவின் விதப்புரைகளை முன் கூட்டியறியும் திறமையோடு விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957ல் நியமிக்கப்பட்ட நீடாம் (Needam) ஆணைக்குழு எனப்பட்ட பல்கலைக்கழக ஆணைக்குழுவும் பொதுவாக எமது மகஜரில் கூறப்பட்ட கருத்துக்கள் பற்றியும் குறிப்பாக மொழிவழியான பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுவது பற்றித் தெரிவித்த எதிர்ப்புப் பற்றியும் மிகுந்த திருப்தி தெரிவித்தது. பேராதனையில் நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக் கழகத்துக்குத் தமது உரிமைகளை அர்ப்பணம் செய்வதை தொடர்ந்து எதிர்த்து வந்த எமது சங்கம் யாழ்ப்பாணத்தில் ஒரு வளாகம் விரைவில் நிறுவப்பட வேண்டு மென்று வாதிட்டுவந்துள்ளது. தனது திட்ட நடவடிக்கைகளிலும் பாடசாலைகளின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான இயக்கங்களிலும் ஆசிரியரின் நலவுரிமை களை வென்றெடுப்பதிலும் ஈடுபட்ட ACUT ஐம்பதாம் ஆண்டுகளில் அதிக வளர்ச்சியுற்ற மிகப்பெரியதும் ACUT யின் உரத்த குரலாகவும் விளங்கிய வ.மா.ஆ.ச. என்றாவது குறுகிய மனப்பான்மை படைத்ததாகவோ ஒரு பிரதேசத்திற்குமட்டு முரிய நிறுவனமாகவோ இயங்கவில்லை. அது தனது உறுப்பினரை உடனடியாக எதிர்நோக்கிய பிரச்சினைகளுடனோ உறுப்புப் பாடசாலைகளின் பிரச்சினைகளுடனோ நின்றுவிடவில்லை. தேசிய கல்விப் பிரச்சினைகளில் தனது பார்வையைச் செலுத்திய எமது சங்கம் சர்வதேசத் தொடர்புகளை அபிவிருத்தி செய்யவும் தாமதிக்கவில்லை. அரசாங்கத்தின் சகல முற்போக்குக் கல்விக் கொள்கைகளுக்கும் சங்கம் ஆதரவு கொடுத்தமைக்கு ஒரு காரணம் செல்வாக்கு மிகுந்த இடதுசாரிகள் தலைமைப்பீடத்தில் பெருமளவு இருந்தமை யாகும்.

## சம்பள உரிமைப் போராட்டம்

எல்லாவற்றுக்கும் மேலாக நலிந் தோரின் நலவுரிமைக்காகப் போராடுவதையே தனது பிரதான இலட்சியமாகக் கொண்ட எமது சங்கம். கல்விப்பத்திரமுள்ள, கல்வித் தராதரமற்ற குறைந்த சம்பளம் பெறும் சகல ஆசிரியர் சார்பிலும் போராடி உயர் சம்பளம், ஓய்வு கால வேதனம், அனாதை, கைமமை நிதி ஆகியவற்றைப் பெற்று தனது மதிப்பை உயர்த்தக் கூடியதாயிற்று. பிரயாணத்தின் போதும், தனக்களிக்கப்பட்ட இச்சிறந்த வரவேற்பு ஓர் ஆசிரியன் சமுதாயத்தில் கணிக்கப்பட்டு மதிக்கப்படுகின்றான் என்பதைக் காட்டுகிறது என்ற முறையில் அந்நாள் தன் நினைவில் இடம்பெற்ற பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்படக்கூடிய தொன்றெனக் குறிப்பிட்டுள்ளார். ஐம்பதாம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில் வ.மா.ஆ.ச.சீன- சோவியத் தூதுக்குழுக்களை வரவேற்றதுடன் கீழைத்தேய மேலைத்தேச கலாசாரக் காற்றுக்களுக்கு தனது சாளரங்களை திறந்துவிட்டது.

1967ம் ஆண்டு இச்சங்கம் மேதினத்தைக் கொண்டாட ஆரம்பித்தது. அத்தினத்தில் வார்தாவைச் சேர்ந்தவரும், யாழ்.மண்ணின் தவப்புதல்வருள் ஒருவரும் காந்தியடிகளின் கல்வி மனச்சான்றின் பாதுகாவலருமான ஸ்ரீ.ஈ.டபிள்யூ. அரிய நாயகம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அன்று தொடக்கம் இன்றுவரை

"பெயரா பலமா முக்கியம்? தமது உரிமைகள் நலன்களைக் காப்பாற்று வதற்காகப் போராடும் ஆசிரியர் தமது பெயர்ப்பலகை என்னவாகும் என்று விசனப்படுவதேன்? உரிமைப்போராட்டம் நம்பர் பிளேட் போராட்டமாக மாறும் பொழுது, போராட்டமே சீர் குலைந்துவிடும்.

## பலதுறை முன்னேற்றத்துக்கான ஒரு சக்தி

வடபகுதியில் சமூக தொழில்வள நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, ஆசிரியரின் நல்வாழ்வுக்கும் கல்வியின் உயர்தரத்திற்கும் மாணவரின் கல்வி வளர்ச்சிக்கும் உழைத்துவரும் வ.மா.ஆ.ச.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிராந்தியத்திலுள்ள ஆசிரியர், பெற்றார், பொதுமக்கள் ஆகியோரின் நன்றிக்குப் பாத்திரமானது. பல்கலைக்கழக விரிவுரையாளர்களினதும் கல்வித் திணைக்களத்தினதும் ஒத்துழைப்புடன் காலத்துக்குக் காலம் ஆசிரியருக்கான நினைவுறுத்தற் பயிற்சிகளை இச்சங்கம் ஒழுங்குசெய்து வந்துள்ளது. சங்க உறுப்பினருக்கு பிறநாட்டு சுற்றுப்பிரயாண வசதிகள், சகல அதிபர்களினதும் பாராட்டைப் பெற்ற 5ம் 8ம் வகுப்பு மாணவருக்கான பொதுப்பரீட்சைகள் ஆகிய முயற்சிகளையும் இது மேற்கொண்டது. கல்விவாரவிழாக்கள் மூலம், கல்விக்கான பொதுமக்களின் ஆதரவையும் சங்கம் திரட்டியது.

பேச்சுப்போட்டி, இசைப்போட்டிகளை ஆண்டுதோறும் நடத்திவந்த இச்சங்கம் காலத்துக்குக்காலம் மாணவர் நலன்கருதி நாடகங்கள், கண்காட்சிகளையும் நடத்தி வந்தது. அறுபது ஆண்டுகள் பயனுள்ள தனது வாழ்வில் பெற்ற பழுத்த அனுபவத்துடனும் வடபகுதியில் உள்ள கல்வியாளர், பொதுமக்கள் காணும் இவ்வாண்டில் தனது கடந்தகாலச் சாதனைகளை ஒன்று திரட்டுவதாகச் சூளுரைக்கும் அதேவேளையில் கடந்தகாலப் பாரம்பரியங்களுக்கு அமைய, அவற்றின் மீது மேலும் பல சாதனைகளைக் கட்டியெழுப்பி, கல்விக்கொள்கைகளுக்கும் ஆசிரியத் தொழிலின் மேன்மைக்கும் உழைக்குமெனத் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

* * *

**The Guru**

Vol. VII No. — 2.

NOVEMBER, 1969

## EXIGENCY OR VICTIMISATION

It was with much restraint that we had been silent on the transfers of Mr. J. Santhiapillai and Mr. R. Sivanesan, the Vice President and the Secretary respectively of, the National Union of Teachers. They were transferred out to the salubrious climate of the Central regions within four months of their being elected to these offices in January 1969.

It was only Mr. G. G. Ponnampalam Q. C., M. P., for Jaffna and leader of the Tamil Congress who was able to get the truth out of the horses mouth. They were transferred out ostensibly because of the exigencies of service and honestly because they were too sincere. They had implemented as officebearers the decision of the National Union of Teachers.

The Hon. Minister of Education in and out of Parliament had often declared that nobody would be punished for refusing to sell or buy the Siyawasa Lottery tickets.

What actually did happen? The minions of the Hon. Minister of Education went round the schools distributing the ticket books wholesale to the Principals or their Deputies who in turn put them into the hands of the teachers and prefects who in turn made the retail sale to the students and the public. The cash paid was not solely out of love for a lucky draw; but more to lick the boots of the boss above; to win a favour either in the immediate present or a little later.

In this year when we are celebrating the birth centenary or Mahatma Gandhi those who have been fortunate to be born to direct the affairs of state should follow the fundamental

(Contd. on Page 2)

*In this Issue*

Exigency or Victimisation

Exhibition on Education and Teaching Service.

N. U. T.
1. The Seventh Annual Report
2. Our Aim
3. Accounts 1968—1969

The Interview with the Director General of Education

Who is who?

The N. P. T. A. Rally and Protest Meeting

JOURNAL OF THE NATIONAL UNION OF TEACHERS

*வடமாகாண ஆசிரியர் சங்கம் (NPTA) தேசிய ஆசிரியர் சங்கத்தில் (NUT) இணைந்திருந்தபோது 1969 காலப்பகுதிகளில் வெளியிடப்பட்ட பத்திரிகை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரி.யோவான் கல்லூரியில் உரிமைப்போர்

இ.பானுதேவன்

ஆசிரியர் தொழிற்சங்க வரலாற்றில் பரி.யோவான் போர் அழியா இடம் பெற்றுள்ளது. காலத்தால் நீண்டதாகும்: எட்டு வருடங்களாக நடைபெற்றது. ஆசிரியர் சங்கங்களின் விரோதியாக விளங்கியது பலம் வாய்ந்த தனியார் நிறுவனமான யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரி நிருவாகமாகும். இதுவே ஆசிரிய சமூகம் பரந்த அளவில் ஆதரவு நல்கிய போராட்டமுமாகும். இலங்கையின் உயர் நீதிமன்றம் வரை இவ்விவகாரம் சென்றது. இவ்விவகாரம் ஆசிரியர்களின் அடிப்படை உரிமைகளை மையமாகக் கொண்டதாகும்.

**"...இது தொடர்பாக, ஆசிரியர்கள் சுதந்திரமாகப் பேசும் உரிமை உடையவராவர். இது சுதந்திர நாட்டிலுள்ள சுதந்திரப் பிரசைகளின் அடிப்படை உரிமையாகும். இந்த உரிமையை ஓர் ஊழியர் பயன்படுத்தினார் என்பதைக் காரணமாக வைத்து அவரை வேலை நீக்கம் செய்யமுடியாது.**

**"... ஆசிரியர் நிறுவனங்களில் அங்கத்தவர்கள் தமது மனக்குறைகளை எடுத்துக் கூற அனுமதிக்கப்படாததுடன் அவ்வாறு எடுத்துக் கூறுவதன் விளைவாக அவர்கள் தமது வேலையை இழக்கும் ஆபத்திற்கு உள்ளாக வேண்டியிருக்குமானால், அத்தகைய சங்கங்கள் இருப்பதனால் எவ்வித பயனுமில்லை."**

(இவ்விவகாரம் தொடர்பான வழக்கில் 1973ஆம் ஆண்டு தொழில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு)

**ஆரம்பம்**

அரசாங்க உதவி பெறும் பாடசாலையாக விளங்கிய யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரியில் 1954 இல் நான் ஓர் உதவி ஆசிரியராக நியமனம் பெற்றேன். அன்று தொடக்கம் வடமாகாண ஆசிரியர் சங்கத்திலும் ஓர் உறுப்பினராகவும் இருந்து வந்தேன், 1960இல் ஆசிரியர்கள் அனைவரினதும் ஏகமனதான எதிர்ப்பின் மத்தியிலும் பரி. யோவான் கல்லூரியை ஒரு தனியார் பாடசாலையாக நடாத்த பரி. யோவான் முகாமையாளர் தீர்மானித்தார். ஆசிரியர்கள் எதிர்பார்த்தது போல் நிகழ்ச்சிகள் அமைந்தன. 1960 ஐ அடுத்த ஆண்டுகளில் ஆசிரியர்களிடையே படிப்படியாக அதிருப்தி வளரத் தொடங்கியது. ஆசிரியரின் தொழில் நிலைமைகள் சீரழிந்தன. புதிய ஆசிரியர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்பட்டது.: இவர்களுக்குரிய சேமலாப நிதிப்பணம் கட்டப்படவில்லை: "நன்கொடை" என்னும் பெயரில் ஆசிரியர்களிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்பட்டன. ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு மறுக்கப்பட்டது. ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

உள்ளங்களில் உருவாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிருப்தி காலப்போக்கில் புறத்தே வெளி வீசியது. ஆசிரியர்களில் ஒரு பகுதியினருக்கு குறைந்த வேதனம் வழங்கும் முறை ஒழிக் கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி பரி.யோவான் கல்லூரி ஆசிரியரிடையே ஏற்பட்டது. இது தொடர்பான கோரிக்கை ஒன்று முதன் முதலாக 1966 இல் பரி.யோவான் கல்லூரி ஆசிரியர் சங்கத்தினால் கல்லூரி நிருவாகத் திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஆசிரியரின் திரண்ட சக்தியைக் கண்டு கல்லூரி நிர்வாகம் திகிலடைந்தது. ஆசிரியர்களிடையே தொழிற்சங்கம் பலம் பெற்றுவருவதை அவர்கள் உணர்ந்தனர். எனவே, தொழிற் சங்க நடவடிக்கைகளை முறியடிக்க கல்லூரி முகாமையாளர் கங் கணம் கட்டினார். 1967இல் பரி.யோவான் கல்லூரி அதிபர் பதவி வெற்றிடமானது. வெற்றிடத்திற்கு பாடசாலை ஆசிரியர் குழாத் திலிருந்து ஒருவரை நியமிக்குமாறு ஆசிரியர் சங்கம் கோரியது. கல்லூரி முகாமையாளர் இக்கோரிக்கையை உதாசீனம் செய்தார். வேறு கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்ற அதிபர் ஒருவர் பரி.யோவான் கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டார். பாடசாலையில் கட்டுப் பாட்டை நிலைநாட்ட வேண்டும் என்ற பெயரில் ஆசிரியரின் தொழிற்சங்க இயக் கத்தை கட்டுப்படுத்தத் திட்டம் தீட்டப்பட்டது.

## நேரடிப் போராட்டம்

1967 ஆம் ஆண்டிலும் சமவேதனம் பற்றிய கோரிக்கை மேலோங்கி நின்றது. இக்கோரிக்கை நிறைவேற்றப்படாவிடின் நேரடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற பிரேரணையை கல்லூரி ஆசிரியர் சங்கத்தில் நான் கொண்டு வந்தேன். எனினும், மேலும் சிலகாலம் அவகாசம் அளிக்க ஆசிரியர் சங்கம் தீர்மானித்தது. சில காலத்தின் பின்பு, கல்லூரி நிர்வாகம் தன்னிச்சையாகத் தான் தெரிவு செய்த ஒரு சிலருக்கு வேதன உயர்வு வழங்கியது. இத்தகைய கொடூரமான பாரபட்சம் குமுறிக் கொண்டிருந்த ஆசிரியர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி யது. 1967ம் ஆண்டு செப்டெம்பர் 30ந் திகதி 30 ஆசிரியர்கள் ஒரே முகமாக லீவு எடுத்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

கல்லூரி நிர்வாகம் தனது தாக்கு தலை ஆரம்பித்தது. மரபுக்கு முரணாக ஆசிரி யர் குழாத்தின் கூட்டங்களுக்கு கல்லூரி முகா மையாளர்கள் சமூகமளித்தனர். இதை ஆட் சேபித்த இரு ஆசிரியர்களுக்கு எதிராக குற்றச் சாட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. கல்லூரி ஆசிரியர்களின் போராட்டத்தை பரவலாக்க முனைந்தோம். வட மாகாண ஆசிரியர் சங் கத்தின் (தனியார் பிரிவு) வருடாந்தக் கூட்டத் தில் இப்பிரச்சினைகள் எழுப்பப்பட்டன. கல் லூரி நிர்வாகத்தின் சீர்கேடுகள் பற்றி பத் திரிகைகளில் செய்திகள் பிரசுரமாகின. எமது போராட்டத்திற்கு ஆதரவு பெருகுவதைக் கண்ட கல்லூரி நிர்வாகம் - இதை முளையில் கிள்ளி எறியும் நோக்குடன், என்னையும் இன்னும் இரு ஆசிரியர்களையும் வேலை நீக்கம் செய்தது. அப்பொழுது நான் வட மாகாணச் சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினராகவும், தேசிய சங்கத்தில் துணைச் செயலாளராகவும் இருந்தேன்.

எங்களில் மூவருக்கு வேலை யில்லாத நிலையில் 1968 உதயமாகியது. எமக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றங்கள் பற்றி எவ்வித விசாரணையுமின்றி நாம் வேலை நீக்கம் செய்யப்பட்டோம். இத்தகைய தான் தோன்றித்தனமான வேலை நீக்கத்தை எதிர்த்து வடமாகாண ஆசிரியர் சங்கம் பரவலான கிளர்ச்சியை ஏற்படுத்தியது. வட மாகாணத்திலுள்ள மற்றும் ஆசிரியர்களின் தொழிற் சங்கங்களையும் இணைத்த ஒரு கூட்டுச் சபையை ஏற்படுத்தியது. வேலை நீக்கம் செய்யப்பட்ட எங்களை மறுபடியும் வேலையில் அமர்த்தவேண்டும் என கல்லூரி நிர்வாகத்திடம் கோரிக்கை விடப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள கல்விமான்களும் ஆசிரிய தொழிற்சங்கங்களின் முதுபெரும் தலைவர்களும் இப்பிரச்சினையை சமரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகத் தீர்த்து வைக்க அல்லது மத்தியஸ்தத்திற்கு சமர்ப்பிக்க பல முறை முயன்றனர். ஆனால், தொழிற்சங்க விரோதக் கோலம் பூண்டு நின்ற கல்லூரி நிர்வாகத்தின் முன்னிலையில் இம் முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. 1968 மார்ச் 1ம் திகதி யாழ்ப்பாண நகர மண்டபத்தில் ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் கூடி தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

## கல்வித்திணைக்களக் காண்டம்

வளர்ந்து வந்த ஆசிரியரின் எதிர்ப்பு இயக்கம் தொடர்ந்து நேரடிப் போராட்டப் பாதையில் செல்லத் தவறியது அக்காலத்தில் ஆசிரியர் தொழிற் சங்கங்களில் நிலவிய சூழ்நிலையில் நேரடிப் போராட்ட நடவடிக்கை எடுக்கமுடியாமல் இருந்தது. மிகவும் விசனத்துக்குரியதாகும். இதன் விளைவாக, ஆசிரியர்களுக்கு சாதகமாக அமையாத அரங்குகளில் போராட்டத்தை நடத்தவேண்டி யிருந்தது.

ஆசிரியர் சங்கம் கல்வித் திணைக்களத்தை நாடியது. தனியார் பாடசாலைகளில் 1960க்கு முன்பிருந்து கடமையாற்றும் ஆசிரியர் ஒருவரை வேலை நீக்கம் செய்வதற்கு கல்வித் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறவேண்டும் என ஒரு சட்ட ஏற்பாடு இருக்கின்றது. எனது விவகாரத்தில் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் சிறந்த படிப்பினை உடையனவாகும். தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கு கல்வித் திணைக்களத்தின் பாதுகாப்பு உள்ளது என ஒரு சிலரிடையே நிலவிய நம்பிக்கை தகர்த்தெறியப்பட்டது. எங்களின் வேலை நீக்கம் பற்றிப் பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சரிடம் வினா எழுப்பப்பட்ட பின்புதான், எமது வேலைநீக்கம் பற்றிய ஒரு பூரண விசாரணையை கல்வித் திணைக்களம் மேற்கொண்டது. இதன் பின்பும் விசாரணை நீண்ட காலமாக நடைபெற்றது. 1 1/2 வருடங்களின் பின்பு, வேலைநீக்கம் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், குற்றஞ் சுமத்தப்பட்டு விசாரணையில் பங்கு பற்றிய எனக்கு விசாரணையின் தீர்ப்பு வழங்கப்படவில்லை. இத்தகைய விசாரணை இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு ஒவ்வாத தாகும். இவ்விசாரணை ஒரு கேலிக் கூத்தாக அமைந்தது. பின்பு தொழில் நீதி மன்றத்தில் இவ்விசாரணை பற்றிய நிகழ்ச்சிக் கோவையை சமர்ப்பிக்குமாறு ஆசிரியர் விடுத்த கோரிக்கையையும் கல்வித் திணைக் களம் நிராகரித்தது. தொழில் நீதிமன்றத்தில், கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் சாட்சியமளித்த வட மாநிலக் கல்வி அதிபதி விசாரணை நிகழ்ச்சிக் கோவை இரகசியமான அரச பத்திரம் எனக் கூறினார்.

நான் வேலையிழந்து நின்றேன்: மாதாந்த வேதனம் கிடைக்கவில்லை: வேறு வருவாயுடைய நிலையிலும் நான் இருக்கவில்லை. இந்நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த பல சக்திகள் முயன்றன. பல வகையான தந்திரங்களைக் கையாண்டும் நெருக்குதல்களைக் கொண்டு வந்தும் இப்போராட்டத்தைக் கைவிட்டு நான் சரணாகதி அடையவேண்டுமெனத் திட்டமிட்டன. ஒன்றரை வருடகாலமும் பரி.யோவான் கல்லூரி ஆசிரியர்கள் ஒவ்வொரு மாதமும் பணம் சேகரித்து எனக்கு உதவி, இம் முயற்சிகளை முறியடித்தனர்.

## நீதிமன்றத்தில் களம் அமைத்தல்

1969 நடுப்பகுதியில் சட்ட வல்லுனர்களின் ஆலோசனையின் பிரகாரம் சங்கம் தனது போராட்டத்தை தொழில் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றது. வழக்குத் தொடர்பான செலவுக்காக "ஆசிரியர் பாதுகாப்பு நிதி" ஒன்று ஆசிரிய சங்கங்களினால் ஆரம்பிக்கப்பட்டது. எனது நண்பர்களும் இவ்விடத்தில் எங்கள் மேல் நல்லெண்ணம் கொண்டவர்களும் பணம் சேர்த்து உதவினர். தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

1970 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அரசாங்கம் மாறியது. தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையில் தொழிற் சங்கரீதியில் தண்டிக் கப்பட்டவர்களுக்கு விமோசனம் அளிக்கப்படும் என அரசாங்கம் கூறியிருந்தது. இவ்விடயம் பற்றி அகில இலங்கை ஆசிரியர் சங்கங் களின் சம்மேளனம் கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்தும், எவ்வித பயனும் ஏற்படவில்லை. அரசாங்க மாற் றத்தினால் பிரச்சினைகள் தீரும் என ஒரு சிலர் கருதியிருந்தமையும் கருத்தற்றதாகியது.

தொழில் நீதிமன்றத்தில் வழக்கு நான்கு வருட காலமாக நடைபெற்றது. இறுதியில் எனது வேலைநீக்கம் நியாயமற்றது என தொழில் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனக்கு வேலை திரும்பவும் வழங்க வேண்டும் அல்லது ரூபாய் 35,000/- நஷ்டஈடு வழங்கவேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (20,000 ரூபாய் பாக்கிச் சம்பளமாக வழங்கவேண்டும் எனவும் கூறியது). ஆனால், கல்லூரி நிர்வாகம் இத்தீர்ப்பை எதிர்த்து இலங்கையின் உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தது. உயர் நீதி மன்றத்தில் ஏறக்குறைய 2 1/2 வருடங்கள் கழிந்தன. கல்லூரி நிர்வாகத்தின் மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. தொழில் நீதிமன்றத் தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப் பட்டது.

நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் நடைபெற்ற சட்டப் போராட்டத்தில் சங்கம் வெற்றி பெற்றது உண்மைதான். ஆசிரியர் சொன்னதை சொல்கிற உரிமை அவருக்கு உண்டு. அவர் செய்ததை செய்கின்ற உரிமை அவருக்கு உண்டு என்பவற்றை நிலைநாட்ட எட்டு வருடங்கள் செல்ல வேண்டியிருந்தது. இத்தகைய நிலையைமாற்றி அமைக்க வேண்டியதன் அவசியத்தை ஆசிரிய தொழிற் சங்கங்கள் உணர்ந்து செயல் புரியவேண்டும்.

## தொழிற் சட்டத்தின் குறைபாடு

இந்நாட்டின் தொழிற் சட்டத்திலுள்ள அடிப்படைக் குறைபாட்டைச் சுட்டிக்காட்ட இவ்வழக்கு உதவுகின்றது. ஒரு தொழிலாளி யின் வேலைநீக்கம் நியாயமற்றதென தொழில் நீதிமன்றம் கருதுகின்ற பொழுதிலும், மறு படியும் அவருக்கு வேலை வழங்குவதற்குப் பதில் நஷ்டஈடு வழங்கலாம் என தீர்ப்பளிக்க இடமுண்டு. இதன் மூலம் முதலாளிகள் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து விட்டு நஷ்டஈட்டை வழங்க முன்வருவர். குறிப்பாக ஒரு தொழில் நிலையத்தில் தொழிற் சங்க இயக்க வளர்ச்சியை தடை செய்வதற்கு நியாயமற்ற முறையில் தொழிற் சங்கவாதி களை வேலை நீக்கம் செய்து நஷ்ட ஈடு செலுத்தி தப்புவதற்கு இன்றைய தொழிற் சட்டம் இடமளிக்கிறது.

உயர்நீதி மன்றத் தீர்ப்பு 1976 ஆரம்பத்தில் வழங்கப்பட்டது. மறுபடியும் என்னை வேலையில் அமர்த்துமாறு பல்வேறு ஆசிரிய தொழிற் சங்கங்கள் பரி.யோவான் கல்லூரி நிருவாகத்தைக் கோரின. எனினும், முகாமையாளர் இக்கோரிக்கையை நிரா கரித்து நஷ்டஈட்டைச் செலுத்தினர். ஒரு தொழிற்சங்கவாதியான ஆசிரியருக்கு வேலை வழங்குவதிலும் பார்க்க 35,000 ரூபாயை செலுத்துவது மலிவானது என்பதை முகாமை யாளர் உணர்ந்தனர்: இவ் வுண்மையை ஆசிரிய தொழிற் சங்கங்கள் உணர வேண்டும்.

நீதிமன்றங்களும் சட்டங்களும் தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளுக்கு போதியளவு பாதுகாப்பு உடையவை அல்ல என்பதே பரி.யோவான் போர் தரும் படிப்பினையாகும். தொழிற்சங்கத்தின் நேரடிப் போராட்டமே ஒரே ஒரு மார்க்கமாகும்.

"உரிமைப்போர் என்றும் முடி வடைவதில்லை: போர்க்களம் அமைதி பெறுவதில்லை:

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியும் இனமுரண்பாடும்

தொகுப்பு : ஆ.தீபன் திலீசன்

ஒரு நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அந்நாட்டின் கல்விமுறை அமைந்திருக்கும். இக்கோட்பாடுதான் நடைமுறையிலுள்ள பொருளாதார அரசியல் அமைப்பு முறையை மாற்றுவதா, அல்லது பேணுவதா? என்பதைத் தீர்மானிக்கும் காரணியாகும்.

ஆதலால், ஒரு நவகாலணித்துவ அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்னும் முறையில் இலங்கையின் கல்வி அமைப்பு முறையை தீர்மானிக்கும் காரணிகளை இனங்காண வேண்டும்.

இலங்கை பல இன, பல மத மக்களை உள்ளடக்கிய நாடாகும். ஆனால் அதன் சமூக பொருளதார அமைப்பானது பேரினவாதத்தன்மை கொண்டதாகும். அதாவது சிங்கள, பௌத்தத்தை முதன்மைப் படுத்தும் அடிப்படையில் அமைந்துள்ளது.

இந்த அமைப்பின் தன்மை 1983 ஜூலையில் நடைபெற்ற தமிழர விரோத இன சங்கார நடவடிக்கையில் இருந்து ஆரம்ப மானது. இதனால் 400 கோடி ரூபா நாட்டிற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

இவ்வாறான சூழ்நிலையிலேயே தற்போதைய கல்வி அமைப்பு முறையும் அதன்மூலம் உருவாக்கப்படும் எதிர்கால சந்ததியும் இதே பேரினவாதத் தன்மை கொண்டதாக அமைந்துள்ளமை ஆச்சரி யத்துக்குரிய ஒன்றல்ல.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக் காலத்தில் நிலவிய முதலாளித்துவ அமைப்பு முறையிலும் தற்போதைய ஆட்சிமுறையிலும் கல்வித்துறை முக்கிய கொள்கை வகுப்பு நிறுவனமாக விளங்குகிறது.

இதனால் –

கல்வி அமைப்பு முறையின் மூலம் அச்சமூக அமைப்பின் தத்துவார்த்த நோக்கு வலுப்பெறுகின்றது. எனவேதான் இந்த பேரினவாத ஆதிக்க சிந்தனையை முறியடிப் பதற்கு நாம் தத்துவார்த்த ரீதியில் தலையிட வேண்டியுள்ளது.

எமது கல்வி அமைப்பில் பேரினவாத அரசியல் சிந்தனை செயற்படுகின்றதா? என்ற கேள்வி எழும்போது நாம் கடந்த 200 ஆண்டுகள் முன்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது.

19ம் நூற்றாண்டில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் நாடளாவிய ரீதியில் அரசியல் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொண்ட போது– மத ரீதியான பாடசாலை அமைப்பு முறையை இந்நாட்டின் சகல பகுதிகளிலும் நிலைநிறுத்த ஊக்குவித்திருந்தனர். இதனால் அன்று நிலவிய ஒழுங்கமைக்கப்படாத பௌத்த பிரிவான கல்வி முறைக்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் ஏற்கனவே உருவாக்கிய முதலாளித்தவ உற்பத்தி முறைமையை பலப்படுத்தவதற்காக ஒரு சமூக பிரிவினரை இக்கல்வி முறை மூலம் உருவாக்குவதே பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் உண்மை நோக்கமாக இருந்தது.

இந்நடவடிக்கையில் பிரிவேன கல்வி முறை அற்றுப்போனது. இக்காலத்தில் இலங்கைக்கும் சமூகத்தின் வர்க்கத்தில், இலங்கைச் சமூகத்தின் வர்க்க முறையில் விரைவான மாற்றம் ஏற்பட்டதோடு கரையோரப் பிரதேச நிலப் பிரபுரபுத்துவ அதிகார வர்க்கமானது வணிக முதலாளித்துவ வர்க்கமாக உருமாற்றம் பெறத் தொடங்கியது. இதனால் இவர்கள் கணிசமானபொருளாதார முன்னேற்றம் அடைந்ததுடன் இந்நாட்டில் சமூக அரசியல் அதிகாரத்தைப் பெறுவதிலும் முனைப்பாக ஈடுபட்டனர்.

இதன் அடிப்படையில் இவ்வர்க்கம் சிங்கள இன, மத உணர்வைப் பயன்படுத்தி மிசனறி பாடசாலை முறைக்கு எதிராக சிங்கள பௌத்த தேசியவாத இயக்கத்தை முடுக்கிவிட்டது. முதலாளித்துவ கல்வி முறையில் ஆரம்ப கட்டத்தில் மதம் முக்கிய பங்கை வகித்துள்ளது.

பௌத்த - கத்தோலிக்கர் ( ஏனைய கிறிஸ்தவர்கள் உட்பட) களுக்கிடையில் மோதல் வடிவம் பெற, அரசாங்கமானது பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டது. இதனால் பேராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தது. உண்மையைக் கூறினால்... இது சிங்கள பௌத்த தேசிய வாத இயக்கத்தின் குறிப்பிடக் கூடிய திருப்பு முனையாகும்.

தம்மை நிலை நிறுத்திக் கொள்வதற்கான வழி முறைகளுக்கு முக்கிய சாதனமாக மொழியை தேசிய பௌத்த முதலாளித்தவ வாதிகள் பயன்படுத்தினர்.

ஏனைய வர்க்கத்தினரதும், சமூகப் பிரிவினரதும் ஆதரவை வென்றெடுத்து தமது அரசியல் ஆதிக்கப் பிடியை நிலை நிறுத்துவதற்கு மொழி சுலோகத்தை பயன்படுத்தினர். இதனால் காலணித்தவ நிர்வாக மொழியாக விளங்கிய ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்கள மொழியை இடம் பெறச் செய்வதற்கான போராட்டத்தினை முன்னெடுத்தனர். சர்வதேச ஏகாதிபத்திய அமைப்பின் முரண்பாடு காரணமாக காலணித்துவம், நவகாலணித்துவமாக மாற்றம் பெற்றபோது சிங்கள பௌத்த முதலாளித்தவ வாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இது 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இடம்பெற்று சிங்களமொழி அரசகரும மொழியாக பிரகடனப்படுத்தப் பட்டது. சிங்கள மொழி அரச கரும மொழியாக்கப்பட்டபோது முரண்பாடுகள் தோன்றலாயிற்று.

இந்நாட்டின் இரண்டாவது பெரும்பான்மை இனத்தவரின் தாய் மொழியான தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது. அத்துடன் வித்தியாலங்கார வித்தியோதயப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டமையால் தமிழ்மொழி அவமதிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. சிங்கள பௌத்த இனத்துவத்தின் தேவையை திருப்தி செய்வதே வித்தியலங்கார, வித்தியோதய பிரிவேனாக்களைப் பல்கலைக்கழகங்களாக மாற்றியதன் நோக்கமாக இருந்தது.

இச்செயலானது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்கள் உருவாகுவதற்கு வழியமைத்தது. அண்மைக்காலமாக நிலவிவரும் அரசியல் சூழ்நிலையை தவிர்த்து முன்னைய காலங்களை நோக்குமிடத்து இப்பல்கலைக்கழங்கள் முழுமையாக இன அடிப்படையிலேயே இயங்கி வந்துள்ளன.

ஏற்கனவே சீரழிந்திருந்த இன உறவுகளானது பல்வேறு தரப்படுத்தல்களின் அறிமுகப்படுத்தலினால் மேலும் மோசமடைந்தது இதுவே தமிழ் மக்கள் தமது உரிமைக்காக போராடுவதற்கான யதார்த்த சூழ்நிலையைத் தோற்றுவித்தது.

அரசின் இம்மடமைத்தனமான புத்திசாதுரியமற்ற நடவடிக்கையானது தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள் மத்தியில் மிக உறுதியான தேசிய உணர்வு ஏற்படுவதற்கு வழி சமைத்தது.

1970களின் முற்பகுதியில் சிங்கள பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தீவிரவாதப் போக்கு இடம்பெற்றது போலவே வடக்கிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலும் தீவிரவாத இளைஞர் இயக்கத்தை தோற்றுவித்தது. எமது நாட்டில் கல்வித் துறையில் சிங்கள தேசியவாதம் இரட்டை வேடம் கொண்டுள்ளது. ஒருபுறம் ஜனநாயகம் மற்றும் இலவசக் கல்விக்கான குரலும் மறுபுறம் கல்வி உரிமைகளை அடக்கு வதற்கான தீவிர முயற்சியும் இடம்பெற் றுள்ளது. தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

இலங்கையில் உண்மையான தேசிய ஜனநாயகம் இருந்திருக்குமாயின் சிங்களம், தமிழ், ஆங்கிலமொழிகள் தேசிய மொழிகளாக ஆக்கப்பட்டிருக்கும். இவ்வாறு நடைபெற்றிருப்பின் இனமுரண்பாட்டிற்குப் பதிலாக வர்க்க முரண்பாடே கூர்மை அடைந்திருக்கும். தற்போது கூட மும்மொழிக் கொள்கைகள் தொடர்பாக அரசு பிரச்சாரம் செய்தாலும் அதனை முழுமையாக அமுல் படுத்துவதில்லை. இதற்குக் காரணம் பேரினவாத அரசியலின் இரட்டைமுகம் என்பதே உண்மையாகும்.

இலங்கையின் தேசிய இயக்கத்தின் அப்போதைய ஒருதலைப்பட்சமான ஆதிக்கப் போக்கின் காரணமாக பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியில் சிறுபான்மை யினரின் உரிமைகளை மறுதலிக்கும் இனவாத உணர்வு மேலோங்கியது.

இதன் விளைவாக தமிழ் சிறுபான் மையினர் மத்தியில் தமது அடிப்படை உரிமைக்காகப் போராடும் இன உணர்வு தோன்றலாயிற்று. மொழி, மதம், கலாசாரம், தாயகம் என்பவற்றைப் பேணும் வகையில் தனி அரசினை நிறுவுவதற்கான போராட்டத்துக் குரிய ஆயுதம் தாங்கிய தேசிய விடுதலை இயக்கம்தமிழ் மக்கள் மத்தியில் பிறப்பித்த மையே இவ்வின முரண்பாட்டின் தர்க்க ரீதியான முடிவாகும்.

**விளைவு:**

மனித இனத்தின் முதன்மைத் தேவைகளான பாதுகாப்பையும், தாயகத்தை யும் அடியொற்றி எழும் தேசிய இனப்பிரச்சினை அல்லது இன முரண்பாடு, இந்நாட்டில் சமூக பொருளாதார நிலைமையை பெரிதும் பாதித்தது. மிகப்பெரிய அரசியல் நெருக்கடியை தோற்று வித்தது. மறுபுறத்தில் சிங்கள, தமிழ் மக்க ளுக்கு இடையிலான உள்நாட்டு யுத்த வடி வினைப் பெற்றது. இதனால் 1983 இல் இருந்து பல நூறு கோடி பொருளாதார நட்டத்தை ஏற்படுத்தியதுடன் இக்கோரயுத்தம் இலட்சக்கணக்கான உயிர்களையும் காவு கொண்டது.

இலங்கையின் ஆளும் வர்க்க மானது தேசிய வருமானத்தின் 1/4 பங்கிற்கு மேற்பட்ட விதத்தில் யுத்தத்திற்கான செலவை மேற்கொண்டது. இதன் விளைவாக இரு தேசிய இனங்களுக்கும் இடையிலான பகைமை அதிகரித்தது.

பிரித்தானியர் இந்நாட்டை விட்டு சென்ற பின்னர் அதிகாரத்துக்கு வந்த நவ காலணித்தவ முதலாளித்துவத்தின் பிரதிநிதி களான சிறி லங்கா சுதந்திரகட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் முறையே தாம் இணங்கிச் செய்து கொண்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் டட்லி - செல்வா ஒப்பந்தம் ஆகியன கிழித்தெறியப்பட்டது.

இதற்கு தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிராக பெரும் பான்மை சிங்கள மத்தியில் நிலவியிருந்த ஜனநாயக விரோத மனோநிலையே பிரதான காரணமாகும். இந்த உணர்வைப் பயன்படுத்தியே இவ் இரு தலைவர்களும் தேர்தல்களில் வென்றிருந்தனர். இலங்கை யின் இன முரண்பாட்டை தீர்ப்பதற்கு முதலா ளித்துவ, குட்டி முதலாளித்துவ அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளின் தலைமைகளால் எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் ஆயுதம் தாங்கிய இளைஞர்களாலும், மாண வர்களாலும் இது தேசிய விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது.

இனப்பிரச்சினைக்குரிய தீர்வை அடைவதற்கு போர்தான் ஒரே வழி என்பதை சமாதானத்தை நேசிக்கும் ஆசிரியர்களாகிய நாம் கருதவில்லை. அதேவேளை தமிழ் இளைஞர்களின் சமாதான முயற்சிகள் தோல்வியுற்று தமது குறிக்கோளை அடை வதற்கு ஆயுதப் போராட்டப் பாதையை நாடிய விதத்தினை வரலாற்றின் அடிப்படையில் நாம் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

தமிழ் இளைஞர்களின் இப் போராட் டம் காரணமாக, அரசு வடக்கு கிழக்கு மாகாணங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என பிரகடனப்படுத்திய அதேவேளை தமிழ் போராளிகளும் தனி நாடு எனும் இலக்கை அடைந்து விடவும் இல்லை, இவ் வேளை திம்புப் பேச்சுவார்த்தையும் தோல்வி யடைந்த நிலையில் அரச படைகளின் இன ஒழிப்பு நடவடிக்கை அதிகரித்தமையால் விடுதலைப்போராளிகள் அரச படைகளுக்கு எதிரான பதில் தாக்குதல்களை மேற் கொண்டனர்.

ஆயுதமேந்திய தமிழர் விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி உலகம் தழுவிய தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான தார்மீக ஆதரவு தென்னாசிய பிராந்தியத்தில் தற்போது நிலவிவரும் பூகோள ரீதியான அரசியல் நிலமையில் இந்தியஅரசு தலையீடு செய்தது.

இதன் விளைவாக மாகாண சபையை அமைக்கும் யோசனை முன் மொழிவதற்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1987 காலப்பகுதியில் மாகாண சபை முறைமை தொடர்பாகவும் அதனால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் தொடர்பாகவும் ஆராய்வது மிக பரந்தது ஆனால் இன்று வடக்கு கிழக்கில் நடைபெறும் மாகாண சபை ஆட்சி முறையின் ஊடாக அதிகாரத்தின் வரம்புகளை அறிந்து கொள்ள முடிவதோடு தமிழ் தரப்பால் மாகாண சபை முறை நிராகரிக்கப்பட்ட நியாயப்பாட்டை அறிய முடிகின்றது.

இன்று எமது நாட்டில் நிலவிய கோர யுத்தத்தின் முடிவில் ஆயுதங்கள் மௌனிக்கப் பட்ட நிலையிலும் இனப் பிரச்சினை மட்டும் நீறுபூத்த நெருப்பாகவே இருக்கின்றது.

* * *

> *"ஆங்கிலத்தையும் ஆங்கிலேயரையும் எமக்குத் தனித்த ஆதர்ஷமாகக் கொள்ளாது, எமது தேவைக்கும் இயல்பிற்கும் ஏற்ப விஞ்ஞானக் கல்வியை வளர்த்தல் வேண்டும்."*
>
> கலாநிதி.க.கைலாசபதி
>
> ஆசிரிய உலகம் - சித்திரை 1967



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மும்மொழித்திட்டம் : மெய்யான தீர்வா? கற்பனா வாதமா?

துு.இராஜநாயகம்

சிங்கள, தமிழ், முஸ்லீம், ஆசிரியர்கள் ஆயிரக்கணக்கில் பங்குபற்றிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 20 – வது வருடாந்த மாநாடு 1974ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ம், 2ம், திகதிகளில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தேறியது.

அம்மகாநாட்டில், சங்க மத்திய குழுவால் முன்வைத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுள் தமிழ்மக்களைப் பொறுத்த வரையில் பின்வருவனவற்றை முக்கியமான வைகளாக கருதலாம்.

- தமிழ் மொழியைத் தேசியமொழியாக அங்கீகரித்தல்.
- கிழக்கிலங்கையில் ஓர் பல்கலைக் கழகத்தை நிறுவவேண்டும்.
- உயர்கல்வியில் சாதாரண கல்விவசதி செய்து கொடுப்பதற்காக -

(அ) பரீட்சைகளில் காட்டும் திறமைக்கு ஏற்ற தகுதியில் தெரிவு செய்தல் வேண்டும்.

(ஆ) மொழியடிப்படையில் உயர்கல்வித் தெரிவில் நடைபெறும் தரப்படுத்தலை இரத்துச் செய்தல் வேண்டும்.

(இ) முன்னேற்றமடையாத பிரதேசங்களின் கல்வி வளர்ச்சிக்காக அவசிய பாட சாலைகளையும், ஆசிரியர்களையும் வழங்க வேண்டும்.

- தமிழ் இன மாணவர்களுக்கு தமிழ் மொழியிலேயே கல்வி கற்பதற்கு இருக்கும் உரிமையை விஸ்தரித்தலோடு இரு இனங்களுக்குமிடையில் உள்ள சகோதரத் துவத்தைக் கட்டியெழுப்புவதற்காக, தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தையும், சிங்களப் பாடசாலைகளில் தமிழ்ப்பாடத்தையும் இரண் டாம் மொழியாக ஒழுங்குசெய்ய வேண்டும். (மகாநாட்டு அறிக்கை, 4ம்பகுதி, பக்கம் - 08)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் இன-மத-மொழி வேறுபாடற்ற சமத்துவ நோக்கில், மேலே ஈற்றில் குறிப்பிட்ட இரு மொழித் திட்டத்தின் உள்ளார்ந்த அர்த்தத்தின் பின்னணியில் இக்கட்டுரை முனைகிறது.

இன ஒற்றுமை வளர்க்குமென இன்றைய அரசினால் பிரகடனஞ் செய்யப் பட்டுள்ள மும்மொழித்திட்டம் மெய்யான தீர் வாகுமா? அன்றிக் கற்பனை வாதமா? என ஆராய இக்கட்டுரை முனைகிறது.

மற்றைய மாகாணங்களில் உள்ள கல்லூரிகள் சிலவற்றிலும் தமிழ் மாணவர் சிங்களத்தையும் சிங்கள மாணவர் தமிழையும் பயின்று வந்ததை நாமறிவோம். ஆயினும் இந்த நிலை முன்னரே கூறியது போல, கல்லூரிகள் என்றழைக்கப்படும். ஆங் கில மொழிமூலம் கல்வி புகட்டிய பாடசாலை களிலேயே நிலவியது. அத்தோடு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய மாகாணங்களில் சிங்கள மாணவர் பெரும்பான்மையாக பயின்ற பாடசாலைகளில் ஆசிரியர்களும் பெருமளவில் ஆங்கிலமொழிமூலம் பல்வேறு பாடங்களையும் கற்பித்தனர்.

இவற்றால் நாட்டில் உயர்மட்டம் ஒன்றிலே சிங்கள-தமிழ் சமுகநிலை நிலவியது. ஆயினும் தொழிலாளி — விவசாயிகளின் பிள்ளைகள் பயின்ற சிங்கள-தமிழ்மொழி மூலப்பாடசாலைகளில் இயலுமானவிடத்து ஆங்கிலம் இரண்டாவது மொழியாகக் கற்பிப்பதே தவிர, சிங்களமோ, தமிழோ இரண்டாம் மொழியாகவோ மூன்றாம் மொழியாகவோ கற்பிக்கப்படவில்லை. இக்குறைபாட்டால் சிங்கள-தமிழ் தொழிலாளி, விவசாயிகளிடையே விரதமோ குரோதமே ஏற்பட்டதாகக் கூறமுடியாது.

1956-ம் ஆண்டுப் பொதுத்தேர்தலை முன்னிட்டு ஐ.தே.கட்சியும் ஸ்ரீ.ல.சு.கட்சியும் "சிங்களம் மட்டும்" என்ற கொள்கையை பிரகடனஞ் செய்தபோது அதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாகவே தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கப்படாதொழிந்தது. அத்தோடு இப் பிரகடணத்தாலும், இதைவைத்து அரசியல் கட்சிகள் செய்த பிரசாரங்களாலும் "சிங்களம்-தமிழ்" என்ற கோஷங்கள் பிறந்தன. இன வேறுபாடும் முன்னெப்போதுமில்லாதவாறு பெருமளவில் தோன்றிக் கூர்மையடையத் தொடங்கியது.

## உரிமைக் கோஷங்கள்

இந்த நாட்டினை விசுவாசிக்கிற ஓர் இனம், இந்த நாட்டின் விடுதலைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் பாடுபட்ட ஓர்இனம், நாடு விடுதலைபெற்று எட்டு ஆண்டுகளில் பெரும்பான்மையினத்தைப் பிரதிநிதுத்துவப்படுத்திய ஓர் அரசால் ஒதுக்கித்தள்ளப்பட்டபோது அதனால் பாராதூரமான அரசியல் விளைவுகள் ஏற்பட்டன. பொருளாதார விளைவுகளும் பல. இவற்றுக்குமேலாக, தனிமனித உரிமை நசுக்கப்பட்டதான விளைவே அந்த இனத்தைப் பெரிதும் பாதித்தது.

இப்பாதிப்பின் விளைவே சமஷ்டிக் கோஷத்தையும், சம அந்தஸ்துக் கோஷத்தையும், பிரிவினைக்கோஷத்தையும் காலத்துக்குக் காலம் தோன்றிக் கூர்மையடையச் செய்தது. இந்த விளைவுகளும் கோஷங்களும் ஏற்பட அரசியல்வாதிகளும் காலாயிருந்தனர்.

"பண்டா-செல்வா ஒப்பந்தம் அமுல் செய்யப்பட்டிருந்தால் இனக்கலவரங்கள் ஏற்பட்டிரா" என அப்போது யாழ்ப்பாணத் துக்கு வருகைதந்த ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கத் தலைவர் திரு.ஆரியவன்ஸா குறிப்பிட்டார் இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் சிங்களம்மட்டும் சட்டத்துக்கு எவ்வகையிலும் குந்தகம் ஏற்படாத வகையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் நிருவாக மொழியாக இருக்கும் என்பதும், அதனால் தமிழ்மக்கள் இந்நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளல்லர் என்ற நிலை தோன்றியிருக்குமா? என்பதும் வேறு விடயங்கள்.

எனினும் "பண்டா-செல்வா ஒப்பந்தம்" எவ்வாறு கிழித்தெறியப்பட்டது. ஒப்பந்தத்தை யார் யார் எதித்தார்கள் ஏன் எதிர்த்தார்கள் என்பதெல்லாம் நன்கு ஆராயப்பட வேண்டிய வினாக்கள் ஆகும். திரு. ஆரியவன்ஸா கூறியது உண்மையே என ஏற்றுக் கொண்டால், அவ்வொப்பந்த அமுலால் இன ஒருமைப்பாடு முழுமையாகத் தோன்றாவிட்டாலும் கூட, இனவேறுபாடும் குரோதமும் கலவரங்களும் ஏற்பட்டிரா என்பதும் உண்மையாகும். அவ்வாறெனின் அவ்வொப்பந்த அமுலை எதிர்த்தவர்கள், (அதாவது - பிரச்சினைக்கு முழுமையான நேரான தீர்வு அல்ல எனினும் பிரச்சினையை மேலும் வளரவிடாது மங்கச்செய்திருக்க கூடிய ஒன்றினை எதிர்த்ததன் மூலம் பிரச்சினையைக் கூர்மையடையச் செய்தவர்கள்) இன்று அப்பிரச்சினைக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வுகாண மும்மொழிக் கல்வித்திட்டம் உதவும் என எண்ணி அதனைப் புகுத்த முன்வந்துள்ளமை பாராட்டுக்குரியது.

**பிரச்சனை என்ன? தீர்வு என்ன?**

ஆயினும் இன்றுள்ள பிரச்சினை ஓர் இனத்தின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள பிரச்சினையாகும்.

இப்பிரச்சினையின் காரணமாகவே நாட்டில் ஒருமைப்பாடு சீர்குலைந்துள்ளது. இதனைத் தீர்க்க விதந்துரைக்கப்பட்ட தீர்வு, சிங்கள மாணவர் தமிழையும் தமிழ் மாணவர் சிங்களத்தையும் மூன்றாம் மொழியாக (இரண்டாம் மொழியாக வல்ல) கற்குமுகமாகப் பாடத்திட்டங்களை மாற்றியமைத்தலாகும்.

நோய் ஒன்று, மருந்து வேறெதற்கோ!

இந்த நிலையில் இனவாதத்தையே அரசியலாகக்கொண்டு அரசியல் வாதிகளின் பிடியுட்சிக்கியும், நாட்டில் நிலவும் பெருந் தேசியவாத அரசுகளாலும் அவ்அரசுகளை ஆட்சியிலமர்த்தும் பெருந்தேசியவாத உணர்வுகொண்ட மக்களாலும் இந்நாட்டின் இரண்டாந்தரப் பிரைஜகளாக வல்ல, மூன்றாந்தரப் பிரைஜகளாகவேனும், மதிக்கப்படாத நிலைமைக்குள் அகப்பட்டுத் திணறும் தமிழ் மக்களின் அடிமைப்பாட்டு நோயையும் நோய் திணிப்போரின் பெருந்தேசிய வாதத்தையும் இம்மருந்து தீர்க்குமா?

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒருவரையொருவர் மதிப்பதும், ஒருவருடைய உரிமைகளை ஒருவர் பேணுவதுமான நிலை ஏற்பட இம்மருந்து உதவுமா?

"எல்லோரும் இந்நாட்டுமக்கள்" என்ற ஒருமைப்பாட்டுணர்வு சிங்கள-தமிழ் இன மக்களிடையே தோன்றவேண்டுமானால் அவர்களிடையே உயர்வு-தாழ்வு அற்றநிலை உன்று உருவாக்கப்பட வேண்டும். இந்த நாட்டில் சம உரிமை சம அந்தஸ்தும் உடையோம் என்ற உணர்வு இரு சராசரியிடையேயும் உதித்து நிலைக்க வேண்டும். இவற்றைச் சாதிக்க மும்மொழிக் கல்வித்திட்டத்தால் முடியுமா?

கடந்த காலங்களில் புகுத்தப்பட்ட கல்வித்திட்டங்கள் சமூக உறவுகளை எவ் வகையிலாவது மாற்றியுள்ளனவா? தொழில் முன்னிலைப்பாடங்களைப் பயிற்றுவதால் வேலையில்லாத் திண்டாட்டம் பறந்துவிடும் என்று பறைசாற்றப்பட்டது. அவ்வாறு நிகழ்ந்ததா? அன்றி அவ்வாறுநிகழ ஒரு சிறு வழிதானும் பிறந்ததா?

சமூக அமைப்பிலும், சமூக மனப்பாங்கிலும் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டாலொழிய இன ஒருமைப்பாடு ஏற்படமுடியாது. இப்புரட்சிகர மாற்றத்தை உத்தேசிக்கப்பட்ட மும்மொழிக் கல்வித்திட்டம் கொணருமா? என்பது தெளிவான விடை காணப்படவேண்டிய ஒரு வினாவாகும்.

கல்வித்திட்டம் எதுவும் சமூக அமைப்பினை மாற்றியமைக்க முடியாது. அதற்கு வரலாறும் இல்லை. சுதந்திர இந்தியாவின் பிதாமகர் மகான் காந்திஜியின் வார்தா கல்வித்திட்டம் இந்திய சமூக அமைப்பையோ, சமூக மனப்பாங்கையோ, மொழி இனவெறியையோ மாற்றியமைத் திருக்கும் என எண்ண இடமில்லை.

**கல்வித்திட்டமா, சமூக அமைப்பா?**

கல்வித்திட்டம், சமூக அமைப்பு என்பனவற்றில் பெருமாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பது உண்மை. ஆனால், இவையிரண்டுள் எதுமுதலில் ஏற்பட வேண்டும். என்பது சிந்திக்கப்பட வேண்டியது. கல்வித்திட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் சமூக அமைப்பினையும் சமூக உறவுகளையும் கல்வித்திட்டத்தையும் மாற்றியமைக்க வேண்டும்.

சமூக அமைப்பு எவ்வாறு மாற்றமடைய வேண்டும் இன்றைய சமூக அமைப்பின் கீழ் பணக்காரன் மேலும் பணக்காரன் ஆகின்றான். ஏழை மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழையாகின்றான். சமூக மேல்மட்டத்திலுள்ள வர்களின் பிள்ளைகள் பெரிய பெரிய கல்லூரி களில் கல்விகற்க வசதிகள் கிடைக்கின்றன. ஏழைத் தொழிலாளியின் மக்கள்-ஏழை விவசாயியின் மக்கள் கிராமப்புறத்துப் பாட சாலைகளில் தான் எழுத வாசிக்கப் படிக்க வேண்டியுள்ளது. இக்கிராமப் புறத்துப் பாட சாலைகளுக்கு நல்ல தகைமைபெற்ற ஆசிரி யர்கள் அனுப்பப்படுவதில்லை. அனுப்பப்பட்டா மலும் குறுகிய காலத்துக்குமேல் அவர்கள் அங்கு தங்கியிருக்க விரும்புவதில்லை.

சமூக மேல்மட்டத்திலுள்ளவர்கள் தேவையானவற்றைச் சிரமமின்றிப் பெற்றுக் கொள்ள முடிகிறது. வசதியற்றவர்கள் அத்திய வசிய உணவுப் பண்டங்களையே பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

சுருங்கச் சொன்னால், தமிழனே தமிழனைச் சுரண்டும் நிலைதான் இன்றைய சமூக அமைப்பினைப் பிரதிநிதுத்துவப்படுத்து வதைக் காட்டுகின்றது. இவ்வாறே மற்றைய இன மக்களிடையேயும் ஏற்றத்தாழ்களும் சுரண்டல்களும் நிலவுகின்றன.

இத்தகைய சமூக அமைப்பினை மும்மொழிக் கல்வித்திட்டம் தகர்த்தெறியுமா?

**தேசிய அரசியல் இயக்கம்**

உண்மையில், ஊழல் நிறைந்த இன்றைய சமூக அமைப்பினை அரசியல் ரீதியில் உடைத்தெறிந்து, இன-மத-மொழி-பேதமற்ற ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும். இவ்வாறான சமூகத்தை உருவாக்கும் செயற்பாட்டிலேயே ஒருமைப் பாடு இரண்டறக் கலந்திருக்கும் ஆதலில், பிரச்சினைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் வேறெங்கோ இருக்கின்றன. அது தேசிய ரீதியிலான ஓர் அரசியல், தொழிற்சங்க இயக் கத்தினாலே தான் சாதிக்கப்படக்கூடியது என் பதை மட்டும் இங்கு வலியுறுத்திக் குறிப்பிட வேண்டும்.

இந்நிலையில் மும்மொழிக் கல்வித் திட்டம் பிரச்சினையத் தீர்க்கும் எனக் கருது வது வெறும் கனவு என்பது மட்டுமல்ல, அதனை முன்வைப்பதும் ஒரு கண்துடைப் பாகவே இருக்கமுடியும்.

இத்திட்டம், சிங்கள-தமிழ் ஆகிய இருமொழிகளிலும் ஓரளவு தேர்ச்சி பெற்றுத் தராதரப்பத்திரம் பெற்றவரும், வேலை யற்றிருப்போருமாகிய படித்த ஒரு தொகை வாலிபருக்கு வேலை வழங்க உதவும். அரசியலை மேலெழுந்தவாரியாக நோக்கு வோருக்கு இது குறித்த பிரச்சினைக்கு ஓரளவு தீர்வுபோலத் தோன்றுமேயன்றி உண்மை யான தீர்வாகாது.

ஆயினும் இனப்பிரச்சனை தீர்ந்ததொரு நிலைவருமாயின் , மும்மொழிக் கல்வித் திட்டம் சிங்கள-தமிழ் மக்களிடையே ஏற்படும் ஐக்கியத்தை மேலும் உறுதிப்படுத்த உதவும் என்பதை ஏற்றுக்கொள்ள எவரும் தயங்க வேண்டியதில்லை.

எல்லோரும் இந்நாட்டு மன்னர்: நாம் எல்லோரும் சரி நிகர் சமாகமாக வாழ்வழித்த நாட்டிலே" என்ற நிலையை ஏற்படுத்த உதவும் ஒரு திட்டமே மெய்யான தீர்வைத்தரக் கூடியதாகும்.

(நன்றி: ஈழநாடு)

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் ஹண்டி பேரின்பநாயகம்

**(முன்னாள் தலைவர் NPTA, ACUT)**

நேர்காணல்: ஆ.தீபன் திலீசன்

1920காலப் பகுதிகளில் யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த கல்விமானாகவும் முற்போக்கு சிந்தனையாளராகவும் விளங்கிய அமரர் ஹண்டி பேரின்பநாயகம் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் (NPTA) தலைவராகவும் அதன்பின்னர் 1950களில் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் (ACTU) தலைவராகவும் இருந்துள்ளார். இவருடைய காலப்பகுதியில் NPTA, ACUT யின் செயற்பாடுகள் மிகப்பெரிய முன்னேற்றம் கண்டிருந்தது. 1920களின் நடுப்பகுதியில் இருந்த யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் ஸ்பாகர்களில் இவரும் ஒருவராவர்.

இவர் 1977ம் ஆண்டு இயற்கை எய்தினார். இவரது செயற்பாடுகள் தொடர்பாக அமெரிக்காவில் வசிக்கும் இவரது சிரேஷ்ட புத்திரன் பேராசிரியர் சித்தார்த்தன் பேரின்பநாயகத்துடன் தொடர்புகொண்டோம். இவர் 40 வருடங்களுக்கு மேலாக மெய்யியல் துறையில் பேராசிரியராக கடமையாற்றியுள்ளார் 1950களில் இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். 1958 இல் NPTA யில் உறுப்பினராகவும் இருந்துள்ளார். 1962 அமெரிக்கா சென்றார். அவர் 80 வயது முதிர்ந்த நிலையிலும் Skype மூலமாக என்னுடன் தொடர்பு கொண்டு தனது கருத்துக்களைப் பரிமாறினார்.

மிக இயல்பான புன்னகையுடன் எனது வினாக்களுக்கு மகிழ்ச்சியாக விடையளித்தார்.

இந்த நேர்காணலை இங்கு தருகின்றேன்.

**கே:**

*உங்கள் தந்தையார் அமரர் ஹன்டி பேரின்பநாயகம் ஒரு முற்போக்குவாதியாகவும் தொழிற்சங்க வாதியாகவும் செயற்பட்டுள்ளார். அவரைப்பற்றிய அறிமுகத்தை தருவீர்களா?*

**பதில்:**

ஆம், எனது தந்தையார் 1899 மார்ச் 28ம் திகதி பிறந்தார். அவர் தனது கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடர்ந்தார். பின்னர் 1922 காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்றார். அக்காலத்தில் அங்கு கற்ற ஏனையவர்கள் மேலைத்தேய கலாச்சாரமாகிய கோட், சூட், ரை கட்டி வந்த வேளை எனது தந்தையாரும், B.W. அதிகார ஆகிய இருவர் மட்டுமே நசனல் அணிந்து செல்வார்கள் இதனை எனது தந்தையார் அடிக்கடி நினைவு கூர்வதுண்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றினார். 1944ம் ஆண்டு ஆசிரியப் பணியிலிருந்து 4 ஆண்டுகள் சட்டத்தரணியாக செயற்பட்டார். பின்பு கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராக செயற்பட்டார். ACUT யின் தலைவராகவும் இருந்துள்ளார். இவரே வடமாகாண அதிபர் சங்கத்தின் (NPPA) ஸ்தாபகரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே:**

*உங்கள் தந்தையார் NPTA யில் உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்துள்ளார். இவரது செயற்பாடுகள் தொடர்பாகக் கூறமுடியுமா?*

**பதில்:**

எனது தந்தையாருடன் இணைந்து தம்பையா, நேசையா, தம்பர், C.S. பொன்னுத்துரை, K.V.M. மயில்வாகனம் போன்றவர்கள் NPTA யில் மிகுந்த ஈடுபாடுடன் செயற்பட்டிருந்தனர். 1938ல் ஜப்பான் ரோக்கியோ நகரில் சர்வதேச மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் N.P.T.A. சார்பாக எனது தந்தையார் உட்பட கு.நேசையா மற்றும் இருவர் கப்பலில் போய் வந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. இது தொடர்பாக எனது தந்தையாரால் பல கட்டுரைகளும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. விசேடமாக அக்காலத்தில் ACUT யால் வெளியிடப்பட்டு வந்த Ceylon Teachers எனும் பத்திரிகையில் கட்டுரைகள் வெளிவந்தன. ஆங்கிலம், தமிழ், லத்தீன் ஆகிய மொழிகளில் தந்தையார் தேர்ச்சி பெற்றிருந்தார். அதனால் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல கட்டுரைகளை எழுதியிருந்தார்.

**கே:**

*1956ல் தனிச்சிங்களச்சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் விளைவாக தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டிருந்தது. இக்காலப்பகுதிகளில் NPTA யின் செயற்பாடுகள் எவ்வாறு இருந்தன?.*

**பதில்:**

அப்போதைய காலத்தில் அகில இலங்கை ஆசிரியர் சங்கம் (A.C.U.T) மிகப்பலமான நிலையில் இருந்தது. அதில் வடமாகாண ஆசிரியர் சங்கம் (NPTA) கிளையாக செயற்பட்டது. A.C.U.T யில் தமிழ் ஆசிரியர்களே கூடுதலாக அங்கத்துவம் பெற்றிருந்தனர். நேசையா போன்றவர்கள் இடது சாரிக் கொள்கைகளை கொண்டிருந்ததனால் LLSP (லங்கா சமசமாஜக் கட்சி)யின் தொடர்பு இருந்தது.

இதனால் அவர்களுடன் இணைந்து தமிழ், சிங்களம் ஆகிய மொழிகள் சமமொழியாக்கப்படவேண்டும் என மிகப் பலமாக குரல் கொடுத்தனர்.

**கே:**

*இது தவிர NPTA யின் போராட்டங்கள் வேறு உங்களுக்கு நினைவிருக்கிறதா?*

1958 - 62 வரையான காலப்பகுதிகளில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தனிச்சிங்கள மொழிக் கொள்கைகளுக்கெதிராக பல கண்டன அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

1950ம் ஆண்டு இலங்கை வரலாற்றிலேயே மிகப்பெரிய ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது. இது ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்புக்கான ஊர்வலமாக அமைந்தது. ஏறத்தாள 3000க்கும் அதிகமான ஆசிரியர்கள் இதில் பங்கு கொண்டிருந்தனர்.

இதன் தாக்கம் காரணமாக - இந்து சாசனம் Hindu Organ பத்திரிகைகள் இப்போராட்டத்தை விமர்சித்தன. ஆசிரியர்கள் தொழிலாளிகளைப் போன்று தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபடக்கூடாது என அப்பத்திரிகை விமர்சித்திருந்தன.

ஆனால், அநீதிகளுக்கு எதிராக ஆசிரியர்களும் போராடுவர் என்னும் செய்தியை முதன் முதலில் இப்போராட்டம் உணர்த்தியது என நம்புகிறேன்.

அதேவேளை, 1936 காலப்பகுதியில் வெளியிடப்பட்ட தனி சிங்கள மொழி அறிக்கைகள் மற்றும் சிங்கள இனவாத அடக்குமுறைகளுக்கு எதிராகவும் பேச வேண்டிய விதத்தில் பேசினார்கள். சிங்கள தேசியவாதம் கல்வியிலும் தாக்கம் செலுத்தியது.

தனிச்சிங்கள சட்டத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலும் சிங்களம் கற்பிக்கப்பட்டு வந்தது. சிங்கள ஆசிரியர்கள் பணியாற்றியிருந்தனர். ஆனால், தனிச்சிங்களச் சட்டம் அறிமுகப்படுத்தியமையால் சிங்களம் கற்பதை தமிழர்கள் புறக்கணித்தனர். "சிங்கள மொழியை நாமாக கற்போம் திணிக்க நினைத்தால் எதிர்ப்போம்" எனும் கொள்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால் சிங்கள ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்மாற்றம் பெற்றுச் சென்றனர்.

**கே:**

*அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ACUT கிளையாக NPTA செயற்பட்டு வந்தது. ACUT யின் இணைந்த செயற்பாடு என்னவாக இருந்தது?*

**ப:**

தென்னிலங்கையின் பெரிய பாடசாலைகளான புனித தோமஸ் கல்லூரி, றோயல் கல்லூரி, திரித்தவ கல்லூரி ஆசிரியர்கள் ACUT அங்கத்தவர்களாக அப்போது இருக்கவில்லை. ஏனெனில் தம்மை கௌரவமானவார்களாக அவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால், யாழ்ப்பாண பாடசாலைகளே ACUT யில் அதிகமாக இருந்தது. ACUT யின் தலைவர்களாக 1950களில் எனது தந்தையார் அமரர் ஹன்டி பேரின்பநாயகம், 1954 களில் முஸ்லிம் இனத்தை சேர்ந்த நன்கு தமிழ் கதைக்கக்கூடிய A.M.I அசீஸ் போன்றோர் தலைவர்களாக இருந்தமை நினைவிருக்கிறது.

**கே:**

*உங்கள் தந்தை அமரர் ஹன்டி பேரின்பநாயகத்தின் இறுதிக்காலம் எவ்வாறு அமைந்திருந்தது?*

**பதில்:**

1961ல் தந்தையார் ஓய்வுபெற்று மானிப்பாயில் இருந்தார். 1977ல் காலமானார். அதற்குமுன்னர் எனது தந்தையார் இரண்டு தளங்களில் போராடினார்.

1. சிங்கள தேசியவாதத்துக்கு எதிரானது
2. தமிழ் குறுந்தேசியவாதத்துக்கு எதிரானது

இதனால் அரசியலில் இருந்து அவர் தனிமைப்படுத்தப்பட்டார்.

**கே:**

*எதற்காக அரசியலில் இருந்து தனிமைப் படுத்தப்பட்டார்?*

**ப:**

ஆம் "Politics is Art of the Possible" "அரசியல் சாத்தியமானதையே செய்யும் என்னும் அறிஞர்களின் கருத்து ஒன்று உண்டு. அதையே எனது தந்தையும் நம்பினார். சமஸ்டிமுறை இங்குள்ள நிலமைக்கு சரிவராது என்பதையும், சமஷ்டி சார்ந்தாலும் மத்திய அரசே வழி நடத்தும் என கருதினார். அவ்வேளை தமிழ் அரசியல் கட்சி தலைவர்கள் வடக்கு, கிழக்கு தனியே தமிழர்களுக்கு மட்டுமே எனவும், தமிழ் மொழி ஆட்சி செய்யப்படவேண்டும் எனவும் கூறினார்.

ஆனால், எனது தந்தையார்: தமிழர்கள் இலங்கையின் எப்பகுதியிலும் இருக்கும் உரிமை உடையவர்கள். இதனால், தமிழ், சிங்களம் நாடு முழுவதும் இருக்க வேண்டும். அதேவேளை சமஉரிமையுடன் வாழவேண்டும் என்ற கருத்து கொண்டிருந்தார். இவரது இந்தக் கொள்கையாலேயே அரசியலிலிருந்து அவர் தனிமைப்படுத்தப் பட்டார்.

**கே:**

*உங்கள் தந்தையால் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. இது யாழ்ப்பாணத்தில் உத்வேகமாக செயற்பட்டது. இது தொடர்பாக கூறமுடியுமா?.*

ஆரம்பத்தில் "மாணவர் காங்கிரஸ் யாழ்ப்பாணம்" என பெயரிடப்பட்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் 1920 களில் மத்தியில் உதயமாகியது. 1920களில் தான் காந்தி இந்தியசுதந்திர போராட்ட தலைவராக தோன்றியிருந்தார்.

இந்தியாவில் காணப்பட்ட அரசியல் உணர்வலைகளின் தாக்கம் யாழ்ப்பாணத்திலும் ஏற்பட்டிருந்தது. உண்மையில் கல்லூரியில் இடம்பெற்ற இலக்கிய விவாத, சபைகள் தான் மாணவர் காங்கிரஸின் ஆரம்ப விதைகளாகும். என எனது தந்தையார் குறிப்பிடுவார்.

காலனித்துவ ஆட்சிக்கு எதிராக இதனால் புதிய சீர்திருத்தங்களை நோக்கி யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் மிக உத்வேகமாக செயற்பட்டது.

புதிய சீர்திருத்தங்களுக்கு உதாரணமாக

1. இலங்கைக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும்.
2. கல்லூரி அதிபர் ஒரு உள்நாட்டவராக இருக்கவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மாணவர் தேசிய உடை தரித்தல் போன்ற விடயங்கள் விவாதிக்கப்பட்டன. என்றார்.

இறுதியாக, அவரின் வேலைப்பழு மற்றும் வயது முதிர்ந்த நிலையிலும் எமக்காக நேரத்தை ஒதுக்கி இயல்பான முறையில் கருத்துக்களைப் பரிமாறிய அவருக்கு நன்றியுடன் பிரியாவிடை கூறி விடைபெற்றேன்.

* * *


ஆசிரியர் குரல்
The Voice of Teachers
அங்கத்தவர்களுக்கு மட்டும்
விலை: ரூபா 2-50
1987 – இதழ் 1
இலங்கை ஆசிரியர் சங்க உத்தியோகபூர்வ ஏடு
அரசின் இன ஒழிப்பு
பொருளாதாரத் தடைக்கு எதிராக ஐக்கியப்படுக!

*1987 காலப்பகுதிகளில் வெளிவந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் வெளியிடப்பட்ட 'ஆசிரியர் குரல்' பத்திரிகை*


1980 யூலை வேலை நிறுத்தம்
22 பேருக்கு வேலை இல்லை!
ஆசிரியர் இடமாற்றம்!
கல்வி அமைச்சு தடுமாற்றம்!!
பல்கலைக்கழக மாணவர் தலைவர் இனவெறிக்கு பலி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# The Northern Educators play Their Part in Sri Lanka's Journey to Nationhood

K. Nesiah

## The Precursor of the N.P.T.A

It was about the time of the commencement of World War I in 1914 that the long suffering teachers of the North came together in the Jaffna Teachers Union. Six years later they joined with other Associations in the south to form the All Ceylon Union of Teacher 1920. Neither the Northern Association nor the A.C.U.T was anything more than an 'ad hoc' body, with a loose structure, mainly concerned with salaries and pensions. For despite the Code of 1914 which replaced 'Results' grants by 'Attendance grants, the pay of teachers was low and qualified teachers were few and far between even in the bigger schools It was therefore a step forward when the Education. Ordinance of 1920 led to the setting up of an Advisory Board of Education and between this Board and a Select Committee of the Legislative Council minimum scales of salaries for teachers were presort bed, and later embodied in the new Code of 1972 A School Teachers Pension Ordinance was placed on the statute book the same year. The prospect of Ceylonese graduates coming into the schools was further brightened by the establishment o University College in 1921.

## A New Beginning and New Objectives

It was now that streaks of a new dawn began to illuminate the Northern sky. The Indian Independence struggle under Gandhiji's leadership touched an awakening in the North The Students Congress, Jaffna (re christened the Youth Congress at its Seven in Session in April, 1931) put warmth into the country's lukewarm National movement for a cultural renaissance and political liberation. But the visit to this country of Mahatma Gandhi in 1927 on the invitation of the Students Congress, gave the movement a mass basis Did they not, still under the invitation of two teachers, dare to hoist the tricolor of yellow, red and green heralding Ceylon's Independence at a mass rally on the Jaffna Esplanade of April New Year's Day, 1932? Another of shoot of the movement was the Ceylon Historical Association Jaffna formed



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

earlier by a group of teachers and students, revived now, which advocated the study of Ceylon and World History, rather than that of Britain and her neighbours and drew up a syllabus, which led to the Education Department following this lead. The Co- operative Movement too ran deep root, in the North owing to teacher leadership. So it was in the fitness of things when, after an year's preparatory work, the Jaffna Teachers' Union met on February I 1930 to reconstitute itself into the Northern Province Teachers Association a federal body composed of six area Associations on the model of N U T of England; the N P T A thus constituted held its inaugural session on September 27, 1930. The suggestion became irresistible that the A C U T should also be re-structured on that model and the N P T A was commissioned by the 1930 Annual Meeting of the Union to draft the new constitution. Adopted in 1933, the new constitution gave a fresh start to the Union as a grand national federal body, built layer by layer from below. How quickly the N P T A itself got on its feet may be gathered from the fact that it took the initiative in organizing a Ceylon delegation to the All-Asia Educational Conference, Banaras, December 1930 It was in India that was astir following Gandhiji's Salt March and the arrest of hundreds of Indian leaders, after a three weeks tour of the country the delegates returned with renewed inspiration.

What we sough to build in the country as in the North was not just a Trade Union. But a great profession which in turn would be the instrument of a new social order. The very framework of the N P T A bore this out There were three rates of subscriptions depending on salary ranges but the rights of all members were the same We worked to raise the salary scales of the weaker sections and in particular to do away with the 'B' scales which operated in the North no less, we sought to raise the qualifications and status of teachers And on our own, we arranged for lecture courses for them and began to build up a library of educational books. Not least, we left no doubt in the minds of the Department that the organized profession had to be consulted in a wide range of matters.

## The Harvest of the Fortes

The seed time of the 30's resulted in rich harvest in the 40's for , it was while Sri Lanka was hastening towards Independence that there were significant advances that prepared the country in some measure for her new responsibilities. The University College was transformed into the University of Ceylon in 1952. A network of central schools set up in neglected urban areas and in the country sid opened up opportunities to sectors of the population to whom higher education was hitherto denied free education and the gradual shift to the mother tongue medium widened those opportunities. When the Cambridge senior examination ceased tp be held after 1942 and the London Matriculation after 1943 and Matriculation exemption was granted to those reaching a certain standard in the Ceylon Senior School Certificate



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

examination, it was a further step in decolonization in the educational sphere right from 1930 the N P T A had been pursuing in the matter of examination reform. It was partly in pursuance of these representations that the J S C ceased to be Central Departmental Examination from 1941, and the N P T A set a new pattern by holding a regional examination form 1942 in close co- operation with the schools – an example which the Colombo Teachers Association followed two years later. All together we sought to help to rear those structures and goals relevant to the needs of an emerging free nation.

But the cause more than any other that the N.P.T.A fought for (alongside) the Union and progressive national leaders) was to make the two tongues that have accompanied our people in their eventful sojourn in this dear land ' the languages of education , civic life and cultural communication. It was then a battle against heavy odds. The first Ceyloness Director of Education had just before he assumed office written a research report published as supplement to the Ceylon Journal of Education, to prove the superiority of English education over education in the mother tongue medium. Not long before he had published a paper advocating English as the country's "adopted language". A Report on H.S. Perera's Report, published by the Kesari, Chunnakam(1941) was the North's and the Union's devastating rejoinder. Four years later, my Mother-Tongue in Education found a publisher It is to these that Prof.J.E.Jayasuriya apparently refers in his book on Education. "Support also came from a few educationalists especially from the Northern Province, Mr.K .Nesiah who wrote a book entitles the Mother-tongue in Education being prominent among them, some time later, Dr.D.P.Malalasekera and Mr.L.H.Methhananda entered the fray and championed the cause of the national language with grim determination" In an earlier generation, perhaps of men like Arunachalam. "At a time when the Sinhalese were Sinhala and Tamil was fought by Tamil leaders helped in some measure by Englishmen like the Rev.A.G.Fraser"

## On the Threshold of Independence

It is something for satisfaction that at the Silver Jubiles of the A.C.U.T Kandy, 1945(Over which I had the privilege of presiding) a great son of the North and one who may be called Mahatma Gandhi's educational conscience Shri E.W.Ariyanayakam placed before the country the claims of work centred education. The educational reforms of 25 years later have surely caught within them elements of the basic philosophy of the learning society.

The Education Ordinance of 1947, together with the main Ordinance of 1939 which is amended, remains the substantive law of education. The educators from the North, along with their colleagues form the South, sought to introduce a number of provisions in their evidence before the Standing Committee, some of which were adopted but, Sri Lanka still awaits a Modern Law of Education, entirely re-written to accord with the world's present approach to learning. The full consultative process should certainly precede such re-formulation.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Achievement of the NPTA

K. Vaidiyalingam

The Northern Province Teachers' Association (NPTA) is one of the, if not the oldest teachers' Association.

Its contributions in the education field and for teachers' unity are many.

It also had the good fortune to be led, guided and moulded by such eminent and broadminded educationists like S.H.Perinpanayagam, A.E.Tamber, C.Subramaniam and others.

In this article, I would like to refer to three of its most important achievements.

## 1. Medium of Instruction

It was inevitable that with the grant of adult franchise in 1931 there would be the demand for developing the national languages. Recognizing this the NPTA was one of the first few associations to demand that mother longue should be the medium of instruction.

With the introduction of Sinhala and Tamil as the media of instruction in our schools there has been a growth in literacy and increasing demand for higher education.

However, it is unfortunate that the economic development and social reforms had not kept pace with rapid growth in literacy and demand for higher education Medium wise standardization and the educational backwardness of certain areas and of some schools even in the developed areas are a regretful reflection of this disparity.

## 2. Trade Unionism

For some time it was thought that trade unions were meant for only manual workers and that white collar workers, particularly teachers should have nothing to do with trade unionism.

However, at the Matara Annual General Meeting of its parent body, the All Ceylon Union of Teachers, the NPTA delegation made an impressive case for trade Unionism. The A G M resolved to register the ACUT as a trade union.

So much so that all teachers' associations are today Trade Unions and that they too have embarked on such trade union actions, like strikes.

### 3. Teachers' Unity

Over a century of British rule created a wide gap between those



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

education in English, on the one hand, and in the national languages on the other. The NPTA delegation had always fought for teachers' unity within the parent body.

Step by step moves were taken to achieve this objective A joint move to submit an agreed scheme for teachers' salaries, ad hoc joint efforts on specified issues All this paved the way for the creation of a Joint Council at first. Parctical activities convinced many teachers of the need for a more representative and stable organization reflecting teachers' unity.

It was this which led to the formation first of the All Ceylon Conference of Teachers' Unions, and later the present All Ceylon Federation of Teachers' Unions.

So far so good. A lot has yet to be done to further consolidate and stabilize this federation and ultimately form a single association for all teachers.

I am sure that, given the goodwill and the spirit of co-operation, the day is not far off when we shall have a single association for all teachers.

Even though it is now over six years since I have retired from teaching, I an firmly convinced that our teachers will achieve this objective in the not too distant future.

* * *

*"கடந்த இரண்டு, மூன்று வருடங் களுக்கிடையில் ஏற்பட்ட நெருக்கடிகளின் காரணமாக ஏனைய சங்கங்களில் ஏற்பட்ட முறிவுகளும் பிளவுகளும் பற்றி உங்களுக்குத் தெரியுமென நம்புகிறேன். வடமாகாண ஆசிரியர் சங்கம் ஒன்றே இப்படியான சூழ்நிலைக்கு பலியாகாது தப்பியதென்றால், அதற்குக் காரணம் அதன் சிறந்த பாரம்பரியமென்றே நான் நினைக்கின்றேன்.*

J.R.அரியரத்தினம்

வ.மா.ஆ.ச தலைமை உரை

ஆசிரியர் உலகம் - ஐப்பசி 1963



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டிய முக்கிய விடயங்கள்

ஏ.எல்.முஹம்மட் முக்தார்,
பொதுச்செயலாளர்,
இலங்கை கல்வி நிருவாக அதிகாரிகள் சங்கம்
கிழக்கு மாகாணம்

அரசாங்க சேவையில் மிகக்கூடிய எண்ணிக்கையினராக உள்ள ஆசிரியர்கள் தாம் வாழும் சமூகத்தில் மிகவும் உயர்ந்த இடத்தில் வைத்துப் பேணப்பட வேண்டிய வர்கள். இவ்வாறு சமூகத்தில் உயர்ந்த தரத்தில் பேணப்படுவதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் தனிப்பட்ட ரீதியில் மிகவும் ஒழுக்க சீலர்களாக இருத்தல் வேண்டும் என கல்வி அமைச்சும் சமூகமும் எதிர்பார்க்கிறது. ஒரு ஆசிரியர் அரச சேவைக்கு இணைக்கப்பட்ட பின்னர் தமது சேவையின் தன்மை பற்றியும் அச் சேவை எதனால் கண்கானிக்கப்படுகிறது என்பது பற்றியும் அறிந்திருக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமானதாகும்.

அந்தவகையில் பின்வரும் நிருவாக விடயங்களில் ஆசிரியர்கள் மிகவும் தெளிவான அறிவை பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1. இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு.
2. ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவை.
3. அரச ஊழியர்களுக்கான தாபனக் கோவை *பகுதி - 1, பகுதி - 2 இலுள்ள ஏற்பாடுகள்.*
4. சுயவிபரக் கோவை தொடர்பான முக்கிய தகவல்கள்.

***ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு :***

1994ம் ஆண்டு வரலாற்றில் முதன் முறையாக ஆசிரியர்களுக்கான சேவை பிரமாணக் குறிப்பு 01.01.1995 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அறிமுகப் படுத்தப்பட்டு அதுவரையில் இருந்து சகல ஆசிரியர் வகைகளும் இலங்கை ஆசிரியர் சேவை 3-II, 3- I, 2-II, 2-I, முதலாம் வகுப்பு என்றவாறு வகைப்படுத்தப்பட்டது. இப் பிரமாணக் குறிப்பு 843/4 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலமும் பின்னர் 865/3, 966/5, 975/6 இலக்க வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்டு அமுலாக்கப்பட்டது. அதன் பின்னர் 1885/38 ம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் 01.07.2008 முதல் அமுலாகும் வண்ணம் மீளவும் திருத்தப் பட்டுள்ளது. இது தொடர்பாக பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. இதே போன்று அதிபர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பு 1086/26ம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு தற்போது 01.07.2008 முதல் திருத்தப்பட்டு புதிய பிரமாணக் குறிப்பு 1885/31ம் இலக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி விசேட வர்த்தமானி மூலம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள ஆசிரியர் சேவையை மேலும் அர்த்தமுள்ள தாக்கும் வகையில் கல்வி அமைச்சு 2012/37ம் இலக்க சுற்று நிருபம் மூலம் ஆசிரியர்களுக்கான ஒழுக்கவியல் கோவை ஒன்றை முதல் தடவையாக அறிமுகப் படுத்தியுள்ளது. இதனை சகல ஆசிரியர்களும் அறிந்து கொள்ளும் நோக்கில் அது பிரசுரிக்கப்படுகிறது.

**ஆசிரியர் ஒழுக்கக் கோவை :**

ஆசிரியர் சேவையை மேலும் அர்த்தமுள்ளதாக்கும் வகையில் கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவையை 2012ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது. இது தொடர்பாக கல்வி அமைச்சு 2012/37ம் இலக்க சுற்று நிருபம் மூலம் ஒழுக்கக் கோவையை வெளியிட்டுள்ளது. அவ் ஒழுக்கக் கோவை பின்வருமாறு.

**அறிமுகம் :**

சகல பிள்ளைகளிடமும் இருக்க வேண்டிய பண்புசார் கல்வியினைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை உரிமையினைப் பாதுகாக்கக் கூடியவாறு சிறுவர் உரிமைக் கொள்கைப் பிரகடனத்திற்கேற்ப உரிய சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களது ஆளுமையை விருத்தி செய்யப் பங்களிப்புச் செய்வது சகல ஆசிரியர்களினதும் பொறுப்புக்கள் ஆகும்.

ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவர் களின் இடம்சார் பெற்றோர்கள் (Loco – Parents) என்ற சட்ட ரீதியான யோசனை களுக்கு அமைய மாணவர்களின் நலனுக் காகச் செயற்படச் சகல ஆசிரியர்களும் கட்டுப்பட்டுள்ளனர்.

தொழில்சார் உயர் தரத்தினை உறுதி செய்யக் கூடியவாறு மற்றும் பொதுமக்கள் தம்மீது காண்பிக்கும் கௌரவத்தினை உறுதிய செய்யக் கூடியவாறு தொழில்சார் ஒழுக்க நெறிகள் தம்மால் தயாரிக்கப்பட்டுப் பின்பற்றப்படுவது தொழில்சார் தரத்தின் தேவையாகக் கருதப்படுகின்றது.

தமது செயற்பாடுகளை நிறை வேற்றும் போது எடுக்கப்படும் தீர்வுகள் ஊடாகத் தாம் அனுபவிக்கும் மட்டற்ற சுயாதீனத்தினை அடிப்படையாகக் கொண்டு விழுமியம் சார் தரங்கள் தம்மால் பேணப்பட்டு அதற்கமையச் செயற்படுவது மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

சமூக முறைமையின் நேரடிப் பங்காளர்களாக ஆசிரியர்களுக்குள்ள செயற்பாட்டுப் பணிகள் மற்றும் ஆசிரிய தொழில்சார் தரத்தினை இனங்காண்பதற்கும் வழிகாட்டுவதற்கும் ஆசிரியர்களிடம் இருக்க வேண்டிய சுய வழிகாட்டல்கள் மற்றும் சுய ஒழுக்கங்களின் முக்கியத்துவத்தினை அறிமுகப் படுத்துவதற்கும், பல்வேறுபட்ட கால எல்லைக்குள் எடுக்கப்பட்ட முயற்சிகளில் அடைவு மட்டங்கள் உட்படச் சுய விழுமியங்கள், வழிகாட்டல்களுக்காகவும் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனூடாகச் சகல ஆசிரியர் களினாலும் ஏற்றுக்கொள்வதாக எதிர்பார்க்கும் தொழில்சார் சட்டங்களும், விழுமியங்களும் கட்டியெழுப் பப்பட்டுள்ளன.

ஆசிரியத்துவத்திற்காகத் தாபிக்கும் தனியான நிறுவனம் ஒன்றை இவ்விழுமிய முறைமை மற்றும் சட்ட ஒழுங்குகள் தொடர்பில் ஆசிரியர்களை மதிப்பீட்டுக் குள்ளாக்கும் மற்றும் கௌரவிக்கும் கருவியாகவும் பாடசாலை முறைமையின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்யும் உபகரணமாகவும் பயன்படுத்த முடியும்.

அங்கீகரிக்கப்பட்ட விழுமிய முறைமைச் சட்டக் கோவைகள் ஊடாக ஆசிரியர்களின் அபிமானத் தைப் பாதுகாப்பதும் அச்சட்ட ஒழுங்குகளைத் தெரிந்தே மீறுவதற்கு எதிராக ஒழுக்காற்றுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையினைத் தோற்றுவிப்பதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆசிரியர்களின் ஒழுக்க விழுமியச் செயற்பாடுகள் தொடர்பான விழுமியத் தொகுப்பு முறைமை மற்றும் சட்ட ஒழுங்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்கள், நியாயங்கள் மற்றும் வாசகங்களுக்காகவும் வழங்கப்பட்டுள்ள இலக்கங்களுக்கு அமையத் தேவையானவாறு சுருக்கமான விளக்கங்களை வழங்க முடியும்.

**1.0 உத்தியோகபூர்வ பெயர்**

இவ்வாவணத்தைப் பண்புசார் கல்வியின் நோக்கத்தினை எட்டுவதற்காக ஆசிரியர்களின் விழுமியச் செயற்பாடுகள் தொடர்பான விழுமியக் கோவைகள் மற்றும் சட்டக் கோவையாக அறிமுகப்படுத்த முடியும். எதிர்காலத்தில் இதனைக் கூட்டாக இணைந்து அல்லது தனித்தனியாகக் குறிப்பிட்டுப் பொதுவான சட்டக் கோவையாக அல்லது விழுமியக் கோவையாகக் கருதப்படும்.

**2.0 வரைவிலக்கணம்**

ஆசிரியர் என்று கருதப்படுவோர் மாணவ மாணவிகளின் கல்வி தொடர்பான பொறுப்புக்கள் கொண்ட பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறையில் உள்ள கல்விசார் உத்தியோகத்தர் களேயாவர்.

ஒழுக்கவிழுமியம் கொண்ட செயற்பாடுகள் தொடர்பான விழுமிய முறைமையாக அறிமுகப்படுத்தப்படுவது தம்மால் தமக்காக விதிக்கப்பட வேண்டிய நேர்மை, பொறுப்பு மற்றும் முன்மாதிரி, சமூகப் பொறுப்புப் போன்ற நபர்கள் ரீதியிலான ஆசிரியர்களின் சமூகம் எதிர்பார்க்கும் சிந்தனை, பொறுப்புக்கள், பழக்க வழக்கங்களாகும்.

சட்டமுறைமை என அறிமுகப்படுத்தப்படுவது சகல ஆசிரியர்களினாலும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய சட்டக் கோட்பாடுகளாகும்.

**3.0 நோக்கங்கள்**

ஆசிரியர்களுக்கான இவ்விழுமியச் செயற்பாடுகள் தொடர்பான கோவை மற்றும் சட்ட முறைமை இரண்டு நோக்கங்களைக் கொண்டமைந்துள்ளன.

i. நேர்மை, பொறுப்புணர்ச்சி, தொழில் வாண்மையுடன் முன்மாதிரியான, சமூகப் பொறுப்புணர்வுள்ள நபராகவும் ஆசிரியர்களினால் மேற்கொள்ள வேண்டிய விழுமிய தரங்கள் ஒழுக்க விழுமிய முறைமையாகச் சமர்ப்பிக்கப்படுகிறது.

ii. ஒழுக்கமிக்க செயற்பாடுகளுக்காகச் சகல ஆசிரியர்களுக்கும் பொறுப்புக்கள் வழங்கப்படும் வகையில் சட்ட முறைமை ஒன்றைச் சமர்ப்பித்தல்.

**4.0 பொது நோக்கங்கள் மற்றும் அடிப்படைத் தத்துவம்.**

பின்பற்றப்பட வேண்டிய சட்ட முறைமைகள் கொண்ட ஒழுக்க விழுமிய முறைமையினைத் தயாரிப்பதன் நோக்கமாக அமைவது பெறுமதிமிக்க தொழிலின் அங்கத்தவர் என்ற வகையில் ஆசிரியரின் கௌரவப் பெயரினைப் பாதுகாப்பதாகும். இவ்விழுமிய முறைமை மூலம் ஆசிரியர்களினால் சுயமான அடிப்படையில் தனக்கு விதித்துக்கொள்ள வேண்டிய விழுமியத் தரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளபோதிலும், இதனை இத்தரங்கள் சேவைக்கான பதவியுயர்வுகள் மற்றும் தேசிய ரீதியில் அங்கீகரிப்பதற்காகவும் மதிப்பீட்டுக்காகவும் பயன்படுத்த முடியும்.

**5.0 ஆசிரியர்களின் விழுமியம் மிக்க செயற்பாடுகள் தொடர்பான ஒழுக்க விழுமிய முறை.**

ஒழுக்க விழுமியச் செயற்பாடுகள் தொடர்பான ஆசிரிய விழுமியக்கோவை விரிவான முறையில் அமைவது தம்மால் தமக்கு விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையாகவும், பொறுப்புடனும் முன்மாதிரியாகவும், சமூகப் பொறுப்புக் கொண்டவராக ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் சிந்தனைகள், பொறுப்புக்கள் மற்றும் பழக்கவழக்கங்களாகும். இதன்போது எட்டுத்துறைகள் ஊடாக ஒழுக்க விழுமிய முறைகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

### 5.1. ஆசிரியர்கள் தனிப்பட்ட ரீதியில்.

சிறந்த நற்பழக்க வழக்கங்கள், ஒழுக்கங்கள் கொண்ட முன்மாதிரி மிக்க சமூக முன்னோடியாகச் செயற்பட வேண்டும்.

(அ) தாம் சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராக இருப்பதற்குத் தேவையான ஒழுங்குகள் பற்றி உடற்பயிற்சி மற்றும் சுத்தத்தைப் பேணுதல்.

(ஆ) சகல சந்தர்ப்பங்களிலும் ஒழுக்கம் மற்றும் விழுமியத்தைப் பாதுகாக்கக் கூடியவாறு சுத்தமாக எளிமையான முறையில் ஆடைகளை அணிந்திருக்க வேண்டும்.

(இ) போதை, புகைத்தல், வெற்றிலை சாப்பிடல் போன்ற பழக்கங்கள் மற்றும் பல்வகையான முறைகேடான செயற்பாடுகளில் தவிர்ந்திருத்தல், ஏனையோரையும் தவிர்ந்திருக்க உதவுதல்.

(ஈ) தனிப்பட்ட மற்றும் சமூகச் செயற்பாடுகள் தொடர்பான அபகீர்த்திக்கு உட்பட்டோருடனான பழக்கங்களிலிருந்து விலகியிருத்தல்.

(உ) தாம் பழகும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனையோரின் முன்னிலையில் தமது செல்வநிலை, குடும்பத்தரம் மற்றும் உயர்நிலைகளைக் கொண்டோருடனான பழக்கங்கள் தொடர்பாகப் பெருமையுடன் பேசாதிருத்தல்.

(ஊ) தமது செல்வம், குடும்பத்தரம், உயர் பதவிகள் கொண்டோருடனான நட்பு இருப்பதாகக் காண்பித்து ஏனைய ஆசிரியர்கள், மாணவர்களை அச்சத்துக்கு உட்படுத்த அல்லது அவர்களுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியவாறான செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல் மற்றும் அவ்வாறு செயற்படும் நபர்களுக்கு முன்னிலையில் கட்டுப்பாடற்ற பழக்க வழக்கங்களைக் கொண்டிருத்தல்.

(எ) தமது சொந்த வாழ்க்கை மற்றும் சமயம், அரசியல் போன்றவைகள் தொடர்பாகத் தனிப்பட்ட கருத்தினை அங்கீகரிக்க மாணவர்களை வலியுறுத்துவதில் இருந்து விலகியிருத்தல்.

(ஏ) ஏதேனும் பாடங்கள், மொழி அல்லது ஏனைய துறைகள் தொடர்பாகத் தமது விசேட இயலுமைகளை ஏனைய ஆசிரியர்களை இழிவுபடுத்துவதற்காகப் பயன்படுத்தாதிருத்தல்.

(ஐ) சிறந்த கொள்கைகள் கொண்டுள்ளோர் முன்னிலையில் தீவிரவாதக் கொள்கையினைக் கடைப்பிடிக்காது இருத்தல் மற்றும் தீவிரவாத நிலைப்பாட்டில் இருந்து சமநிலை கொண்ட நபராகச் செயற்படல்.

(ஒ) அநீதிகள், முறையற்ற ரீதியில் இழிவுபடுத்தல் மற்றும் அச்சமூட்டல் போன்றவற்றில் இருந்து தமது சகோதர ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், ஏனையோரைப் பாதுகாப்பதற்காகச் சகல சந்தர்ப்பங்களிலும் தயாராக இருத்தல்.

(ஓ) வகுப்பறை மற்றும் அதற்கு வெளியே மாணவர்களுடன் பழகும் சந்தர்ப்பங்களில் கையடக்கத் தொலைபேசிப் பயன்பாட்டினைத் தவிர்த்துக் கொள்ளல்.

(ஔ) சகல சந்தர்ப்பங்களிலும் சமூக அங்கீகாரங்களைக் கௌரவித்துப் பழக்க வழக்கங்கள் மற்றும் தனிப்பட்ட ரீதியான கௌரவத்துடன் சகல முறைகளிலும் பிள்ளைகள் மற்றும் முழுச் சமூகத்திற்கும் முன்மாதிரியாகச் செயற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஃ) மனிதர்கள் மற்றும் மிருகங்கள் தொடர்பாக அநீதிகள் இழைக்கப்படும் சந்தர்ப்பங்களில் தமது கவலையினை வெளிப்படுத்தி இயற்கையாக அல்லது மனிதனால் மேற்கொள்ளப்படும் செயற் பாடுகள் காரணமாகப் பாதிக்கப்படு வோரை இரக்கத்துடன் நோக்கி அவர்களுக்கு உதவிகளைப் புரிதல்.

**5.2 .ஆசிரியர் பெற்றோருக்குப் பதிலாக.**

"பாடசாலை மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர், மாணவர்களின் இடம்சார் பெற்றோர் என்ற சட்டரீதியான சிந்தனையைக் கருத்திற் கொள்ளல்"

(அ) சகல சந்தர்ப்பங்களிலும் பெற்றோர் மற்றும் பிள்ளைகள் தம்மீது வைத்துள்ள நம்பிக்கையினைப் பாதுகாத்தல் மற்றும் பெற்றோர் பாதுகாவலர்கள் தொடர்பில் பிள்ளையின் நம்பகத் தன்மையினை உறுதி செய்யக்கூடியவாறு செயற்படல்.

(ஆ) குலம், நம்பிக்கை, ஆண்-பெண் பால், சமூக நிலைமைகள், சமயம், மொழி, பிறப்பிடம் ஆகிய காரணிகளைக் கருத்திற்கொள்ளாது சகல மாணவர் களுக்கும் நியாயமாகவும் பக்கச்சார்பற்ற அன்பினையும், கருணை, பாதுகாப் பினையும் வழங்கல்.

(இ) தமது மாணவர்களைத் தமது பிள்ளைகள் போன்று அழைத்தல்.

(ஈ) மாணவர்களுக்கு இருக்கக்கூடிய விசேட தேவைகள், பிரச்சினைகள் தொடர்பில் விழிப்புடன் இருத்தல் மற்றும் அவ்வாறான மாணவர்களுக்குத் தேவையான வசதிகளையும், நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**5.3 ஆசிரியர் அறிவு வழங்குபவர், திறமை மற்றும் சிறந்த மனப்பாங்கு விருத்தியாளராக.**

அறிவினை வழங்குதல், திறமை மற்றும் சிறந்த சிந்தனையை விருத்தி செய்தலை ஆசிரியரின் அடிப்படைப் பொறுப்பாகக் கருதி ஆசிரியர் கீழ்க்குறிப்பிட்டவாறு செயற்படல் வேண்டும்.

(அ) ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைப் பிரகடனம் (1989) இற்கமைய சிறுவர்களிடம் இருக்க வேண்டிய உரிமைகளை (விசேடமாகக் கல்வி உட்பட) உறுதிப்படுத்தக்கூடியவாறான செயற்பாடுகள்.

(ஆ) சகல சந்தர்ப்பங்களிலும் சிறந்த தயாரிப்புக்களுடனும் கூடியதாகப் பொறுப்புக்களை நிறைவேற்றல்.

(இ) வழங்கப்படும் அறிவு சரியானது என்றும் பொருத்தமானது என்றும் மாணவர் களுக்கு உரியது என்றும் உறுதிப்ப டுத்தல்.

(ஈ) விசேடமான கற்பித்தல் தொடர்பில் புனிதமான (Holistic) பிரவேசங் களைப் பின்பற்றல்.

(உ) கற்பித்தல், காலத்துக்குள் கேள்விகளைக் கேட்டல் மற்றும் கலந்துரையாட ஆர்வமூட்டி மாணவர்களின் விழுமியச் சிந்தனைகளை ஊக்குவிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.

(ஊ)பாடத்துக்குரிய மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளத் தேவையான மாண வர்களுக்கு அதற்கான தகவல் களைப் பெற்றுக்கொள்ளும் முறைகளைத் தெளிவுபடுத்தல் மற்றும் தம்மால் மேலதிக தகவல்களை வினவுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.

(எ) மாணவர்களைச் சுய கற்கைக்கு ஆர்வமூட்டத் தேவையான வசதிகளை வழங்குதல்.

(ஏ) மாணவர்களின் சிந்தனை விருத்தி யாளர்களாக மற்றும் அதற்காக ஆர்வமூட்டுபவராகச் செயற்படல்.

(ஐ) எச்சந்தர்ப்பத்திலும் தமது மாணவர் களிடம் நிதியினை அறவிட்டுக் கற்பிப்பதைத் தவிர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5.4 ஆசிரியர் ஆக்கத்திறன் மிக்கவராக வும் மற்றும் வழிகாட்டுநர் மற்றும் ஆலோசகராகவும்.**

ஆக்கத்திறன் மிக்கவராகவும் மற்றும் வழிகாட்டுநர், ஆலோசகராகவும் தமது பொறுப்பின் கீழ்வரும் மாணவர்களுக்காக அதியுயரிய சேவையினை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

(அ) இப்பொறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் அறிவினால் திறமையினால் மற்றும் சிறந்த சிந்தனைகளைக் கொண்டோராகச் செயற்படல்.

(ஆ) மாணவர்களிடம் இருக்க வேண்டிய பின்னடைவுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகக் கவனத்துடன் இருக்க வேண்டியதுடன் அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்கத் தேவையான நிபுணத்துவ ஆலோசனைகளை வழுங்கவும் நடவடிக்கை எடுத்தல்.

(இ) பிள்ளைகள் தொடர்பான பலவீனங்கள் அல்லது பிரச்சினைகள் தொடர்பான இரகசியத் தகவல்களை அப்பிள்ளை களின் பெற்றோர் மற்றும் சட்டரீதி யிலான பாதுகாவலர்களைத் தவிர வேறு எவருக்கும் வெளிப்படுத்தாதிருத்தல்.

(ஈ) பெற்றோருடன் நல்லுறவைப் பேணித் தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களுக்குத் தமது பிள்ளை தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தம்மை இலகுவாக அணமிப்பதற்குச் சந்தர்ப்பத்தினை வழுங்குதல்.

(உ) எச்சந்தர்ப்பத்திலும் ஆசிரியர் மாணவர் தொடர்புகளை முறையற்ற ரீதியில் பயன்படுத்தாது இருத்தல் மற்றுமு் மாணவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படும் சந்தர்ப்பங்களில் இருந்து தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

(ஊ) சகல சந்தர்ப்பங்களிலும் மாணவரின் அறிவு, திறமை மற்றும் சமூக விழுமிய விருத்திக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

**5.5 ஆசிரியர் மதிப்பீட்டாளராக.**

மதிப்பீடு மற்றும் கணிப்பீடு கற்றல்-கற்பித்தற் செயற்பாடுகளின் மிக முக்கியத் துவம் வாய்ந்த அம்சமாகக் கருதி ஆசிரியர்களினால்

(அ) தொடர்ந்தும் அதற்காகத் தேவை யான அறிவினை இற்றைப்படுத்தல் மற்றும் அதனுடன் இணைந்த அறிவு, சிந்தனை, ஆற்றல் விருத்தியினை ஏற்படுத்தல்.

(ஆ) மாணவர்களிடம் இருக்க வேண்டிய கற்றல் பின்னடைவுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் விழிப்புடன் இருந்து அவற்றுக்குத் தீர்வுகளைக் காண்பதற்குத் தேவையான நிபுணத்துவ ஆலோசனை கள் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(இ) மாணவர்கள் தொடர்பில் எதுவித பேதங்களும் இன்றித் தனிப்பட்ட அழுத்தங்கள் இன்றி நெகிழ்வுத் தன்மையுடன் மற்றும் நம்பகத்தன்மை யுடன் கட்டியெழுப்பக் கூடியவாறான மதிப்பீட்டுச் செயற்பாடுகளைச் செய்தல்.

**5.6 ஆசிரியர் தொழில்சார் உத்தி யோகத்தராக.**

அறிவு மற்றும் திறமைகளைப் பெற்றுக் கொண்டுள்ளமையினால் ஆசிரியர் தொழில் சார் உத்தியோகத்தராகக் கருதப்படுவர்.

(அ) ஆசிரியத் தொழிலுக்குப் பொருத்த மான உயர் சம்பிரதாயங்கள் மற்றும் அதி உன்னத தரத்தினைச் சகல சந்தர்ப்பங் களிலும் பாதுகாத்தல்.

(ஆ) தமது தொழில்சார் அறிவு மற்றும் திறமை களின் செல்லபடியாகும் தரத்தினைப் பேணுவதனைப் போன்று கட்டாயமாகச் சமகாலப்படுத்தவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) கற்பித்தலைத் தொழிலாகக் கருது வதன் மூலம் ஆசிரியர் சமூகத்திற்குத் தேவை யான அறிவு, திறன், மனப்பாங்குகளைக் கொண்டிருத்தல், ஆசிரியர் தமது அறிவுத் திறமைகள், சிந்தனைகளை ஏனையோருக் கிடையே பகிர்ந்து கொள்வதன் மூலம் சகல ஆசிரியர்களினதும் அறிவு, திறமை மற்றும் சிந்தனைகளை விருத்தி செய்வதற்காகவும் ஒத்துழைப்பு வழங்குவதில் தங்கியுள்ளது.

(ஈ) ஆசிரியத் தொழிலுக்குத் தேவையான தகைமை இன்மை தொழிலை அபகீர்த்திக்கு உட்படுத்தும் ஆதலால் ஆசிரியர்கள் தமக்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல் மற்றும் சகோதர ஆசிரியர்களின் சேவை முன்னேற்றத்துக்காகத் தேவையான உதவிகளை வழங்குதல்.

(உ) தேவையான தகைமைகள் மற்றும் தேர்ச்சியற்ற ஆசிரியர்களின் தரத்தினை உயர்த்துவது தொழிலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஆதலால் அவரால் தொழிற் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் வரை அவர் பதவியுயர்வினை எதிர்பார்க்காது இருத்தல் மற்றும் தகைமை கொண்டோருக்குப் பதவியுயர்வு வழங்கும் செயற்றிட்டங்களுக்கு உதவி வழங்கல்.

(ஊ) தமது தொழில் தொடர்பிலான அபிமானம் மற்றும் உணர்வுடன் செயற்படல்.

(எ) சகல மாணவர்களுக்கும் பண்புசார் கல்வி யினை வழங்குவதன் மூலம் பொதுமக்களின் நம்பிக்கையினை வெல்லுதல்.

(ஏ) சுயமான அல்லது தொழில்சார் நோக்கங்கள் பயன்களுக்காக மாணவர் சமூகத்தின் வாழ்வுக்கு அல்லது அவர்களது எதிர்காலத்திற்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளில் இருந்து தவிர்ந் திருத்தல் மற்றும் அவ்வாறான செயற்பாடு களுக்குத் துணைபோகாது இருத்தல்.

(ஐ) மாணவர்கள், ஏனைய ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், பெற்றோர் முன்னிலை யில் தம்முடன் சேவையாற்றுவோரை விமர்சிக்காது பாட மற்றும் பாட வெளிச் செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்குள் மற்றும் அதற்கு வெளியே சிறந்த ஒத்து ழைப்புடனும் கூட்டுச் செயற்பாடுகளுடனும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஒ) எதிர்வரும் ஆண்டுக்கான செயற்பாடு களுக்குத் தேவையான எழுத்து மூல அறிக்கைகள் மற்றும் வாய்மூலத் தகவல் களை உரியவாறு தமது பதிலீட்டாளருக்கு வழங்குதல்.

(ஓ) தொழில்சார் கௌரவத்திற்குப் பாதிப்புக்கள் ஏற்படுத்தக்கூடிய சம்பவங்களை உடனடியாக உரிய தொழில்சார் பொறுப்பாளர்களுக்கு அறிக்கைப்படுத்தல்.

**5.7 ஆசிரியர் முகாமைத்துவத்தின் பொறுப்பாளராக.**

(அ) தமது தொழிலுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத சட்டங்கள், உயரிய முகாமைத்துவத்தில் தமக்குள்ள பொறுப்புக்கள் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்குதல்.

(ஆ) பாடசாலை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கொள்கைகளை வகுத்தல் மற்றும் அமுல்படுத்த உதவுதல்.

(இ) முகாமைத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றல் மற்றும் பிரச்சினை களுக்குரிய சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் அமைதியான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(ஈ) தமது தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் பெறுபேறுகள் தொடர்பாகப் பரஸ்பர கௌரவத்தினை ஏற்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) சகல கடமைகளையும் உரிய பொறுப்புடன் உரிய செயற்பாடுகள் ஊடாக நியாயமாக மேற்கொள்ளல்.

## 5.8 சமூகம் மற்றும் தேசத்தின் முன்னோடியாகச் செயற்படல்.

ஆசிரியர் தொடர்ந்தும் சமூகத்தின் மற்றும் தேசத்தின் முன்னோடியாகக் கருதப்படுவதனால்,

(அ) சமூகத்தின் பிரச்சினைகளை இனங்காணுதல் மற்றும் அப்பிரச்சினைகள் ஊடாக உருவான சவால்களை எதிர்கொள்ளக்கூடியவாறான செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தித் தேசத்தை நேசிக்கக்கூடிய இளம் சந்ததியினரைச் சமூகத்திற்கு வழங்க நடவடிக்கை எடுத்தல்.

(ஆ) பல்வேறுபட்ட சமூகப்பிரிவுகள், சமய மற்றும் மொழிப் பிரிவுகளுக்கு இடையிலான சமாதானத்தினைக் கட்டியெழுப்பக் கூடியவாறு மாணவர்களிடம் சிறந்த பண்புகள் மற்றும் விழுமியங்களை விருத்தி செய்து தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(இ) தமது பாடசாலைக்கு, சமூகத்துக்கு, நாட்டுக்கு மற்றும் தேசத்துக்கு மனப்பூர்வமாகச் செயலாற்றுவதுடன் மாணவர்களையும் அவ்வழிக்கு இட்டுச் செல்லல்.

## 6.0 சட்ட ஒழுங்கு விதிமுறைகள்.

இவ்வொழுக்க விழுமியங்கள் முறைமை சகலரினாலும் பின்பற்றப்பட வேண்டியதுடன் தேவையான ஆலோசனைகளைத் தவறவிடுவோருக்கு எதிராக ஒழுக்காற்றுச் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியவாறு சட்ட முறைமையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இச்சட்ட முறைமையில் கட்டளைகள் தொடர்பான செயற்பாடுகளின் போது அதற்கு வழங்கப்பட்டுள்ள இலக்கத்தினைக் குறிப்பிடல் வேண்டும்.

மாணவர்கள், ஆசிரியர்களினால் பின்பற்ற வேண்டிய விழுமிய முறைமையுள் நேர்மையுடன், பொறுப்புடன் தொழில்சார் தரத்துடன் முன்மாதிரியாகச் சமூகப் பொறுப்புக் கொண்டோராக ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கும் சிந்தனைகள், அங்கீகாரங்கள், பழக்க வழக்கங்கள் உள்ளடங்கியுள்ளன. இலகுவான செயற்பாடுகளுக்காக பல் வேறுபட்ட தொனிப்பொருளின் கீழ் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஒரு தொனிப் பொருளுக்கு மாத்திரம் வரையறுக்கப் பட்டதல்ல.

## 6.1 ஆசிரியர் தனிநபர் என்ற அடிப்படையில்.

சிறந்த பழக்கவழக்கங்கள், ஒழுக்கங்கள் மற்றும் விழுமியங்கள் கொண்டவராக ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கும் சமூக அபிலாசைகளுக்கு அமைய அவர் கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டளைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(அ) மது விற்பனை நிலையங்கள், சூதாட்டங்கள் இடம்பெறும் அபகீர்த்திக்கு உட்பட்ட இடங்களில் நடமாடக்கூடாது.

(ஆ) சூதாட்டம், போதை, புகைத்தல் ஆகிய பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டவராக அபகீர்த்திக்கு உட்பட்ட வகையில் செயற்படக்கூடாது.

(இ) சகல சந்தர்ப்பங்களிலும் நேர்மையான செயற்பாடுகள் மற்றும் உண்மையைக் கூறவும் கட்டுப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) வட்டிக்கு நிதி வழங்குதல், உடற் சுகாதாரத்திற்கு மற்றும் சமூக நலனுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடு களில் ஈடுபடாதிருத்தல்.

(உ) மோதல்களைத் தவிர்த்தல், மனித உரிமை, சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகள் தொடர்பிலான மூலாம்சங்களைப் பின்பற்ற வேண்டியதுடன் சிறுவர்களை வேலைக்கமர்த் தல், அவர்களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தல் போன்ற முறைகேடான செயற் பாடுகளில் ஈடபடக்கூடாது என்பதுடன் அவ் வாறான செயற்பாடுகளுக்குத் துணை போகவும் கூடாது.

**6.2 ஆசிரியர் பெற்றோருக்குப் பதிலாக.**

பாடசாலை மாணவர்கள் தொடர்பில் பெற்றோரின் இடத்தில் ஆசிரியரும் கருதப் படுவதனால் ஆசிரியர் சகல சந்தர்ப்பங்களிலும்

(அ) மாணவர் ஒருவர் அல்லது ஒரு குழுவினருக்கு விசேட நபராக இருக்கக்டாது என்பதுடன் எதுவித பேதங்களும் இன்றி சம நியாயத்துடன் சகல பிள்ளைகளையும் கருத வேண்டியதுடன் மேலதிகமாகக் கவனம் செலுத்த வேண்டியவருக்காக விசேட கவனம் செலுத்தவும் வேண்டும்.

**6.3 ஆசிரியர் அறிவினை வழங்கு பவராகத் திறமை மற்றும் சிந்தனை ஆற்றல் கொண்டவராக.**

அறிவினை ஊட்டுதல், சிந்தனை மற்றும் திறமை விருத்தியினை தமது அடிப்படைப் பொறுப்புக்களாகக் கருதிக் கீழ்க் குறிப்பிடப் பட்டுபவற்றை கவனத்துடன் மேற்கொள்ள ஆசிரியர்கள் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(அ) தமது பொறுப்புக்களை நிறைவேற்றச் சிறந்த முறையில் தயாராக இருத்தல்.

(ஆ) வழங்கப்படும் அறிவு, திறமை, மனப்பாங்கு சரியானது என்றும் உரியதானது என்றும் பயன்படுத்தும் முறைகள், மாணவ மாணவிகளின் தன்மைக்கு அமையப் பொருத்தமானது என்றும் உறுதிப்படுத்தல்.

(இ) பாடசாலையினைப் போன்று பாட சாலைக்கு வெளியேயும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக முழுமையாக உறுதிப்படுத்தல்.

(ஈ) மேலதிக தகவல்கள் மற்றும் மேலதிக தகவல்களை வழங்கும் முறைகளை இனங்காண்பதற்கு எதிர்பார்க்கும் மாணவ மாணவிகள் தம்மிடம் அச்சமின்றி வருவதற்குத் தேவையான சந்தர்ப்பத்தினை வழங்குதல்.

(உ) நேரடியாக அல்லது மறைமுகமாக தமது பாடங்களுக்கு அல்லது பாடத்தில் உள்ளடக்க வேண்டிய விடயங்கள், மாணவர் ஒழுக்கம் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளைத் தவிர ஏனைய பயனற்ற விடயங்கள் குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடுவதில் இருந்து தவிர்ந்திருத்தல்.

**6.4 ஆசிரியர் ஆக்கத்திறன்மிக்க வழி காட்டுநர் மற்றும் ஆலோசகராக இருத்தல்.**

தமது பொறுப்பிலுள்ள மாணவர் களின் வழிகாட்டுநர் மற்றும் ஆலோசகராக அதியுயரிய பணிகளை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டி ஏற்படும் என்பதனைக் கருத்திற் கொண்டு

(அ) தமது மாணவரின் ஆத்ம அபி மானத்துக்கும் மற்றும் ஆத்ம கௌரவத் திற்கும் பாதிப்புக்கள் ஏற்படுத்தக் கூடிய அவர்களிடையே ஏற்படும் எதிர்மறையான சிந்தனைகள் மற்றும் வெளிப்பாடுகளை வெளியிடச் சந்தர்ப்பங்கள் வழங்காதிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6.5 ஆசிரியர் மதிப்பீட்டாளராக

மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் மேற்பார்வையைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாகக் கருத்திற்கொள்ளல்.

தம்மால் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள் மற்றும் மேற்பார்வைகளை நியாயமாகவும், பக்கச் சார்பின்றியும் உண்மையாகவும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

### 6.6 ஆசிரியர் வாண்மைமிக்கவராக

தமக்கு உத்தரவிடப்படும் மற்றும் தம்மால் பின்பற்றப்படும் உயரிய பண்புகளுக்கு அமைய ஆசிரியத் தொழிலின் கௌரவம் தங்கியிருப்பதனைக் கருத்திற் கொண்டு,

பதவியுயர்வின் போது தமக்கு அநீதி ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும் வேளையிலும் கூடத் தமது உரிமையினை மாத்திரம் சமர்ப்பித்து தமது தொழிலுக்குப் பொருத்தமற்ற விடயங்களில் ஈடுபடாது இருத்தல் வேண்டும்.

ஆசிரியத் தொழிலின் கௌரவம் தங்கியிருப்பது சகல ஆசிரியர்களினாலும் தொழில் விழுமியங்களைப் பின்பற்றுவதனைக் கருத்திற் கொண்டு, தமது தொழில்சார் அபிமானத்திற்குப் பங்கம் ஏற்படாதவாறு செயற்படுவதன் மூலமாகும்.

### 6.7 ஆசிரியர் முகாமைத்துவத்தின் பொறுப்பாளராக

நிர்வாக ஒழுங்கு விதிகள், உயரிய முகாமைத்துவம் தொடர்பில் தமக்குள்ள பொறுப்புக்கள் குறித்து சிறந்த அறிவினைப் பெற்று அம்முகாமைத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றல் மற்றும் பிரச்சினைகளுக்குரிய சந்தர்ப்பங்களில் அவை தொடர்பில் விரிவான அடிப்படையில் அமைதியாக வினவுதல்.

தமது தொழில்சார் கௌரவத்தினைப் பாதுகாக்கக் கூடியவாறு தமது நிறுவனத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற் கொள்ளல்.

### 6.8 சமூகம் மற்றும் தேசத்தின் முன்னோடியாக

ஆசிரியர் சமூகம் மற்றும் தேசத்தின் முன்னோடியாக மிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை நிறைவேற்றுவதாகக் கருதி, தமது பாடசாலைக்கு, சமூகத்துக்கு, நாட்டுக்கு, தேசத்தின் மீது பற்றுள்ளவராக இருக்க வேண்டியதுடன் அவ்வாறான மாணவர் பரம்பரையினையும் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்தல்.

தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய வாறு மாணவர்களிடையே சிறந்த சிந்தனைகள், விழுமியங்களை விருத்தி செய்தல். சமூகப் பிரச்சினைகளை இனங் கண்டு அப்பிரச்சினைகள் ஊடாக உருவாக்கப்பட்ட சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வாறான செயற்பாடுகளில் ஈடுபடல் மற்றும் மாணவர்களையும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.

## அரச தாபனவிதிக் கோவை

அரச துறையில் சேர்த்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு அரச ஊழியரும் அரச தாபன விதிக்கோவையின் 1ம் தொகுதி, 2ம் தொகுதி என்பன பற்றி அறிந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 1ம் தொகுதி நிருவாக நடவடிக்கைகளையும் 2ம் தொகுதி ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்துகிறது. பெரும்பாலான ஆசிரியர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான விடயங்கள் தெளிவற்றவையாக உள்ளன. இதனை தெளிவுபடுத்தும் விதத்தில் 2ம் தொகுதியில் குறிப்பிடப்பட்ட அரச ஊழியர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் இவ் அத்தியாயத்தில் தெளிவுபடுத்தப்படுகிறது.

அரச ஊழியர் ஒருவர் தனிப்பட்ட வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் திருப்திகரமான நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது மீறப்படுகின்றபோது தாபனக்கோவை ஏற்பாடுகளுக்கமைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்கள ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதனை ஒழுக்காற்று நடவடிக்கை என அழைக்கப் படுகிறது. அரச ஊழியர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை தாபனக்கோவை 2ம் பகுதியின் XLVIII ம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்படுகிறது.

ஒழுக்காற்று நடவடிக்கையை பொறுத்தமட்டில் மாகாண அரச சேவை அதிகாரிகளுக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவும், மத்திய அரச சேவை அதிகாரிகளை பொறுத்தமட்டில் பொதுச் சேவை ஆணைக்குழுவும் பொறுப்புடையவை யாகும். இதனை காலத்துக்குக் காலம் மேற்படி ஆணைக்குழு திணைக்களத் தலைவர் களுக்கு கையளிக்கும். மாகாண அரச சேவையை பொறுத்தமட்டில் மாகாண ஆளுனரே ஒழுக்காற்று நடவடிக்கைக்கு பொறுப்பானவர் ஆவார்.

அரச ஊழியர் ஒருவருக்கு எதிராக ஏதாயினும் பாரதூரமான முறைப்பாடு கிடைக்குமாயின் திணைக்கள, நிறுவனத் தலைவர்களினால் ஆரம்ப புலனாய்வு ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இப்புலனாய்வை மேற்கொள்வதற்காக ஒருவரையோ அன்று ஒரு குழுவையோ நியமிக்க வேண்டும். இக்குழுவிற்கு குறிப்பிட்ட கால அவகாசத்தை வழங்க வேண்டும் என 13 : 2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரம்ப புலனாய்வை மேற்கொண்ட பின் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் துர்நடத்தையில் ஒரு உத்தியோகத்தர் ஈடுபட்டுள்ளமை மேலோட்ட மாக தெரியவரின் குற்றப்பத்திரமொன்றை வழங்கி முறையான விசாரணையை முன்னெடுக்க வேண்டும். இது விதி 14 : 2ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் நோக்கில் குற்றப்பத்திரம் வழங்கப்பட்டு அது தொடர்பான இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் வரை குற்றம் சாட்டப்பட்ட அலுவலரின் சம்பள ஏற்றங்கள், பதவி உயர்வுகள், புலமைப் பரிசில், கல்வி விடுமுறை, கடன்கள் உள்ளிட்ட அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும். இதுபற்றி 14 : 12ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு ஒழுக்காற்று அதிகாரி விசாரணை அறிக்கையை மிகவும் நிதானமாக பரிசீலனை செய்து தாமதமின்றி தனது ஒழுக்காற்று கட்டளையை விதிப்பது அவரின் பொறுப்பாகும். இங்கு நியாயத் தீர்ப்பை தாமதிப்பானது நியாயத்தை நிலை நாட்டத் தவறியதாக அமையும். (Justice delayed is Justice denied) எனும் தத்துவத்தை கவனத்திற் கொள்ள வேண்டும்.

**தண்டனைகள் (அத்தியாயம் XLVIII 24ம் பிரிவு:**

24.1 தண்டனைகள் சிறியதென்றும் பாரதூரமானதென்றும் இரு பிரிவுகளாக அமைகின்றன. இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குற்றங்களுக்கும் அதற்குச் சமமான குற்றங்களுக்கும் சிறிய தண்டனைகள் ஏற்புடையதாகும். முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குற்றங்க ளுக்கும் அத்துடன் சமமான குற்றங்களுக்கும் பாரதூரமான தண்டனைகள் ஏற்புடைய தாகும்.

24.2 சிறிய தண்டனைகள் :

24.2.1 கண்டித்தல் (எச்சரிக்கை செய்தல் அல்லது கடுமையாக எச்சரிக்கை செய்தல் தண்டனையாகாது)

24.2.2 கடுமையாகக் கண்டித்தல்.

24.2.3 குற்றங்குறை தெரிவித்தல்.

24.2.4 ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு வேதனவேற்றங்களை இடை நிறுத்தம் செய்தல்.

24.2.5 ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு வேதனவேற்றத்தை நிறுத்தம் செய்தல்.

24.2.6 ஒழுக்காற்றுக் காரணங்களைக் கொண்டு செய்யப்படும் இடமாற்றமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலரின் பணச்செலவில் அவரை மற்றொரு இடத்திற்கு இடமாற்றம் செய்தல்.

24.2.7 ஒரு வாரச் சம்பளத்திற்கு மேற்படாத அபராதம்.

24.2.8 மேல்குறித்த தண்டனைகளை விட பாரதூரமானதல்லாததும் அதற்குச் சமமானதுமான ஒழுக்காற்று அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வேறு விதத்திலான தண்டனை.

**24.3 பாரதூரமான தண்டனைகள் :**
24.3.1 பதவி நீக்கம் செய்தல்.

24.3.2 தகுதிகாண் நிலை காலத்தில் இருக்கும் அலுவலரொருவரின் சேவையை முடிவுறுத்தல்.

24.3.3 பொது வினைத்திறமையின்மை யின் பேரில் ஓய்வு பெறவைத்தல்.

24.3.4 பதவிநீக்கத்துக்குப் பதிலாக அனு தாபத்துடனான மாற்றீடாக கட்டாயமான முறையில் ஓய்வு பெற வைத்தல்.

24.3.5 விருப்பத்துடன் ஓய்வுபெறும் வயதுக்குமேல் சேவை நீடிப்புகள் வழங் கப்படாமை.

24.3.6 சேவை முதுமுறையில் இருந்து பதவி இறக்கம் செய்தல் (அதாவது அலுவல ருக்குரிய தரத்திலிருந்து குறிப்பிட்ட தரங் களினால் பதவியிறக்கம் செய்தல்)

24.3.7 பதவிநிலையில் இருந்து தரமிறக்கம் செய்தல் (அதாவது அவருக்குரிய சேவையில் அடுத்த வகுப்புக்கு அல்லது தரத்திற்கு தரத்தை இறக்குதல்)

24.3.8 அவர் ஏதேனும் ஒரு சேவையைச் சேராமல் திணைக்களத்துடனான பதவி யொன்றை வகிக்கும் சந்தர்ப்பமாகவிருப்பின் அந்தப்பதவியை விட கீழ் மட்டத்திலான பதவியொன்றுக்கு நியமித்தல்.

24.3.9 அலுவலர் பெற்றுக்கொண்டிருந்த சம்பளத்திலிருந்து விதிக்கப்படும் சில வேதன வேற்றங்களைக் குறைத்தல்.

24.3.10 அலுவலரொருவரின் வேதன வேற்றத்தை இல்லாமல் செய்தல்.

24.3.11 குறிப்பிட்ட ஒரு காலகட்டத்திற்கு பதவி உயர்வுகளை தடுத்து வைத்திருத்தல்.

24.3.12 குறிப்பிட்ட ஒரு காலகட்டத்திற்கு பதவி உயர்வுப் பரீட்சைகள் எதற்கும் தோற்ற முடியாத வாறு தகைமையற்றவராக்கப்படல்.

24.3.13 மேற்குறிப்பிட்டுள்ள தண்டனைகளை விட பாரதூரமல்லாததும் சமமானதுமான ஒழுக்காற்று அதிகாரியானவர் தீர்மானிக்கும் மற்றொரு விதத்திலான தண்டனை.

**அரச அலுவலகர்களினால் புரியப்படக்கூடிய குற்றங்கள் பற்றிய முதலாவது அட்டவணை**

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புக்கு கீழ்ப்படிவாகாமை.

2. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அவமானப்படும் வகையில் செயற்படல் அல்லது அவ்வாறு செயற்படுவதற்கு இடமளித்தல்.

3. அரசாங்க விரோத அல்லது பயங்கரவாத அல்லது குற்றவியற் செயல்கள் தொடர்பான குற்றங்களைப் புரிதல்.

4. இலஞ்ச அல்லது ஊழற் செயல்கள் தொடர் பான குற்றங்களைப் புரிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கடமை நேரத்தின்போது அல்லது அரச அலுவலக அமைவிடத்தினுள் குடிபோதையில் இருத்தல்.

6. கடமை நேரத்தின்போது அல்லது அரச அலுவலக அமைவிடத்தினுள் நச்சுப்போதைப் பொருட்கள் பாவனை அல்லது அவற்றை தன்வசம் வைத்திருத்தல்.

7. அரசநிதியை தவறான வழியில் அல்லது முறையற்ற வழியில் உபயோகித்தல் அல்லது பிற நபரொருவர் அவ்வாறு செய்யக்கூடியதாக இடமளித்தல்.

8. அரச நிதியை தவறான வழியில் அல்லது முறையற்ற வழியில் உபயோகித்தல் அல்லது அவ்வாறு உபயோகிக் இடமளித்தல் அல்லது கவனயீனமாக அல்லது ஊக்கமின்மையாக அவை அழிந்துவிட அல்லது அவற்றின் பெறுமதி குறையக்கூடிய வகையில் நடந்துகொள்ளல்.

9. கவனயீனத்தால் அல்லது ஊக்க மின்மையால் அல்லது வேண்டுமென்று அரசாங்கத்தின் உரிமைகளுக்கு கேடு விளையும் வகையில் செயற்படுதல் அல்லது அவ்வாறு செயற்படுவதற்கு இடமளித்தல்.

10. அரச சேவை அவமானப்படும் வகை யில் செயற்படுதல்.

11. அரசுக்கு அல்லது அரச சேவைக்கு அல்லது அரச நிறுவனம் ஒன்றுக்கு கெடுதல் விளையக் கூடிய வகையில் தகவல் களை வெளியிடல் அல்லது அவற்றின் பிரதிகளை தகுந்த அதிகாரியொருவரின் அனுமதியின்றி மற்றொரு கட்சிக்கு வழங்கல் அல்லது அவ்வாறு செய்ய இடமளித்தல்.

12. அரச கருமத்துடன் சேர்ந்த ஆவணங்களில் மாற்றங்களைச் செய்தல் அல்லது விகாரமாக்குதல் அல்லது அழித்தொழித்தல் அல்லது பொய்யான ஆவணங்களைத் தயாரித்தல்.

13. அரச அலுவலர் ஒருவரின் கடமைக்கு தடையேற்படும் வகையில் நடந்து கொள்ளல் அல்லது செயற்படுதல் அல்லது அலுவலர் ஒருவரை அவமதித்தல் அல்லது உடற் துன்புறுத்தல்களை ஏற்படுத்தல் அல்லது எச்சரிக்கை செய்தல்.

14. சிரேஷ்ட அலுவலர் ஒருவர் விடுக்கும் சட்டரீதியான கட்டளைகளை செயற்படுத்த மறுத்தல் அல்லது கீழ்ப்படிவின்மை அல்லது அலட்சியப்படுத்தல்.

15. தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் நிதி ஒழுங்குவிதிகள் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் திறைசேரிச் சுற்றறிக்கை களை மீறுவது அல்லது வேண்டுமென்று அல்லது கவனயீனமாக அலட்சியப்படுத்தவது அல்லது காணாமல் போகும் வண்ணம் நடந்து கொள்ளல்.

16. மேல் காட்டப்பட்டுள்ள குற்றங்களைப் புரிதல் அல்லது புரிவதற்கு உடைந்தை யாயிருத்தல் அல்லது உதவி புரிதல் அல்லது அவ்வாறு புரிவதற்கு இடமளித்தல்.

**அரச அலுவலர்களினால் புரியப்படக்கூடிய குற்றங்கள் பற்றிய இரண்டாவது அட்டவணை**

மேலே காட்டப்பட்டுள்ள முதலாவது அட்ட வணையின் கீழ் வராததும் அலுவலர் ஒருவரின் வினைத் திறமையின்மை, திறமையின்மை, கவனயீனம், நேர்மை யின்மை, தவறான நடத்தை, ஊக்கமின்மை, ஒழுக்கக்கேடு என்பனவற்றின் கீழ் வருகின்றனவுமான வேறு குற்றங்கள்.

**31. பணித்தடை செய்தலும் அவரை கட்டாய விடுமுறையில் அனுப்புதலும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31.1 அரச அலுவலர் ஒருவர் பின்வரும் துர்நடத்தைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது முழுவதையுமோ புரிந்துள்ளார் என மேலோட்டமாகத் தென்படுமாயின் உடனடியாக செயற்படும் வண்ணம் அவரின் பணித்தடை செய்வதற்கு ஒழுக்காற்று அதிகாரியானவருக்கு அல்லது ஒழுக்காற்று அதிகாரத்துவம் வகிக்காத சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் ஒருவருக்கு அல்லது திணைக்களத்தலைவர் ஒருவருக்கு அதிகாரம் உண்டு.

31.1.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக் கீழ்ப்படியாமை.

31.1.2 இலங்கைச் சனநாயக சொசலிசக் குடியரசு அவமானப்படும் வகையில் நடந்து கொள்ளுதல் அல்லது அதற்கு இடமளித்தல்.

31.1.3 அரசுக்கு எதிரான அல்லது பயங்கர வாத அல்லது குற்றவியல் குற்றச் சாட்டுக்களின் பேரில் நீதிமன்றம் ஒன்றில் வழக்கத்தாக்கல் செய்துள்ளமை.

31.1.4 இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை.

31.1.5 அரச கடமை நேரத்தில் அல்லது அரச அலுவலக அமைவிடத்தில் மதுபோதையில் இருத்தல்.

31.1.6 அரச கடமை நேரத்தில் அல்லது அரச அலுவலக அமைவிடத்தில் நச்சு போதைப் பொருட் பாவனை அல்லது அவற்றைக் கைவசம் வைத்திருத்தல்.

31.1.7 அரசாங்க நிதியை துஷ்பிரயோகம் செய்தல் அல்லது வேறு நபரொருவர் அவ்வாறு செய்வதற்கு உடந்தையாகவிருத்தல்.

31.1.8 அரசாங்க சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தல் அல்லது கவனமின்மையால் அல்லது ஊக்கமின்மையால் அவை அழிந்து விடுவதற்கு அல்லது அவற்றின் பெறுமதி குறைதவற்கு இடமளித்தல்.

31.1.9 கவனமின்மையால் அல்லது அவதானமின்மையால் அல்லது வேண்டுமென்று அரசின் சிறப்புரிமைகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் செயற்படுதல் அல்லது அவ்வாறு செய்ய இடமளித்தல்.

31.1.10 அரசாங்க சேவை அவமானப்படும் வகையில் நடந்துகொள்ளல்.

31.1.11 அரசுக்கு அல்லது அரச சேவைக்கு அல்லது அரசு சார்ந்த நிறுவனமொன்றுக்கு கேடு விளையக்கூடிய வகையில் தகவல்களை வெளிப்படுத்துதல் அல்லது அரச ஆவணங்களை அதன் பிரதிகளைத் தகுந்த அரச அதிகாரியொருவரின் அனுமதியின்றி வெளிக்கட்சிக்காரர் களுக்கு வழங்கல் அல்லது அவ்வாறு வழங்க இடமளித்தல்.

31.1.12 உத்தியோகபூர்வ எழுத்தாவணங்களை மாற்றுவதற்கு அல்லது விகாரமாக்குவதற்கு அல்லது அழிப்பதற்கு அல்லது பொய்யான பதிவேடுகளை தயாரிப்பதற்கு முயல்தல்.

31.1.13 அரச அலுவலர் ஒருவரின் கடமைக்கு தடையேற்படும் வகையில் நடந்து கொள்ளல் அல்லது செயற்படுதல் அல்லது அரச அலுவலர் ஒருவரை அவமானப்படுத்துவதற்கு இழிவுபடுத்தவதற்கு அல்லது சரீர வதைகளுக்கு உள்ளாக அல்லது எச்சரிக்கை செய்ய முயலுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31.1.14 சிரேஷ்ட அலுவலர் ஒருவரின் சட்டப்படியான கட்டளைகளை செயற்படுத்த மறுத்தல் அல்லது அலட்சியப்படுத்தல் அல்லது கீழ்ப்படியாமை.

31.1.15 அலுவலரை தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுவதற்கு இடமளித்தால் அது அரச சேவைக்கு கேடு விளைவிக்கக்கூடியதாக அல்லது விவேகமற்றதாக அமையும் என தென்படுதல்.

## சுயவிபரக் கோவை தொடர்பான முக்கிய தகவல்கள்

அரச சேவையில் நியமனம் பெறும் ஒரு உத்தியோகத்தர் தொடர்பாக அவர் கடமையாற்றும் அலுவலகத்தில் சுயவிபரக் கோவையொன்று அவர் சார்பாகப் பேணப்படும். இதுபற்றி தாபனக் கோவையின் அத்தியாயம் VI இன் IV ம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பேணப்படும் சுயவிபரக் கோவையானது ஒரு அலுவலகத்திலிருந்து இன்னொரு அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்படும்போது இடமாற்றம் செய்யப்பட்டு 14 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட புதிய சேவை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சுயவிபரக் கோவையில் தேவையற்ற அலுவலரைப் பாதிக்கக் கூடிய எந்தவொரு ஆவணமும் கோவைப்படுத்தப்படக் கூடாது. எனினும் குற்றப் பத்திரம் ஒன்று வழங்கப்பட்டு அக் குற்றப் பத்திரத்தின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று இறுதியாக அவ் உத்தியோகத்தர் குற்றவாளியென நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவருக்கு வழங்கப்பட்ட குற்றப் பத்திரத்தையும் இணைத்து கோவையிட வேண்டும். இது பற்றி VI ம் பிரிவின் 5:3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு உத்தியோகத்தரின் சுயவிபரக் கோவையில் அடங்கியுள்ள சுயவிபரத் தாள் (History Sheet) ஒவ்வொரு 5 வருடத்திற்கு ஒருமுறையும் ஒரு பதவிநிலை உத்தியோகத்தர் முன்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும். அவ்வாறு அவர் பார்வையிட்டமை பற்றி அந்த உத்தியோகத்தரிடமிருந்து சான்றிதழொன்றைப் பெற்று கோவைப்படுத்த வேண்டும் இது பற்றி தாபனக் கோவையின் ஏஜம் அத்தியாயத்தின் 2:9:6 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஒரு உத்தியோகத்தரது சுயவிபரக் கோவையில் அடங்கியிருக்க வேண்டிய ஆவணங்கள்

1. முதல் நியமனக் கடிதம்
2. கடமையேற்றல் கடிதம்
3. பிறப்புச் சான்றிதழ்
4. பெயரில் மாற்றம் இருப்பின் அதற்கான சத்தியக் கடதாசி.
5. ஒப்பந்தப் படிவம் (பொது-160)
6. சத்தியப் பிரமாணம் (பொது-278)
7. சொத்துப் பிரகடனப் படிவம் (பொது - 261)
8. மாவட்ட சேவைத்திட்ட உறுதியுரை
9. ஆறாவது திருத்தம்.
10. ஆசிரியர் விபரப் படிவம் (275)
11. கல்விச் சான்றிதழ்கள்
    - i. O/L
    - ii. A/L
    - iii. Diploma
    - iv. Degree
12. பரீட்சைத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட கல்விச் சான்றிதழ்
13. தொழிற் தகைமை
    - i. ஆசிரியர் பயிற்சி
    - ii. PGDE
14. வரலாற்றுத் தாள் (பொது53யு)
15. நற்சாட்சிப் பத்திரம்
16. திருமணச் சான்றிதழ்
17. வைத்திய அத்தாட்சிப் பத்திரம்.
18. விதவை அநாதை ஓய்வூதிய விண்ணப்பமும் இலக்கமும்.
19. ஆசிரிய பதிவிலக்கம்.
20. சேவையில் உறுதிப்படுத்திய கடிதம்
21. பதவி உயர்வுக் கடிதம்.
22. பதவி உயர்வுக்கமைவான சம்பளமாற்றக் கடிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்களும் தீர்ப்பும்.
24. இலங்கைக்கு வெளியே செல்வதற்கான விடுமுறை விண்ணப்பமும் லீவு அனுமதிக்கப்பட்ட கடிதமும்.
25. சம்பளமற்ற லீவுகள் பெற்றிருப்பின் அது தொடர்பான விபரங்கள் அடங்கிய கடிதங்கள்.
26. வடக்கு, கிழக்கு / கிழக்கு மாகாண உள்ளீர்ப்பு.
27. 57 வயதிற்கு மேல் சேவை நீடிப்புக் கோரிய விண்ணப்பம்.
28. சேவை நீடிப்பு அனுமதிக்கப்பட்ட கடிதங்கள்.
29. இளைப்பாறுவதற்கான விண்ணப்பம்.
30. ஒய்வூதியம் அங்கீகரிக்கப்பட்ட கடிதம்.

* * *

THE

# CEYLON TEACHER

THE MONTHLY JOURNAL OF THE ALL-CEYLON UNION OF TEACHERS

*Managing Editor :* A. E. TAMBER, B.Sc. *Journal Secretary :* COSMAS W. D. ALWINES, O. ST. J.

*Annual Subscription Rs. 6-00. Post free.*

Vol. XVII No. 84 COLOMBO August **1953**

CONTENTS

Notes and Comments ... ... ... 249
The Language Problem in Ceylon by Dr. Theodore Andersson ... ... 251
The Comprehensive School at work (Holyhead) ... ... ... ... 255
Indian Secondary Education Committee Report ... ... ... ... 259
Education in Parliament ... ... 260
The Education Vote in Parliament ... 261
The School Library for Awakening Ceylon by Dr. S. R. Ranganathan ... ... 265
Branch Association Activities:—
N.P.T.A. Presidential Address ... ... 269
38th Annual General Meeting ... ... 272
C.T.A. Annual General Meeting... ... 263
C.T.A. Extracts from the 33rd Annual Report ... ... ... ... 274
Correspondence ... ... ... 276
A Model Paper in Arithmetic ... ... 277

## NOTES AND COMMENTS

**Language in Education.**

The Government stands committed to progressively enforcing the mother tongue as medium of instruction in all Schools, in terms of the policy adumbrated in the White Paper on Educational Reforms, and the Education Amendment Act of 1951. This reform is overdue in Ceylon, in view of the fact that it has been implemented to a much greater extent in all Asian countries which have regained their independence. Its validity as an educational principle is strongly supported by the International Seminar, sponsored by the UNESCO, and held at Nuwara Eliya this month. We are glad to publish a notable contribution from Dr. Theodore Andersson, Director of the Seminar entitled "The Unesco Seminar and the Language Problem in Ceylon". Dr. Andersson towards the end of the contribution, gives a summary of the "sense of the Seminar" on a number of questions relevant to the present language problems in Ceylon. We commend to our readers, both educationists and politicians, the conclusions of this International body of Educational experts and observers. We would also draw the attention of the Committee on the use of the National Languages as media of instruction in standards 6, 7, 8, to the conclusions of this Seminar. In the light of these conclusions the Committee needs to view with utmost caution, the plea for the status quo of English Schools in whole or part. The Committee must speedily complete its deliberations and suggest ways and means of overcoming the alleged difficulties in regard to shortage of books and dearth of teachers.

**Library in Education.**

We are also glad to publish an important exposition on "The School Library in

*1953 காலப்பகுதிகளில் வடமாகாண ஆசிரியர் சங்கம் (NPTA) அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தில்(ACUT), இணைந்திருந்தபோது வெளியிடப்பட்ட ஆங்கில மாதாந்த சஞ்சிகை இதன் பிரதம ஆசிரியராக ஏ.ஈ.தம்பர் அவர்கள் இருந்தார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Teachers and Job Security

**A.S.Kanagaratnam**

A worker's self respect is closely linked with his security of tenure, all the more so in the case of a white collar worker. By training and tradition he is incapable of switching over to a menial job, or adjusting himself to its social consequences. His normal reaction is to save hi s job at any cost, tamely submitting to slights and indignities and various other hardships.

When I entered the profession in 1930 we teachers had little job security. The manager of my school could dismiss me with a three month notice. He gave me the job. He could take it back and send me out on the streets jobless. Whether a manager exercised that power or not, is immaterial. The power was there and could be abused: I e . exercised to coerce obedience even in matters which had little relevance to the running of a school.

